# RESPECT WOMEN

மூலோபாயச் சுருக்கம்

## உறவைப் பேணும் திறன்கள் வலுப்படுத்தப்பட்டது

(Relationship skills strengthened)

UN WOMEN

World Health Organization

# உறவைப் பேணும் திறன்கள் வலுப்படுத்தப்பட்டது

**மூலோபாயத்தின் குறிக்கோள்:** நபர்களுக்கிடையான தொடர்பாடல், முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் பகிரப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றில் ஆண்கள், பெண்கள் மற்றும் தம்பதிகளின் திறன்களை மேம்படுத்தல்.

## விளக்கம்

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கான (VAW) ஓர் ஆபத்து காரணியாகவும் பாதுகாப்பு காரணியாகவும் உறவுகளைப் பேணும் செயன்முறை இருக்கமுடியும்.[1] சமமற்ற அதிகார பரிமாணம், கட்டுப்படுத்தும் நடத்தைகள் அல்லது துணையின் கட்டுப்படுத்துகின்ற மனப்பாங்குகள் அல்லது உறவுகளுக்குள் வன்முறையை மன்னிக்கும் நம்பிக்கைகள் போன்றவற்றால் வகைப்படுத்தப்படும் நெருங்கிய பங்காளருடனான உறவுகளில் பெண்கள் வன்முறையை அனுபவிப்பதற்கான வாய்ப்பு அதிகமாகும். மறுபுறம், தம்பதியரின் தொடர்பாடல் வலுவாக இருக்கும் உறவுகளில், இரு பங்காளர்களும் பால்நிலை சமத்துவ எண்ணங்கள் மற்றும் செலவினம் உட்பட சமமான தீர்மானம் மேற்கொள்ளலை பகிர்ந்து கொள்கின்ற உறவுகளில் பெண்கள் IVP இனை அனுபவிப்பது குறைவாகும்.[2] பல சூழ்நிலைகளில், திருமண உறவாளருடனான மோசமான உறவுகள் வன்முறையை அனுபவிப்பதற்கான முக்கிய ஆபத்து காரணியாகும்.[3]

அதிகார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பால்நிலை சமத்துவமின்மைகளை தமக்குள்ளே நிவர்த்தி செய்வதன் மூலம் பலதாரமணமுடித்த சூழ்நிலைகள் உட்பட ஒரே வீட்டில் உள்ள தம்பதிகள் மற்றும் பிற வயது வந்த குடும்ப உறுப்பினர்களுடன் பணியாற்றுவது உறவுகளை வலுப்படுத்துவதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

இந்த மூலோபாயானது, முறைசாரா நெருக்கமான உறவுகளை அடைவது கடினமானது என்பதை அங்கீகரித்தாலும் - இதில் இரகசியத்தன்மை தொடர்புறுவதுடன் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ஒப்பந்தம் எதுவும் இல்லாமையினால், அது சாத்தியமான வன்முறையாகவும் இருக்கும் என்ற அடிப்படையில் முறைசார் மற்றும் முறைசாரா தம்பதிகள் ஆகிய இருதரப்பினரையும் உள்ளடக்குகின்றது. இது குடும்பங்கள் மற்றும் இளம் பருவத்தினருடன் பணிபுரிவதற்கு (உதாரணமாக டேட்டிங் வன்முறையை நிவர்த்தி செய்வது) **Environments Made Safe மற்றும் Child Adolescent Abuse Prevented தொடர்பான RESPECT மூலோபாய சுருக்கத்தின்** கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள வினைத்திறனான அணுகுமுறைகள் பற்றிய மேலதிக வழிகாட்டுதல்களுடன் வயது வந்தோருக்கான உறவுகளில் கவனம் செலுத்துகின்றது.

## ஆபத்து மற்றும் பாதுகாப்பு காரணிகள்


இந்த மூலோபாயம் VAW க்கான பின்வரும் ஆபத்து காரணிகளை நிவர்த்தி செய்வதையும் பின்வரும் பாதுகாப்பு காரணிகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது:

| நிலை | ஆபத்துக் காரணிகள் | பாதுகாப்புக் காரணிகள் |
|---|---|---|
| **தனிநபர் நிலை** | வன்முறையை சாதாரணமாக அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மன்னிக்கும் அல்லது நியாயப்படுத்தும் நடைமுறைகள் மற்றும் மனப்பாங்குகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br>குறைவான சுய செயற்திறன் மற்றும் சுய மதிப்பு (பெண்கள்)<br>குழந்தைப் பருவ வன்முறை அனுபவம் மற்றும்.·.அல்லது குடும்பத்தில் வன்முறையின் வெளிப்பாடு (ஆண்கள் மற்றும் பெண்கள்) | பால்நிலை சமத்துவ மனப்பாங்குகள் மற்றும் நடைமுறைகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br>உயர் சுய செயற்திறன் மற்றும் சுயமதிப்பு (பெண்கள்)<br>தொடர்பாடல் மற்றும் முரண்பாட்டுத் தீர்வுகளுக்கான வன்முறையற்ற குழந்தைப் பருவ அனுபவம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) |
| **நபர்களுக்கிடையிலான நிலை** | நெருங்கிய துணை அல்லது திருமண உறவுகளில் அதிகளவான சமத்துவமின்மைகள்<br>மோசமான தொடர்பாடல், வினைத்திறனற்ற மோதல் தீர்வு மற்றும் பிரச்சினையை தீர்க்கும் திறன் | நெருங்கிய துணை மற்றும் குடும்ப உறவுகளுடனான பகிரப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் வீட்டுப் பொறுப்புகள் உள்ளிட்ட பால்நிலை சமத்துவத்தால் வகைப்படுத்தப்படல்.<br>வன்முறையின் தூண்டுதல்களைத் தணிக்க உறவுமுறைத் திறன்கள் (உதா. மோதல் தீர்வு, தொடர்பாடல்) |
| **சமுதாய நிலை** | ஆண்களுக்கான சலுகைகளை முன்னிறுத்தும் மற்றும் பெண்களின் சுயாட்சியை மட்டுப்படுத்தும் தீங்கு விளைவிக்கும் பால்நிலை விழுமியங்கள்<br>உறவுகளுக்கிடையே உள அழுத்தத்தை உருவாக்கும் அதிகளவான வறுமை மற்றும் வேலையின்மை | பல்வகைமை, பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டலை ஊக்குவித்தலுக்கான அகிம்சையை ஆதரிக்கும் விழுமியங்கள் |

### மாற்றத்தின் கோட்பாடு

பின்வரும் வரைபடம், உறவுமுறையை பலப்படுத்த முயலுகின்ற சான்று அடிப்படையிலான நடவடிக்கைகள் எவ்வாறு பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) யின் நீடித்த குறைப்புகளுக்கு வழிவகுக்கமுடியும் என்பதை விளக்குகின்ற எளிமையான மாற்றத்திற்கான கோட்பாட்டை வழங்குகின்றது. குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மேலதிக விருத்தியும் இசைவாக்கமும் தேவைப்படுகின்றது.[4]

## R: உறவைப் பேணும் திறன்கள் வலுப்படுத்தப்பட்டது



## நடவடிக்கைகளின் வகைகள்

இந்த மூலோபாயத்தின் கீழ் உள்ள நடவடிக்கைகள், தங்கள் பங்காளர்கள் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களுடன் (உதா. மாமியார்) தொடர்பாடலை மேற்கொள்வதற்கும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குமான திறன்களையும், வன்முறை தூண்டுதல்களை முகாமை செய்வதையும், நேர்மறையான வன்முறையற்ற மாற்று வழிகளைப் பின்பற்றுவதற்குமான பிரதான திறன்களை ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்குவதை நோக்காக கொண்டுள்ளது. இந்த அட்டவணை RESPECT கட்டமைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இரண்டு வகையான நடவடிக்கைகள், மற்றும் தற்போதைய சான்று[5] அடிப்படைகளின் சுருக்கமான கண்ணோட்டம் மற்றும் இவை கிடைக்கக்கூடிய உதாரண நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகிறது.

**LEGEND**

- ● **தெளிவானது,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க குறைவினை காட்டுகின்றது
- ■ **அதிக சான்றுகள் தேவை,** >1 மதிப்பீடு வன்முறை தொடர்பான நடவடிக்கைகளில் நடுத்தரமான முன்னேற்றத்தை காட்டுகின்றது
- ◆ **முரண்பாடான நிலை,** மதிப்பீடுகள் வன்முறை குறைவடைதல் தொடர்பான முடிவுகளில் முரண்பாடான முடிவுகளை காட்டுகின்றது
- □ **செயற்திறனற்ற நிலை,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் எவ்விதமான குறைவையும் காட்டவில்லை
- ▼ **சான்றுகள் இல்லை,** நடவடிக்கைகள் இன்னமும் வலுவாக மதிப்பிடப்படவில்லை
- H உலக வங்கி உயர் வருமானமுள்ள நாடுகள் (HIC)
- L உலக வங்கி நடுத்தர மற்றும் குறைந்த வருமானமுள்ள நாடுகள் (LMIC)

| நடவடிக்கையின் வகை | விபரம் | விளைதிறனுக்கான சான்றுகளின் சுருக்கம் | | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **சமத்துவ மனப்பான்மை மற்றும் உறவுகளை மேம்படுத்துவதற்காக பெண்கள் மற்றும் ஆண்களுடன் குழு அடிப்படையிலான பயிலரங்குகள்** | இந்த வகையான நடவடிக்கை, ஆரோக்கியமான, வன்முறையற்ற உறவுகளை கட்டியெழுப்புவதற்கான திறன்களுடன் ஆண்களையும் பெண்களையும் உருவாக்குவதுடன் உறவுகளில் பால்நிலைபடுத்தப்பட்ட அதிகார ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்கின்ற பங்கேற்பு பயிலரங்கு தொடர்களை உள்ளடக்கியது. இந்த நடவடிக்கைகள், மதுப்பழக்க பிரச்சினை மற்றும் சமத்துவமற்ற தீர்மானம் மேற்கொள்ளல் போன்ற ஆபத்து காரணிகளைக் குறைப்பதன் மூலமும், உறவுகளுக்குள் சிறந்த தொடர்பாடல் திறன் போன்ற பாதுகாப்பு காரணிகளை அதிகரிப்பதன் மூலமும் மேலும் பணியாற்றுகின்றன.[6]<br><br>இந்த நடவடிக்கைகள் பொதுவாக வயது மற்றும் பால்நிலை அடிப்படையில் சகாக்களின் குழுக்களுடன் அல்லது வேறுபட்ட பாலினமுடைய தம்பதிகளுடன், சில சமயங்களில் மற்ற குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியதாக பணியாற்றுகின்றது. ஆண்களும் பெண்களும் பெரும்பாலும் சமாந்தரமாக இடம் பெறும் தனி பாலின குழுக்களாக கலந்துகொள்வதுடன், சில நடவடிக்கைகள் தம்பதிகள் ஒன்றாக கலந்துகொள்வதற்கான கலப்பு-பாலின அமர்வுகளை கட்டியெழுப்புகின்றன. நடவடிக்கைகள் வன்முறையின் வரலாற்றைப் பொருட்படுத்தாமல் அனைவருடனும் பணியாற்றுகின்றன. ருவாண்டாவின் கிராமப்புறங்களில் உள்ள திருமணமான தம்பதிகள் முதல் தென்னாப்பிரிக்காவின் நகர்ப்புற சேரிகளில் உள்ள இளையவர்கள் வரை பல சூழ்நிலைகளில் அவை அமுல்படுத்தப்பட்டுள்ளன. | L<br><br>H | இந்த வகையான நடவடிக்கை IPV தொடர்பாக பெண்களின் அனுபவங்களைக் குறைப்பதற்கு பணியாற்றும் என்பதற்கு LMIC களிலிருந்து **தெளிவான சான்றுகள்** உள்ளன.<br><br>இந்த வகையான அணுகுமுறைகள் வன்முறையில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதற்கு HIC களிலிருந்து **இன்னமும் அதிகமான சான்றுகள் தேவைப்படுகின்றன.** | Indashyikirwa (ருவாண்டா)<br>Stepping Stones (உகாண்டா + உலகளவில்)<br>Zindagii Shoista (தஜிகிஸ்தான்)<br>PREPARE (தென் ஆபிரிக்கா)<br>Unite for a Better Life (எதியோப்பியா) |

| நடவடிக்கையின் வகை | விபரம் | விளைதிறனுக்கான சான்றுகளின் சுருக்கம் | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|
| **தம்பதிகளுக்கு உளநல ஆலோசனை மற்றும் சிகிச்சை** | இந்த வகையான நடவடிக்கை ஒன்றாக இருக்க விரும்பும் தம்பதிகளிடையே வன்முறையைக் குறைப்பதற்கு தம்பதிகளுக்கான உளநல ஆலோசனை மற்றும் சிகிச்சையை ஒரு மூலோபாயமாக பயன்படுத்துகிறது. இந்த வகை நடவடிக்கை பொதுவாக IPV யின் வரலாற்றைக் கொண்ட தம்பதிகளை குறிவைக்கிறதுடன், HIC களில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.<br><br>தம்பதிகளுக்கான சிகிச்சை அமர்வுகள் பெரும்பாலும் தொடர்பாடல் பிரச்சினைகள், முரண்பாட்டு முகாமைத்துவ பிரச்சினைகள், பாலியல் பிரச்சினைகள் மற்றும் உறவுமுறைப் பிரச்சினைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய செயலிழந்த உறவு முறைகளில் கவனம் செலுத்துகின்றன.[7] சிகிச்சைமுறை பொதுவாக மது மற்றும் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் எவ்வாறு அது வன்முறையுடன் தொடர்புறுகின்றது என்பதையும் நிவர்த்தி செய்கின்றது.<br><br>இந்த அமர்வுகள், நடத்தைகளிலிருந்து அறிவாற்றல்-நடத்தை வரை அல்லது தீர்வு-நோக்கிய சிகிச்சை வரை பல்வேறு வகையான தம்பதிகளுக்கான சிகிச்சைகளை உள்ளடக்கியது. பெரும்பாலான நிகழ்ச்சித் திட்டங்களில், தம்பதிகள் தீங்கு விளைவிக்காத ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றதுடன் பொதுவாக 3-6 மாதங்கள் வரை சிகிச்சைக் காலப்பகுதிக்காக ஒன்றாக பணியாற்றுகின்றார்கள்.[8] | L தம்பதிகளுக்கான சிகிச்சை மற்றும் உளநல ஆலோசனை ஆகியன வன்முறை தொடர்பான இடைநிலை விளைவுகளில் முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கும் என்பதற்கு LMIC களில் இருந்து **அதிகளவான சான்றுகள் தேவைப்படுகின்றன.**<br><br>H சிறிதளவான-மிதமான வன்முறைச் சூழ்நிலை வரலாற்றைக் கொண்ட தம்பதிகள் உட்பட உறவுகளில் வன்முறையைக் குறைப்பதற்கான தம்பதிகளுக்கான சிகிச்சையின் நன்மைகள் குறித்து அதிக வருமானம் கொண்ட நாடுகளில் இருந்து **தெளிவான சான்றுகள்** உள்ளன.[9] இருப்பினும், இந்த நன்மைகள் தம்பதிகளுக்கு தம்பதிகள் மாற்றமடையும். | Becoming One (ருவாண்டா) |

## உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள்

பின்வரும் அட்டவணை நிகழ்ச்சித் திட்ட காலஎல்லைக்குள் VAW பரவலைக் குறைப்பினை வெளிக்காட்டிய மூன்று வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை (அண்ணளவாக 6 மாதங்களுக்கு பிரதான செயற்பாடுகளைக் கொண்ட) சுருக்கமாகக் கூறுகிறது. இந்த செயன்முறைகள் எவற்றையேனும் பின்பற்றும் போது பக்கம் 8 இல் வழங்கப்பட்டுள்ள **வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்புப் பட்டியல்** மற்றும் RESPECT கட்டமைப்பில் வழங்கப்பட்டுள்ள **வினைத்திறனான நிகழ்ச்சித் திட்டத்தின் வழிகாட்டுதல் கொள்கைகளுடன்** அட்டவணை மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் பற்றிய மேலதிக விரிவான தகவல்கள் **நிகழ்ச்சித் திட்ட சுருக்கங்களில்** வழங்கப்பட்டுள்ளன.

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| Indashyikirwa | உறவுமுறைத் திறன்களை மேம்படுத்துதல், அதிகளவான சமத்துவ உறவுகளை வளர்த்தல் மற்றும் IPV ஐ ஆதரிக்கும பால்நிலை சமத்துவமில்லாத நம்பிக்கைகள், நடத்தைகள் மற்றும் விழுமியங்களைக் குறைப்பதை இலக்காக கொண்ட தம்பதிகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் செறிவான நடவடிக்கையாகும் | ருவாண்டாவின் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மாகாணங்களின் ஏழு மாவட்டங்கள் | குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் இருந்து வேற்று பாலின தம்பதிகள் CARE International's இனுடைய கிராம சேமிப்பு மற்றும் கடன் சங்கங்கள் (VSLA) மூலமாக தெரிவுசெய்யப்பட்டனர் | 15 தம்பதிகளைக் கொண்ட குழுக்களுக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் வசதிப்படுத்துனர் மூலமாக வழங்கப்பட்ட 21 வார பயிற்சிநெறி.<br><br>கலைத்திட்டமானது அதிகாரம் மற்றும் பால்நிலை, உரிமைகளின் அடிப்படை எண்ணக்கருக்கள், மது துஸ்பிரயோகம், பொறாமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உள்ளிட்ட IPV இன் காரணிகளை நிர்வகித்தல், பால்நிலை வீட்டு வகிபாகங்கள் ஆரோக்கியமான உறவுகள் செயலாற்றலை அறிமுகப்படுத்துதல் மற்றும் IPV ஐ அனுபவிப்பவர்களுக்கு வலுப்படுத்தும் பதிலளிப்புகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. | 6 மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:** தொகுதியுடனான எழுந்தமானமான கட்டுப்பாட்டு சோதனை (cRCT) மற்றும் அதனுடன் கூடிய பண்பறிரீதியான ஆராய்ச்சி.[10]<br><br>**தாக்கம்:**<br>• உடலியல் மற்றும்/அல்லது பாலியல் ரீதியான IPV ஐ அறிக்கையிடும் பெண்களின் நிகழ்வுகளில் 55□ குறைவு.<br>• உடலியல் மற்றும்/அல்லது பாலியல் ரீதியான IPV யில் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்ற ஆண்கள் அறிக்கையிடும் நிகழ்வுகளில் 47□ குறைவு.<br>• மேம்படுத்தப்பட்ட உறவின் தரம், சிறந்த தகவல்தொடர்பாடல், அதிகரித்த நம்பிக்கை மற்றும் மேம்பட்ட மோதல் முகாமைத்துவம் மற்றும் மனைவியை அடிப்பதை நியாயப்படுத்துவதற்கான காரணங்களின் எண்ணிக்கை குறைவடைதல்.<br>• வீட்டில் குழந்தைகளுக்கு எதிரான உடலியல் ரீதியான தண்டனையின் பயன்பாடு குறைக்கப்பட்டது |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| Stepping Stones | இந்த நிகழ்ச்சித் திட்டம் முறைசார்ந்த மற்றும் முறைசாரா உறவுகள் இரண்டிலும் கலப்பு தலைமுறை அத்துடன் பால்நிலைகளுக்கிடையே பரஸ்பர மரியாதைக்குரிய தொடர்பாடல் மற்றும் உறவுத் திறன்களை மேம்படுததுவதற்கு வயது மற்றும் பால்நிலையின் அடிப்படையில் 4 சகாக்களின் குழுக்களால் பயன்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.[11] | இது முதன்முதலாக கிராமப்புற உகாண்டாவில் உருவாக்கப்பட்டது[12] அதன் பின்னர் இந்த நிகழ்ச்சித்திட்டம் 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் பாடசாலைகள், மத நிறுவனங்கள் மற்றும் சிறைச்சாலைகள் உட்பட பல்வேறு அமைப்புகளில் பயன்படுத்துவதற்கு இசைவாக்கப்பட்டது. | **ஆண்கள் மற்றும் பெண்கள்** (ஒருவருக்கொருவர் உறவில் இல்லாத),<br>இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான (வயது 15 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்), மற்றும் வயது வந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஒற்றை பால்நிலை சகாக்களின் குழுக்களில் இணைந்துள்ளனர். | **23 மூன்று மணி நேர அமர்வுகள்** சமாந்தரமாக 6 மாதங்களுக்கு மேலாக வழங்கப்படுகின்றன.[13]<br>பங்கேற்புப் பயிற்சியில் பால்நிலை சமத்துவமின்மை மற்றும் வன்முறை, இளைஞர்களுக்கு எதிரான வன்முறை, வன்முறையின் வாழ்க்கைச் சுழற்சிகள், காதல், களங்கம், STI/HIV, ஆணுறை பயன்பாடு, சுயமதிப்பு மற்றும் போதைப்பொருள் பயன்பாடு (மற்றையவற்றுடன்) போன்ற விடயங்களும் அடங்கும். | 6 மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:** தென்னாபிரிக்காவில் ஒரு எழுந்தமானமான கட்டுப்பாடு பரிசோதனை தொகுதி உட்பட பல்வேறு வகைகள் (RCT).[14]<br>**தாக்கம்:** தென்னாபிரிக்கா பரிசோதனையானது பாலியல் ஆபத்து நடத்தைகள் மற்றும் குறைந்த அளவு IPV குற்றச்செயல்கள் பற்றிய ஆண்களின் சுய-அறிக்கைகளில் குறைவுகளை கண்டறிந்தது. இருப்பினும், பெண் பங்கேற்பாளர்கள் குறைவான பாலியல் ஆபத்து நடத்தைகளையோ அல்லது குறைந்த அளவிலான IPV இனால் பாதிக்கப்படுவதாகவோ அறிக்கையிடவில்லை, ஏனெனில் இளம் பெண்களின் பங்காளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தைச் மேற்கொள்ளவில்லை. இதற்கு நேர்மாறாக, நான்கு சகாக்களின் குழுக்களுடனான இசைவாக்கத்தில் காம்பியாவில், பெண்களும் ஆண்களும் குறைக்கப்பட்ட IPV இனை அறிக்கையிட்டனர்.[15] |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| Becoming one | ஆரோக்கியமான, மிகவும் சமமான உறவுகளை மேம்படுத்துவதன் மூலம் IPV ஐத் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு **மதரீதியான தம்பதிகளுக்கான உளநல ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்.** | மேற்கு **உகாண்டா** | 2381 வேற்றுப்பாலின தம்பதிகள்<br>140 மதத் தலைவர்கள் | தகவல் தொடர்பாடல் திறன், உணர்வு ஒழுங்காக்கம், நிதி மீதான பகிரப்பட்ட கட்டுப்பாடு, பாலியல் சம்மதம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கி பயிற்சி பெற்ற மதத் தலைவர்களால் 12 -நபர்கள நேரடியாக பங்குபற்றும் அமர்வுகள் வழங்கப்படுகின்றன. இதில் விவிலியக் கொள்கைகள் மற்றும் வசனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், ஆண் ஆதிக்கம் மற்றும் VAW ஆகியவற்றை சட்டப்பூர்வமாக்குவதற்கு அடிக்கடி வழங்கப்படும் விவிலியத்தின் நியாயப்படுத்தல்களை இலக்கு வைக்கிறது. | 3-4 மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:** RCT மற்றும் அதனுடன் இணைந்த பண்பறி ரீதியான ஆராய்ச்சி[16]<br>**தாக்கம்:** 18 மாத மதிப்பீடு அக்டோபர் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டது. கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக முடிவுகள் தாமதமானது. |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| Unite for a Better Life **(UBL)** | **வேற்றுப்பாலின தம்பதிகளில்** IVP இனைக் குறைப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், எத்தியோப்பியன் காபி விழாக்களின் சூழலில் குழு அடிப்படையிலான அமர்வுகள் ஆண்களுக்கு மட்டும், பெண்களுக்கு மட்டும் மற்றும் தம்பதியர் குழுக்களுக்கென வழங்கப்பட்டன. | தென்மேற்கு **எதியோப்பியாவில்** உள்ள கிராமப்புற சமூகங்கள் | • வேற்றுப்பாலின தம்பதிகள்<br>• வேற்றுப்பாலின தம்பதிகளின் ஆண்கள் மட்டும்<br>• வேற்றுப்பாலின தம்பதிகளின் பெண்கள் மட்டும்<br>(அனைவரும் 15-49 வயதுடையதுடன், தற்போது திருமணமானவர்கள் அல்லது இணைந்து வாழ்கின்றனர்)<br>48 ஆண் மற்றும் பெண் வசதிப்படுத்துனர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர். | பயிற்சி பெற்ற வசதிப்படுத்துனர்களால் சமாந்தரமாக மூன்று வெவ்வேறு பால்நிலை உருமாற்ற கலைத்திட்டத்தொகுதி: ஆண்களின் UBL, பெண்களின் UBL மற்றும் தம்பதிகளின் UBL பாரம்பரிய எத்தியோப்பிய காபி விழாக்களின் பின்னணியில் வழங்கப்படும்.<br>7 அல்லது 14 வாரங்களுக்கு மேல் 20 நபர்களுக்கான 14 பங்கேற்பு மற்றும் திறன்களை கட்டியெழுப்பும் அமர்வுகள், பால்நிலை ஒரேமாதிரியான உளஎண்ணங்கள் மற்றும் வீட்டில் சமத்துவமற்ற வகிபாகங்களை சவால் செய்வதன் மூலமும் பால்நிலை மனப்பான்மைகள் மற்றும் நடத்தைகளை மேம்படுத்துவதன் மூலம் IPV இன் பல்வேறு மூல காரணங்களை நிவர்த்தி செய்ய வழங்கப்படுகின்றது. | 7 அல்லது 14 வாரங்கள் | **மதிப்பீட்டு வகை:** RCT[17]<br>**தாக்கம்: ஆண்களின் UBL**<br>• கடந்த ஆண்டின் பாலியல் ரீதியான IPV ஐ ஆண்கள் அறிக்கையிடும் நிகழ்வில் 30□ குறைவு<br>• கடந்த ஆண்டில் உடலியல் மற்றும்/அல்லது பாலியல்ரீதியான IPV ஐப் ஆண்கள் அறிக்கையிடும் நிகழ்வில் 20□ குறைவு<br>• கடந்த ஆண்டு உடலியல் மற்றும்/அல்லது பாலியல் ரீதியான IPVஇன் பெண்களின் அனுபவத்தில் புள்ளிவிவரவியல் ரீதியாக குறிப்பிடத்தக்க குறைவு<br>**பெண்கள் மற்றும் தம்பதிகளின் UBL**<br>• உடலியல் அல்லது பாலியல்ரீதியான் IPV இல் புள்ளிவிவரவியல் ரீதியாக குறிப்பிடத்தக்க தாக்கம் இல்லை<br>• ஆனால் குழந்தை பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளில் ஆண்களின் ஈடுபாட்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு |

# வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்பு பட்டியல்

உறவுகளைப் பேணும் திறன்களை வலுப்படுத்துவதற்கு வினைத்திறனான அணுகுமுறைகளின் பொதுவான கூறுகள் மற்றும் கொள்கைகள் பின்வருமாறு-[18]

## நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு மற்றும் இசைவாக்கம்

1. **பால்நிலை உருமாற்ற தம்பதிகளுக்கான கலைத்திட்டத்தின் வடிவமைப்பு, இசைவாக்கம் மற்றும் முன்னோடி முயற்சி ஆகியவற்றிற்கு போதுமான வளங்களை உறுதி செய்தல்.** கலைத்திட்டத்தின் உள்ளடக்கம் உள்ளூர் சூழலுக்கு பொருத்தமானது என்பதை உறுதிசெய்வதற்கு பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வலுவாக பரிசோதிக்கப்பட்டு உள்ளூர் சூழலுக்காக நன்கு பொருத்தப்பட்டுள்ளதுடன், அதனுடைய பிரதான செய்திகள் இலக்கு குடித்தொகையுடன் எதிரொலிக்கின்றவாறு நன்கு வடிவமைக்கப்பட்ட கலைத்திட்டத்தை சுற்றி வெற்றிகரமான அணுகுமுறைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. புதிய சூழல்களுக்கு இசைவாக்கப்பட்ட பொதுவில் கிடைக்கும் கலைத்திட்டங்கள் (கீழே உள்ள பெட்டியைப் பார்க்கவும்) பல உள்ளன. ஏற்கனவே உள்ள கலைத்திட்டத்துடன் இசைவாகும் போது, அதன் அசல் உருவாக்குனர்கள்/அமுலாக்குனர்களுடன் இணைந்து செயற்படுவதற்கும், அணுகுமுறையின் அடிப்படைக் கொள்கைகளுக்கு நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தவும், வேறு இடங்களில் இசைவாகும் போதான அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளவும் வலுவாக பரிந்துரைக்கப்படுகிறது.

### கலைத்திட்டங்களின் உதாரணங்கள்

Stepping Stones மற்றும் Stepping Stones+ (உலகளாவிய) பால்நிலை, தலைமுறை, HIV, தகவல் தொடர்பாடல் மற்றும் உறவுகளை பேணும் திறன்கள் குறித்த தங்கள் பயிற்சிநெறித் தொகுப்பைப் புதுப்பித்துள்ளன.

இந்தாஷிகிர்வா (ருவாண்டா) தம்பதிகளுக்கு இடையேயான வன்முறையைக் குறைக்க உதவும் இடைத்தொடர்பு பயிற்சிகள் மற்றும் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் பயிற்சிகளுடன் தம்பதிகளுக்கான கலைத்திட்டப் பயிற்சித் தொகுதியைக் கொண்டுள்ளது.

ஜிந்தகி ஷோயிஸ்டா (கண்ணியத்துடன் வாழ்வது) (தஜிகிஸ்தான்) இரண்டு பயிலரங்கு கையேடுகளைக் கொண்டுள்ளது:

(1) சமூக வலுவூட்டல் குடும்ப நல்லிணக்கத்தை ஊக்குவிக்கிறதுடன் வன்முறையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும்

(2) வருமானம் ஈட்டும் செயற்பாடுகள் மூலம் பொருளாதார வலுவூட்டலைச் செயற்படுத்துவது, பெண்களின் தீர்மானமெடுத்தலை வலுப்படுத்துவது உட்பட குடும்ப வரவு செலவுத் திட்டங்களை முகாமை செய்ய குடும்பங்களுக்கு உதவுகிறது.

2. **பால்நிலைப்படுத்தப்பட்ட சக்தி மற்றும் உறவுகளினுள் உள்ள விழுமியங்களின் கோட்பாடு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றில் களமட்ட தம்பதிகளின் கலைத்திட்டம்.** இந்தாஷிகிர்வா தம்பதிகளின் கலைத்திட்டம் நேர்மறை மற்றும் எதிர்மறை வகைகளின் எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியதுடன் அவர்களது சொந்த உறவுகள் மற்றும் சமூகங்களில் உள்ள IPV இனை அடையாளம் காணவும், தடுக்கவும் மற்றும் பதிலளிக்கவும் தம்பதிகளுக்கு உதவும்.[19] தீங்கான விழுமியங்கள் பற்றிய செய்திகளை அனுப்புவதில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, "வீட்டு அபிவிருத்திக்காக ஒன்றாக வேலை செய்தல்", "நல்ல பெற்றோராக ஒன்றாக இருப்பது" மற்றும் "மேம்பட்ட பாலியல் உறவுகள்" போன்ற புதிய நேர்மறை மற்றும் ஆர்வமுள்ள உறவு விழுமியங்களை ஊக்குவித்தல் சிறந்த ஊக்கத்தை அளிக்கும் நடத்தை மாற்றம் மற்றும் சாத்தியமான பின்னடைவை தவிர்க்க உதவும்.

3. **ஏற்கனவே உள்ள உள்ளூர் மதிப்புகள், மொழிகள் மற்றும் சமூக கட்டமைப்புகளுடன் நிகழ்ச்சித் திட்டங்களை சீரமைத்து இணைக்கவும்:** உள்ளூர் சூழலுக்கு ஏற்றவாறு வெற்றிகரமாக இசைவாக்கப்பட்ட அணுகுமுறைகள், ஏற்கனவே உள்ள நேர்மறையான கலாச்சார மற்றும் மதம் சார் மதிப்புகளுடன் தங்கள் கலைத்திட்டத்தை திட்டமிட்டு சீரமைத்து, உள்ளூர் மொழியில் பொருத்தமான எண்ணக்கருக்களைப் பயன்படுத்தின. ஒரு குறிப்பிட்ட அமைப்பிற்குள் உறவுகளில் செல்வாக்கு செலுத்தும் பிரதான நபர்கள் மற்றும் பங்குதாரர்களை அவை அங்கீகரித்து உள்ளடக்குகின்றதுடன், தம்பதிகள், குடும்பங்கள், ஆண்கள் மற்றும் பெண்களுடன் ஈடுபடுவதற்கு ஏற்கனவே உள்ள சமூக கட்டமைப்புகளை முக்கிய நுழைவு புள்ளிகளாகப் பயன்படுத்துகின்றன.

### இசைவாக்கம் மற்றும் தாக்கத்தை அதிகரிப்பதற்கான வளங்கள்

பல்வேறு முயற்சிகளை வினைத்திறனாக மற்றும் நெறிமுறையாக எவ்வாறு பின்பற்றுவது மற்றும் அளவிடுவது என்பதற்கான வழிகாட்டுதலை தாக்கத்தை அதிகரிப்பதை புரிந்து கொள்ளுவதற்கான சமூகம் (CUSP) கொண்டுள்ளது. Stepping Stones களை பின்பற்றுவதற்கான வழிகாட்டுதல்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் நம்பகத்தன்மையையும் செயற்திறனையும் பேணுவதற்கு என்ன செய்ய வேண்டும் மற்றும் செய்யக்கூடாது என்பதையும் வழிகாட்டுகிறது.

## அமுல்படுத்தல் மற்றும் தாக்கத்தை அதிகரித்தல்

4. **ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரையும் மற்றும் பொருத்தமான மற்றைய குடும்ப உறுப்பினர்களையும் பிரதானமாக ஈடுபடுத்துங்கள்.** இரு நபர்களையும் ஒரு நெருக்கமான உறவில் ஈடுபடுத்துவது அர்ப்பணிப்பைத் தக்கவைக்க உதவுகின்றதுடன் வீட்டு பால்நிலை மற்றும் அதிகார பரிமாணங்களை நிவர்த்தி செய்வதற்கு தம்பதிகள் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க உதவுகின்றது. ஆணின் ஈடுபாட்டை உறுதி செய்வதற்கும், நிலைநிறுத்துவதற்கும் குறிப்பிட்ட முயற்சிகள் தேவைப்படலாம்.[20] சில நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்களை ஈடுபடுத்த ஆரம்பிப்பதற்கு முன்பாக ஊக்கமளிக்கும் நேர்காணல் நுட்பங்களைப்[21] பயன்படுத்துவதுடன் இடைவிலகல் விகிதங்களைக் குறைக்கின்றன. ஆணாதிக்க அமைப்புகளில், சாத்தியமான பின்னடைவைக் குறைப்பதற்காக திருமண உறவாளர்களை ஈடுபடுத்துவதும் அவசியமாக இருக்கலாம்.

5. **பங்காளர்களிடையே சமமான பங்கேற்புக்கான பாதுகாப்பான இடத்தை உருவாக்கவும்.**[22] தம்பதிகள் பகிர்ந்து கொள்ளவும் கற்றுக்கொள்ளவும் பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான சூழலை நிகழ்ச்சித் திட்டம் உருவாக்குவதை உறுதிப்படுத்த குழுக்களின் அளவு, இடம் மற்றும் நேரம் ஆகியவற்றை அவதானமாக கருத்தில் கொள்ள வேண்டும். இதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியான பால்நிலை மற்றும் வயது சார்ந்த அமர்வுகளும் மற்றும் இரு பங்காளர்களையும் உள்ளடக்கிய கூட்டு அமர்வுகளும் இருக்க வேண்டும். Stepping stones இல், சகாக்களின் குழுக்கள் ஒவ்வொன்றும் தங்களுக்கு சிறப்பாகச் செயற்படுவது எது என்பதைப் பொறுத்து, ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்த இடங்களையும் நேரங்களையும் தெரிவு செய்கிறார்கள்.


6. **உறவுகளை வலுப்படுத்துவதற்கு தகவல் தொடர்பாடல் மற்றும் முரண்பாடுகளுக்கு தீர்வு காணல் ஆகியவற்றில் திறன்களை கட்டியெழுப்புதல்.** வெற்றிகரமான அணுகுமுறைகள் திறன்களை கட்டியெழுப்புவதுடன், வீட்டிற்கு எடுத்துச் செல்லும் செயற்பாடுகள் மூலம் புதிய திறன்களைப் பயிற்சி செய்வதற்கான வாய்ப்புகளில் கவனம் செலுத்துகின்றன.[23]

7. **ஆண் மற்றும் பெண் வசதிப்படுத்துனர்களை அவதானமாக தெரிவு செய்து பயிற்சி அளிக்கவும்.** இந்தத் நடவடிக்கைகளின் செறிவான தன்மையைக் கருத்தில் கொண்டு, வசதிப்படுத்துனர்கள் பயிற்சியை வசதிப்படுத்துவதற்கு தயாராகும் முன்பாக, பங்கேற்பாளர்களாக தங்கள் சொந்த உருமாற்றம் மற்றும் கற்றல் செயன்முறையினூடாக சென்று நிகழ்ச்சித் திட்டத்தை உணர வேண்டும்.[24] மேலும் வசதிப்படுத்துனர்கள் பங்கேற்பு அடிப்படையிலான வசதிப்படுத்தும் பாணியைப் பின்பற்றுவதற்கான வசதிகள் மற்றும் ஆதரவு அளிக்கப்பட வேண்டியதுடன் பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் மாற்றத்திற்கான பயணத்தில் போதுமான ஆதரவை வழங்க முடியுமாக இருக்க வேண்டும்.

8. **பிரதிபலிப்பு மற்றும் ஆதரவிற்கான வாய்ப்புகளுடன் பங்கேற்பு அணுகுமுறைகளை பின்பற்றவும்.** வினைத்திறனான பங்கேற்பு கற்றல் நுட்பங்கள் உரையாடலை ஊக்குவிப்பதுடன், பெண்களின் நிலையை மேம்படுத்துதல், வளங்களின் சமமற்ற பகிர்தலுக்கு சவால் விடுத்தல் மற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயுள்ள அதிகார ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல் போன்ற பால்நிலை வகிபாகங்கள் பற்றிய விமர்சன சிந்தனையை ஆதரிக்கின்றது.

9. **அணுகக்கூடிய, தொடர்புடைய மற்றும் ஈர்க்கக்கூடிய தகவல்தொடர்பாடல் பொருட்களைப் பயன்படுத்தவும்.** குறைந்த கல்வியறிவு உள்ள பகுதிகளில் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வளங்கள் உட்பட வண்ணமயமான மற்றும் நேர்மறையான புலனாகும் தகவல் தொடர்பாடல் பொருட்கள் அவசியமானதுடன், பங்கேற்பாளர்களின் ஆர்வத்தைக் கவர்வதில் முக்கியமானதுடன், பிரதான செய்திகளைத் தொடர்பாடல் செய்வதில் உதவுகின்றன.[25] குறைந்த கல்வியறிவு உள்ள பகுதிகளில் Indashyikirwa நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்ததைப் போல, பங்கேற்பாளர்கள் பொருட்களை உணர்ந்து கொள்ளவும் புரிந்துகொள்ளவும் உதவும் இரண்டு வசதிப்படுத்துனர்களைக் கொண்டிருப்பது உதவியாக இருக்கும்.

10. **மிகவும் நலிவடைந்த தம்பதிகளை ஈடுபடுத்துவதற்கு உள்ளடக்கல் அணுகுமுறைகளை பின்பற்றவும்.** Indashyikirwa நிகழ்ச்சித் திட்டம் இயலாமைகள் உள்ளவர்களுக்கு அணுகக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்வதற்காக குறிப்பிட்ட உத்திகளைப் பயன்படுத்தியது. இதில் இயலாமைகளை உடையவர்களுக்கான தேசிய சபையுடன் கூட்டு சேர்ந்து, 280 இயலாமைகளை உடையவர்களை அடைவதற்கு இலக்கு நிர்ணயித்தல் மற்றும் அணுகக்கூடிய தகவல் தொடர்பாடல் பொருட்கள் ஆகியவை உள்ளடங்கும்.[26]



## நுழைவுப்புள்ளிகள்

உறவுத் திறன்களை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள் தாக்கத்தை அதிகரிப்பதற்கு பல அமைப்புகள் மற்றும் துறைகளில் ஒருங்கிணைக்கப்படலாம். தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை அடைவதை அதிகரிப்பதற்கும், ஏற்கனவே உள்ள முயற்சிகளை மேம்படுத்துவதற்கும் நடந்துகொண்டிருக்கும் முயற்சிகள் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளை கட்டியெழுப்புவதும் இதில் அடங்கும். நிகழ்ச்சித் திட்ட உதாரணங்கள் உட்பட, இந்த உத்திக்கான சில முக்கிய நுழைவுப் புள்ளிகளை பின்வரும் அட்டவணை சுட்டிக்காட்டுகிறது.

| நுழைவுப் புள்ளி | விளக்கம் |
|---|---|
| **தற்போதுள்ள சமுதாயம் சார்ந்த சமூக மற்றும் பொருளாதார நிறுவனங்கள்**<br><br>உதா. நம்பிக்கை குழுக்கள், சேமிப்பு மற்றும் கடன் குழுக்கள், சுயஉதவி குழுக்கள், சமூக பாதுகாப்பு பெறுபவர்கள் | சமுதாய நிலையில் இருக்கும் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் தம்பதிகள், குடும்பங்கள், ஆண்கள் மற்றும் பெண்களுடன் அணுகுவதற்கும் பணியாற்றுவதற்கும் வினைத்திறனான செலவீனமுள்ள நுழைவுப் புள்ளியை வழங்கலாம். இந்த சமுதாயக் கட்டமைப்புகள் தம்பதிகள் மாற்றமடைவதற்கான சூழலை உருவாக்கவும், மாற்றத்தைத் தக்கவைப்பதற்கு தம்பதிகளுக்கு ஆதரவளிக்கவும் உதவும். ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளைப் பயன்படுத்துவது பாரியளவில் நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கலாம். திருமணம் செய்துகொள்வதற்காக அவர்களது மத சமுதாயங்கள் அல்லது அரசாங்க அமைப்புகளுடன் இணைந்து இருப்பவர்கள், அதாவது "தம்பதிகளாக ஆக இருப்பவர்களை" ஈடுபடுத்தும் சாத்தியமும் உள்ளது.<br><br>உதாரணமாக, ருவாண்டாவில் Indashyikirwa நடவடிக்கை தம்பதிகளை ஈடுபடுத்துவதற்கான நுழைவுப் புள்ளியாக CARE இன் தற்போதைய கிராம சேமிப்பு மற்றும் கடன் சங்கங்களின் (VSLA) மீது வெற்றிகரமாக கட்டியெழுப்பப்பட்டது. உகாண்டாவில் Stepping Stones தற்போதுள்ள Redd Barna இனுடைய சமூக வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் (IGAs) மூலம் கட்டமைக்கப்பட்டது.[27] உகாண்டாவில் ஒரு நடவடிக்கை, ஏற்கனவேயுள்ள உள்ளூர் தேவாலயங்கள் வழங்கும் திருமணத்திற்கு முன் மற்றும் திருமண ஆலோசனைகளை வழங்கும் மதத் தலைவர்கள் தகவல்தொடர்பாடல், நிதி மீதான பகிரப்பட்ட கட்டுப்பாடு, பாலியல் சம்மதம் மற்றும் மகிழ்ச்சி ஆகியன உள்ளடங்கலாக நேர்மறையான உறவுகளை வலுப்படுத்தவும் சுட்டிக்காட்டுவதற்கும் பைபிளைப் பயன்படுத்தி தம்பதிகளுக்கு திறன் அடிப்படையிலான ஆலோசனைகளை நடாத்துவதற்காக உருவாக்கப்பட்டது. |
| **பாடசாலை மற்றும் கல்விக்கான வசதிகள்** | பாடசாலையை அடிப்படையாக கொண்ட நடவடிக்கைகள் இளைஞர்களிடையே மரியாதைக்குரிய உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்க முடியும். டயவவைபெ மீதான மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்கள் ஆகியவற்றை மாற்றுகின்றதும் சமமான உறவுகளை உருவாக்க முயற்சிக்கின்றதுமான dating நடவடிக்கை மிகவும் பரவலாக மதிப்பீடு செய்யப்பட்டதாக இருக்கின்றது.<br><br>உதாரணமாக, தென்னாப்பிரிக்காவில் PREPARE நிகழ்ச்சித் திட்டமானது, நெருக்கமான உறவுகளில் மதிப்புகள் மற்றும் அபிலாசைகள், தகவல் தொடர்பாடல் திறன், பால்நிலை அதிகார ஏற்றத்தாழ்வுகள், மரியாதைக்குரிய உறவுகள் மற்றும் பாலியல் தீர்மானமெடுப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கிய 21 செறிவான பாடசாலைக்கு பின்னரான பயிற்சி பட்டறைகளை உள்ளடக்கியது. இந்த நிகழ்ச்சித் திட்டம் இளம் பருவ தம்பதிகளிடையே IPV குறைவதற்கு வழிவகுத்தது.[28] குறிப்பாக இளம் பருவத்தினரை குறிவைக்கும் அணுகுமுறைகள் தொடர்பான மேலதிக தகவல்கள் **Environments Made Safe மற்றும் Child Adolescent Abuse Prevented தொடர்பான RESPECT மூலோபாய சுருக்கங்களில்** காணப்படுகிறது. |
| பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதார சேவைகள் உள்ளிட்ட **சுகாதாரத் துறை** | பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதார (SRH) சேவைகள் போன்றவற்றின் மூலம், சுகாதாரத் துறையானது தம்பதிகளுடன் தாக்கத்தை அதிகரிப்பதற்கு ஈடுபடுவதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை வழங்குகிறது. தற்போதுள்ள SRH மற்றும் ஆலோசனை சேவைகள் VAW தடுப்பு செய்தியை ஒருங்கிணைப்பதற்கு பின்பற்றப்படலாம் மற்றும் குறிப்பிட்ட ஆபத்தில் உள்ள தம்பதிகளைக் கண்டறியவும் செறிவான தம்பதிகள் சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்துவதற்கும் பயன்படுத்தலாம். காத்திருப்பு அறைகள், பரீட்சை அறைகள் மற்றும் உளநல ஆலோசனை இடங்கள் ஆகியவற்றில் கிடைக்கும் கல்விப் பொருட்கள் மற்றும் வளங்கள் மூலமாகவும், வாடிக்கையாளர்களுக்கு/நோயாளிகளுக்கு தனிப்பட்ட முறையில் வழங்கப்பப்படும் செய்திகள் மூலமாகவும் தீங்கு விளைவிக்கும் உறவு விழுமியங்களை மாற்றுவதற்கு சுகாதார வல்லுநர்கள் ஈடுபடலாம்.[29] |

# பிரதானமான வளங்கள்

### தம்பதிகளுடனான நிகழ்ச்சித் திட்டம்

Preventing partner violence, working with couples. Practice brief. Starmann, E. The Prevention Collaborative. 2018
இந்த செயன்முறைச் சுருக்கமானது, IPV ஐத் தடுப்பதற்காக, முக்கிய வடிவமைப்பு கூறுகள் மற்றும் செயற்படுத்தல் குறிப்புகள் உட்பட, ஆப்பிரிக்காவில் உள்ள மூன்று நிகழ்ச்சித் திட்டங்களின் உட்பார்வைகளை உள்ளடக்கி தம்பதிகளுடன் பணிபுரியும் ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது.

Working with couples to prevent IPV, Indashyikirwa, Rwanda What Works Evidence Brief. Stern, E., Mclean, L., and Heise, L. 2018
இந்த செயன்முறைச் சுருக்கமானது, IPV ஐத் தடுப்பதற்காக, தம்பதிகளுடன் இணைந்து பணியாற்றுவது பற்றி Indashyikirwa நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை எடுத்துக்காட்டுகிறது.

Programme Summary: The Indashyikirwa Programme Rwanda. The Prevention Collaborative. 2019
இந்த சுருக்க ஆவணம் ருவாண்டாவில் உள்ள Indashyikirwa தம்பதிகளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் சுருக்கத்தை வழங்குகிறது, இதில் நிகழ்ச்சித் திட்ட கூறுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் பற்றிய விரிவான தகவல்கள் அடங்கும்.

### முறைசார் மற்றும் முறைசாரா பாலியல் பங்காளர்களுடனான நிகழ்ச்சித் திட்டத்திற்கான சான்றுகள்

Couple therapy for intimate partner violence: A systematic review and meta-analysis. Karakurt G, Whiting K, Van Esch, Bolen S, Calabrese J. J Marital Family Therapy, Volume 42, No. 4, p567583: doi:10.1111/jmft.12178. 2016
இந்த முறைசார் மீளாய்வு, வன்முறைக்கான சிகிச்சையாக தம்பதிகளின் சிகிச்சையின் வினைத்திறனை ஆராய்வதற்காக அமெரிக்காவில் இருந்து ஆறு ஆய்வுகளின் முடிவுகளை தொகுக்கிறது.

Synchronising gender strategies: A cooperative model for improving reproductive health and transforming gender relations
Greene, M and Levack, A. USAID. 2010
இந்த வெளியீடு ஆண்கள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் பெண்பிள்ளைகளுடன் பணிபுரிவதற்கான சான்றுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட உதாரணங்களை முன்வைக்கிறது, இது நோக்குடன் மற்றும் பரஸ்பர வலுப்படுத்தும் விதத்தில் பால்நிலை விழுமியங்களை சவால் செய்வதுடன், பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துகிறது மற்றும் ஆரோக்கியத்தை வருத்தி செய்கின்றது.

### ஆண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்தும் கோட்பாடு

From work with men and boys to changes of social norms and reduction of inequities in gender relations: A conceptual shift in prevention of violence against women and girls. Jewkes, R. K., Flood, M. G. and Lang, J.
The Lancet, 385 (9977), 1580-1589. 2015
VAW பணியைத் தடுப்பதில் ஆண்களையும் சிறுவர்களையும் ஈடுபடுத்துவது ஏன் முக்கியம் என்பதை இந்தக் கல்வி ஆக்கம் கலந்துரையாடுகின்றது. VAW ஐ இயக்கும் பால்நிலை தொடர்பான விழுமியங்களை மாற்றுவதற்கு ஆண்கள் மற்றும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மற்றும் பெணபிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டும் என்று அது முன்மொழிகிறது.

**© UN Women 2020**

**இந்த ஆவணம் ஐ.நா. பெண்கள் அமைப்பால் உத்தரவளிக்கப்பட்டதுடன் Social Development Direct இனால் உருவாக்கப்பட்டதுமான RESPECT கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் ஒரு பகுதியாகும், அதை இங்கே காணலாம்.**

**Suggested citation:** UN Women and Social Development Direct (2020) Preventing Violence Against Children and Adolescents, RESPECT: Preventing Violence against Women Strategy Summary.

# இறுதிக் குறிப்புகள்

[1] Heise (2011) What works to prevent partner violence? An evidence review. December 2011.

[2] Fulu, E and Kerr-Wilson, A (2015) What works to prevent violence against women and girls evidence reviews Evidence review of interventions to prevent violence against women and girls. September 2015

[3] Shai, N., Devi Pradhan, G., Chirwa, E., Shrestha, R., Adhikari, A. & Kerr-Wilson, A (2019) Factors associated with IPV victimisation of women and perpetration by men in migrant communities of Nepal, PLOS One, DOI: https://doi.org/10.1371/journal.pone.0210258

[4] UN Women (2015) A Framework to Underpin Action to Prevent Violence against Women, New York: UN Women.

[5] சான்று மதிப்பீடுகள் பெரும்பாலும் எழுந்தமானமான, தொகுதிகளுடனான எழுந்தமானமான மற்றும் கட்டுப்பாட்டுப் பரிசோதனை முறைகள் உள்ளிட்ட சோதனை வடிவமைப்புகளைப் பயன்படுத்தும் ஒன்றிற்கு மேற்பட்ட நடவடிக்கைகளின் முறைசார் மதிப்பீடுகளில் இருந்து பெறப்படுகின்றன. நீதித்துறை நடவடிக்கைகள் போன்ற சில மூலோபாயங்களுக்கு, பொதுவாக குறைந்த தரமுடையவை எனக் கருதப்பட்டாலும், நேரத் தொடர், அவதானிப்பு மற்றும் குறுக்குவெட்டு வடிவமைப்புகள் உள்ளிட்ட மாற்றீடான மதிப்பீட்டு முறைமைகள் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வளர்ந்து வரும் துறையாகும், எனவே, ஆய்வு வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டில் வலுவாக பெரிய அளவில் மாறுபாடுகள் உள்ளன. இந்த மீளாய்வுகள் மற்றும் ஆய்வுகளுக்கான ஆதாரங்கள் குறிப்புகளின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ளன.

[6] Fulu, E and Kerr-Wilson, A (2015) Ibid.

[7] Karakurt, G., Whiting, K., Van Esch, C., Bolen, S. & Calabrese, J. (2016) Couple Therapy for Intimate Partner Violence: A Systematic Review and Meta Analysis, Journal of Marital Family Therapy, 42(4): 567-583

[8] Carr, A (2020) 'Evidence for the efficacy and effectiveness of systemic family therapy' in Wampler, K. et al (Eds.) The Handbook of Systemic Family Therapy, Chichester: John Wiley & Sons.

[9] See forthcoming Becoming One Evaluation; Karakurt G, Whiting K, Van Esch, Bolen S, Calabrese J (2016). Couple therapy for intimate partner violence: A systematic review and meta-analysis. J Marital Fam Ther, Volume 42, No. 4, p567583.

[10] Dunkle, K., Stern, E., Chatterji, S,. and Heise, L., (2019) Indashyikirwa programme to reduce intimate partner violence in Rwanda: Report of findings from a cluster randomized control trial. CARE. London.

[11] அசல் Stepping Stones குறிப்பாக "அன்பு என்றால் என்ன" என்ற பயிற்சியில் முறைசார் மற்றும் முறைசாரா உறவுகளுக்கு இடையிலான வேறுபாடுகள் குறித்த கேள்வியை எழுப்பியது. முறைசாரா/ரகசிய மற்றும் முறைசார் பாலியல் உறவுகள் மற்றும் பலதாரமண உறவுகளில் வன்முறையை எதிர்கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

[12] See Stepping Stones website for further information: www.steppingstonesfeedback.org

[13] Salamandar Trust (2019) Stepping Stones and Stepping Stones Plus

[14] Jewkes R, Nduna M, Levin J, Jama N, Dunkle K, Puren A, Duvvury N. (2008) Impact of stepping stones on incidence of HIV and HSV-2 and sexual behaviour in rural South Africa: cluster randomised controlled trial. Bmj. Aug 7;337:a506. For a summary, see https://pubmed.ncbi.nlm.nih.gov/18687720/

[15] Paine, K., Hart, G., Jawo, M., Ceesay, S. & Jallow, M. (2010) 'Before we were sleeping, now we are awake': Preliminary evaluation of the Stepping Stones sexual health programme in The Gambia, African Journal of Aids Research, Volume 1, Issue 1.

[16] https://airbel.rescue.org/projects/becoming-one/ See forthcoming Becoming One Evaluation

[17] https://www.uniteforabetterlife.org

[18] McLean, L., Heise, L. & Stern, E. (2019) Shifting and transforming gender-inequitable beliefs, behaviours and norms in intimate partnerships: the Indashyikirwa couples programme in Rwanda, Culture, Health & Sexuality, DOI: 10.1080/13691058.2019.1679394; Starmann, E. (2018) Preventing Partner Violence, Working with Couples. Prevention Collaborative Prevention Brief ; The Prevention Collaborative (2019) Programme Summary: Stepping Stones. The Prevention Collaborative, December 2019 .

[19] Mclean et al (2019) Ibid.

[20] Starmann, E (2018) Preventing partner violence working with couples. Practice brief The Prevention Collaborative.

[21] Saftlas, A. F., Harland, K. K., Wallis, A. B., Cavanaugh, J., Dickey, P., & Peek-Asa, C. (2014). Motivational interviewing and intimate partner violence: a randomized trial. Annals of epidemiology, 24(2), 144-150; Lila, M., Gracia, E., Catalá-Miñana, A., 2018. Individualized motivational plans in batterer intervention programs: A randomized clinical trial. Journal of consulting and clinical psychology 86 (4), 309–320; Schumacher, J.A., Coffey, S.F., Stasiewicz, P.R., Murphy, C.M., Leonard, K.E., Fals-Stewart, W., 2011. Development of a brief motivational enhancement intervention for intimate partner violence in alcohol treatment settings. Journal of Aggression, Maltreatment & Trauma. 20 (2), 103–127.

[22] Stern, E.; Nyiratunga, R. (2017) A Process Review of the Indashyikirwa Couples Curriculum to Prevent Intimate Partner Violence and Support Healthy, Equitable Relationships in Rwanda. Soc. Sci. 2017, 6, 63.

[23] Stern, E., Mclean, L., and Heise, L (2018) Working with couples to prevent IPV. The Indashyikirwa in Rwanda.

[24] Starmann, E (2018) ibid.; Community for Understanding Scale-up (CUSP) guidance; Salamandar Trust (2017) Guidelines for Adapting Stepping Stones.

[25] Ibid.

[26] Dunkle et al (2019) Ibid.

[27] Salamandar Trust (2015) Stepping Stones Revisited: Stories from the village of Buwenda. Video on Vimeo by Salamandar Trust

[28] Mathews, C., Eggers, S.M., Townsend, L. et al (2016). Effects of PREPARE, a Multi-component, School-Based HIV and Intimate Partner Violence (IPV) Prevention Programme on Adolescent Sexual Risk Behaviour and IPV: Cluster Randomised Controlled Trial. AIDS Behav 20, 1821–1840 (2016).

[29] Shepard, B (2010) Addressing violence against women and girls in sexual and reproductive health services. New York: UNFPA

# RESPECT WOMEN

## மூலோபாயச் சுருக்கம்

## பெண்களை வலுவூட்டல்

(Empowerment of women)

UN WOMEN

World Health Organization

# பெண்களை வலுவூட்டல்

மூலோபாயத்தின் குறிக்கோள்: பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கும், உறவுகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் குடும்பங்கள், சமுதாயங்கள் மற்றும் சமூகத்தினுள் சக்திமிக்க சமமான பால்நிலை உறவுகளை மேம்படுத்துவதற்காக பெண்களின் பொருளாதார, சமூக, உளவியல் மற்றும் அரசியல் வலுவூட்டலை வசதிப்படுத்துதல்.

## விளக்கம்

பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) என்பது சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்கள் கொண்டுள்ள தாழ்ந்த நிலையின் வெளிப்பாடென்பதால், சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் அரசியல் ரீதியான பெண்களின் வலுவூட்டல் பெண்களுக்கு[1] எதிரான வன்முறை (VAW) அபாயத்தைக் குறைப்பதற்கான ஒரு பாதுகாப்புக் காரணியாகும்.

இந்த மூலோபாயத்தின் கீழான நடவடிக்கைகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் தன்னம்பிக்கை மற்றும் சுயசெயற்திறன், உறுதிப்பாடு மற்றும் பேசித்தீர்க்கும் திறன் ஆகியவற்றை கட்டியெழுப்புகின்றன. அவை மேலும் பெண்களின் பொருளாதார அறிவு, சொத்துக்கள், சுயாட்சியை அதிகரிப்பதுடன் அவர்களின் ஆண்கள் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் மீதான நிதியியல் சார்ந்திருப்பை குறைக்கின்றன. வலுவூட்டல் மூலோபாயங்கள் பெண்கள் தங்களின் பேரம் பேசும் சக்தி, நம்பிக்கை, தீர்மானமெடுக்கும் சுயாட்சி ஆகியவற்றை அதிகரிக்க உதவுவதுடன் பாதுகாப்பு தொடர்பில் அவர்கள் சொந்தமாகவும் அவர்களின் குடும்பங்கள் சார்பிலும் செயற்படுவதற்கான தெரிவுகளையும் நிறுவனங்களையும் அவர்களுக்கு வழங்குகின்றது.

மூலோபாயம் சமூகங்களில் உள்ள நலிவடைந்த பெண்களின் குழுக்கள் (உதா. பெண் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் இயலாமைகள் உள்ள பெண்கள்) உட்பட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுடன் பணியாற்றுவதற்கான அணுகுமுறைகளை உள்ளடக்கியுள்ளது. பெண்களின் குறிப்பிட்ட குழுக்களுடனான அணுகுமுறைகள் மீதான கவனம் கூட பாகுபாடு மற்றும் சமத்துவமின்மையின் பல்தரப்பட்ட மற்றும் மேற்பொருந்தும் வடிவங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் யாரையும் பின்தள்ளி[2] விடவில்லை என்பதை உள்ளடக்கிய RESPECT இன் வழிகாட்டும் கொள்கையுடன் இணங்கியிருக்கின்றது. இது மேலும் இளம் வயது காரணமாக அதிகார பரிமாணத்தில் ஆபத்து மற்றும் ஓரங்கட்டப்படுதலை எதிர்கொள்ளும் இளம் பெண்பிள்ளைகளை இலக்காக கொண்ட முயற்சிகளையும் உள்ளடக்கும்.

## ஆபத்து மற்றும் பாதுகாப்பு காரணிகள்


இந்த மூலோபாயம் பின்வரும் ஆபத்துக் காரணிகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் பின்வரும் VAW க்கான பாதுகாப்புக் காரணிகளை ஊக்குவிக்கின்றன:

| நிலை | ஆபத்துக் காரணிகள் | பாதுகாப்புக் காரணிகள் |
|---|---|---|
| **தனிநபர் நிலை** | பொருளாதார பாதுகாப்பின்மை (பெண்கள்)<br>வன்முறையை இயல்பானது அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்கது என மன்னிக்கும் அல்லது நியாயப்படுத்தும் அணுகுமுறைகள் (பெண்கள் மற்றும் ஆண்கள்)<br>குறைந்த சுய செயற்திறன் மற்றும் சுயமரியாதை (பெண்கள்)[3] | பொருளாதார பாதுகாப்பின்மை (பெண்கள் மற்றும் ஆண்கள்)<br>நிதியியல் சுயாட்சி (பெண்கள்)<br>பால்நிலை சமத்துவமான அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகள் (பெண்கள் மற்றும் ஆண்கள்)<br>உயர்வான சுய-செயற்திறன் மற்றும் சுயமதிப்பு (பெண்கள்) |
| **நபர்களுக்கிடையிலான நிலை** | நெருங்கிய துணை மற்றும் திருமண உறவுகளிடம் அதிகளவான சமத்துவமின்மை<br>பெண்களின் நிதியியல் ரீதியான தங்கியிருத்தல் மற்றும் குடும்பங்களில் தீர்மானம் மேற்கொள்ளலில் மட்டுப்படுத்தப்பட்ட கருத்துச் சுதந்திரம் | பகிரப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் வீட்டுப் பொறுப்புகள் உள்ளிட்ட பால்நிலை சமத்துவத்தால் நெருக்கமான உறவுகள் வகைப்படுத்தப்படுதல்<br>கல்வி நிலைகளில் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே பாரியளவிலான சமத்துவம் |
| **சமுதாய நிலை** | ஆண்களை முன்னுரிமைப்படுத்துவதுடன் பெண்களின் சுயாட்சியை மட்டுப்படுத்தும் தீங்கு விளைவிக்கும் பால்நிலை விழுமியங்கள் | வன்முறையின்மையை ஆதரிக்கும் விழுமியங்கள், பன்முகத்தன்மை மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு மதிப்பளித்தல் மற்றும் பெண்களின் வலுவூட்டலை ஊக்குவித்தல் |
| **சமூக நிலை** | பெண்களின் தகுதிக்கு குறைவான பணி மற்றும் வேலையின்மை மற்றும்<br>சுரண்டலுக்குள்ளாக்கும் பணியிடச் சூழல்கள்<br>பெண்களின் குறைந்தளவிலான அரசியல் பங்கேற்பு | அதிகரித்த பெண்களின் வேலைவாய்ப்பு<br>அதிகரித்த பெண்களின் கல்வி<br>அரசியல் வாழ்வில் பெண்களின் முனைப்பான பங்கேற்பு |

## மாற்றத்தின் கோட்பாடு

பின்வரும் வரைபடம், பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) குறைப்புகளுக்கு வழிவகுக்கும் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பெண்களை வலுவூட்ட எதிர்பார்க்கும் சான்று அடிப்படையிலான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வதென்பதை காட்டுகின்ற எளிமையான மாற்றத்திற்கான கோட்பாட்டை வழங்குகின்றது. இது குறிப்பான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிக விருத்தியையும் இசைவாக்கத்தையும் தேவைப்படுத்துகின்றது.

## E: பெண்களை வலுவூட்டல்



## நடவடிக்கைகளின் வகைகள்

இந்த மூலோபாயத்தின் கீழ் உள்ள நடவடிக்கைகளில் பெண்களின் தொழிற்துறை, நிதியியல் மற்றும் வாழ்க்கைத் திறன்களை கட்டியெழுப்புவதற்கு, சமமற்ற தலைமுறையுரிமை மற்றும் சொத்து உரிமை ஆட்சிகள் போன்ற சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உள்ளடங்கலுக்கான தடைகளை நிவர்த்தி செய்தற்கு மற்றும் சமூக வலைப்பின்னல்கள் மற்றும் கூட்டு நிறுவனத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆகியன உள்ளடங்கும். இந்த மூலோபாயங்கள் பெண்களின் உறவுகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களிலுள்ள சமத்துவமின்மை மற்றும் கீழ்ப்படிதலை சவாலுக்குள்ளாக்குவதற்கு பெண்களின் தனிநபர், குழு மற்றும் கூட்டு சக்தியை கட்டியெழுப்புவதனை நோக்கமாகக் கொண்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில், நிகழ்ச்சித் திட்டங்கள் பொருளாதார அல்லது சமூக வலுவூட்டலில் மட்டுமே முழுமையாக கவனம் செலுத்துகின்றதுடன், பிற நிகழ்ச்சித் திட்டங்கள் சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை இணைக்கின்றன. பின்வரும் அட்டவணை RESPECT கட்டமைப்பில் இடம்பெற்றுள்ள முக்கியமான அணுகுமுறைகளை காட்டுவதுடன் தற்போதைய சான்று அடிப்படையின் சுருக்கமான கண்ணோட்டத்தையும் உதாரணமான நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகிறது.

**LEGEND**

- ● **தெளிவானது,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க குறைவினை காட்டுகின்றது
- ■ **மேலதிக சான்றுகள் தேவை,** >1 மதிப்பீடு வன்முறை தொடர்பான நடவடிக்கைகளில் நடுத்தரமான முன்னேற்றத்தை காட்டுகின்றது
- ◆ **முரண்பாடான நிலை,** மதிப்பீடுகள் வன்முறை குறைத்தலில் முரண்பாடான முடிவுகளை காட்டுகின்றது
- □ **சான்றுகள் இல்லை,** நடவடிக்கைகள் இன்னமும் வலுவாக மதிப்பிடப்படவில்லை
- ▼ **செயற்திறனற்ற நிலை,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் எவ்விதமான குறைவையும் காட்டவில்லை
- H உலக வங்கி உயர் வருமானமுள்ள நாடுகள் (HIC)
- L உலக வங்கி நடுத்தர மற்றும் குறைந்த வருமானமுள்ள நாடுகள் (LMIC)

| நடவடிக்கையின் வகை | விபரம் | | விளைதிறனுக்கான சான்று | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **பெண்கள் அல்லது பெண் பிள்ளைகளுக்கான வாழ்க்கை திறன்கள், பாதுகாப்பான இடங்கள்[4] மற்றும் வழிகாட்டுதல் உள்ளிட்ட வலுவூட்டல் பயிற்சி** | இது பெண்கள் அல்லது பெண் பிள்ளைகளுக்கான வாழ்க்கை திறன்கள், பாதுகாப்பான இடங்கள் மற்றும் வழிகாட்டுதல் உள்ளிட்ட சமூக வலுவூட்டலில் கவனம் செலுத்தப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடங்குகின்றது<br><br>இது மேலும் பாலியல் தொழிலாளர்கள் போன்ற நலிவுற்ற பெண் குழுக்களுடனான கூட்டு வலுவூட்டலையும் உள்ளடக்கலாம். | ● L<br><br>■ H | இந்த வகை நடவடிக்கை பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் நெருங்கிய துணையின் வன்முறை (IPV) உள்ளிட்ட வன்முறை அனுபவத்தை குறைக்க உதவும் என்று LMIC களிலிருந்தான **தெளிவான சான்றுகள்** உள்ளன.<br><br>இந்த வகை அணுகுமுறைகள் வன்முறையில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதற்கு HIC களிலிருந்து மேலதிக சான்றுகள் தேவை.<br><br>இளவயது பெண்களுடன் பணிபுரியும் போது, ஒரு வருடம் அல்லது அதற்கு அதிகமாக வழங்கப்பட்ட தீவிர குழு அடிப்படையிலான சமூக வலுவூட்டல் நடவடிக்கைகள் அதிக செயற்திறனான அணுகுமுறைகளாக இருக்கும்.[5] | The Adolescent Girls Initiative (AGI) (கென்யா)<br><br>AVAHAN sex worker collectivisation (இந்தியா) |

| நடவடிக்கையின் வகை | விபரம் | | விளைதிறனுக்கான சான்று | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **தலைமுறையுரிமை மற்றும் சொத்து உரிமை கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள்** | நிலம் மற்றும் பிற உற்பத்தித்திறனான சொத்துக்கள் மீதான பெண்களின் அணுகல் மற்றும் கட்டுப்பாட்டை அதிகரிப்பதற்காக தலைமுறையுரிமை மற்றும் சொத்து உரிமைகள் தொடர்பான சட்டங்களை மேம்படுத்துவதையும் அத்துடன் பெண்களின் மதிப்பை அவர்களின் குடும்பங்களுக்கு அதிகரித்தலையும் இலக்காகக் கொண்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும். | L<br>H | சமமற்ற தலைமுறையுரிமை மற்றும் சொத்து ஆட்சிகளை சீர்திருத்துவது பெண்களுக்கு எதிரான வன்முறையின் (VAW) ஒட்டுமொத்த அளவைக் குறைப்பதற்கான ஒரு முக்கியமான பகுதி என்பதற்கு LMIC களிலிருந்து **தெளிவான சான்றுகள்** உள்ளன. இதில், பரம்பரை உரிமைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாக வழங்கப்பட்ட மாநிலங்களில் பொலிஸாருக்கு அறிக்கையிடப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறையின் (VAW) மொத்த அளவு 1976 முதல் 2004 வரை 36% குறைந்துள்ள இந்தியாவிலிருந்தான பகுப்பாய்வும் உள்ளடங்குகின்றது. HICகளிலிருந்து எவ்வித சான்றுகளும் இல்லை. | The change in inheritance law (இந்தியா) |
| **பால்நிலை மற்றும் வலுவூட்டல் பயிற்சி கூறுகளுடன் இணைந்ததாக நுண்கடன் அல்லது சேமிப்பு மற்றும் கடன்கள்** | பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் கூறுகளை ஒன்றிணைக்கும் பல தெளிவான அணுகுமுறைகள் உள்ளன. இந்த நடவடிக்கைகள் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் வலுவூட்டலில் முழுமையான பார்வையை எடுப்பதுடன், பெண்களின் சமூக திறன் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பல் மற்றும் அவர்களின் நிதியியல் அறிவு மற்றும் சுதந்திரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் செயற்பாடுகளை ஒன்றிணைக்கின்றது. சில நடவடிக்கைகள் எந்தவொரு சாத்தியமான பின்னடைவையும் குறைப்பதற்காகவும் ஆண்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும் ஆண் பங்காளர்களை அல்லது இளைஞர்களை சகாக்களாக ஈடுபடுத்துகின்றன. ஏனைய வகை நடவடிக்கைகள் ஆண்கள் மற்றும் இளைஞர்களை நிகழ்ச்சித் திட்டத்தில் அதிகளவு ஆழமாக ஈடுபடுத்துகின்றன, அதனால் ஆண்கள் மற்றும் இளைஞர்களும் கூட முழுமையான பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டலை பெறுகின்றனர். | | பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் கூறுகளை (பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்த வாழ்க்கை திறன்கள், பாதுகாப்பான இடம் மற்றும் வழிகாட்டுதல் உள்ளிட்ட) இணைக்கின்ற பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் சமூக வலுவூட்டலில் கவனம் செலுத்தப்பட்ட நடவடிக்கைகளால் அவர்களின் நெருங்கிய துணையின் வன்முறை (IPV) அனுபவங்களை குறைப்பதற்கு பணியாற்ற முடியும் என்பதற்கு LMIC களிலிருந்து **தெளிவான சான்றுகள்** உள்ளன. இந்த நடவடிக்கைகள் எப்போது ஆண்கள் மற்றும் இளைஞர்களை ஈடுபடுத்துகின்றனவோ, அப்போது அவர்களால் ஆண்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட நெருங்கிய துணையின் வன்முறை (IPV) குற்றங்களைக் குறைக்க முடியும் என்பதற்கும் சான்றுகள் உள்ளன. HIC களிலிருந்து எவ்வித சான்றுகளும் இல்லை. | MAISHA (தன்சானியா)<br><br>Zindagii Shoista (தஜிகிஸ்தான்)<br><br>Do Kadam Barabari Ki Ore (Two Steps Towards Equality) (இந்தியா) |

## உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள்

பின்வரும் அட்டவணை நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) நிகழ்வுகளின் குறைவினை வெளிப்படுத்திய மூன்று வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைச் சுருக்கமாகக் காட்டுகிறது. இந்த முறைகளில் ஏதேனும் ஒன்றை பின்பற்றும்போது, RESPECT கட்டமைப்பின் பக்கம் 8 இல் வழங்கப்பட்டுள்ள **வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்புப் பட்டியல்** மற்றும் **வினைத்திறனான நிகழ்ச்சித் திட்டத்திற்கான வழிகாட்டல் கொள்கைகளுடன்** அட்டவணை மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் பற்றிய மேலதிக தகவல்கள் **நிகழ்ச்சித் திட்ட சுருக்கங்களில்** வழங்கப்பட்டுள்ளன.

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| MAISHA (based on IMAGE)[6] | **நுண்கடனுடனான பால்நிலை வலுவூட்டல் நடவடிக்கை** சமூகங்களின் பொருளாதார நல்வாழ்வு மற்றும் சுதந்திரத்தை மேம்படுத்துவதையும் HIV ற்கு பாதிக்கப்படல் மற்றும் VAW இனை குறைப்பதையும் நோக்காக கொண்டது | தன்சானியா | ஸ்தாபிக்கப்பட்டுள்ள நுண்கடன் குழுக்களிலுள்ள வறிய கிராம பெண்கள் | முன்னரே ஸ்தாபிக்கப்பட்ட நுண்கடன் குழுக்களிலுள்ள பெண்கள் 20 வாரத்திற்கு மேற்பட்ட காலத்தில் **10 பங்கேற்பு வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்ட அமர்வுகளில்** பங்கேற்க அழைக்கப்பட்டனர். <br> ஒவ்வொரு அமர்வும் 1.5-2 மணி நேரம் நீடித்ததுடன், பயிற்சி பெற்ற பெண் வசதிப்படுத்துனர் மூலமாக Wanawake Na Maisha ('கிஸ்வாஹிலியில் பெண்கள் மற்றும் வாழ்க்கை') கலைத்திட்டம் வழங்கப்பட்டது. | 24 மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:** <br> எழுந்தமானமான கட்டுப்பாட்டு சோதனை (RCT) மற்றும் நெட்டாங்கான அளவறி ரீதியான ஆராய்ச்சி[7] <br> **தாக்கம்:** <br> • உடலியல் மற்றும் / அல்லது பாலியல் ரீதியாக நெருக்கமான துணையின் வன்முறையினை (IPV) அனுபவிக்கும் பெண்களின் ஆபத்து கால்வாசியாக குறைக்கப்பட்டது <br> • நெருக்கமான துணையின் வன்முறையினை (IPV) நோக்கிய மேம்படுத்தப்பட்ட நடத்தைகள் மற்றும் பெண்களின் அதிகரித்த தன்னம்பிக்கை |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| Zindagii Shoista **(கண்ணியத்துடன் வாழுதல்)** | பால்நிலை வலுவூட்டல், வருமானம் ஈட்டும் செயற்பாட்டை (IGA) உருவாக்குவதற்கான பயிற்சி மற்றும் இதனை குடும்பங்களினுள் ஆதரிப்பதற்கு நுண்நிதியளிப்பு ஆகியவற்றை ஒன்றிணைக்கின்ற **குடும்பத்தை மையமாகக் கொண்ட நடவடிக்கை.** | தஜிகிஸ்தானின் கிராமப்புறங்கள் | திருமணமான இளம் பெண்களும் அவர்களின் குடும்பங்களும் (திருமண உறவுகள் உட்பட) | இந்த நடவடிக்கை பல்வேறு தலைமுறையை கொண்ட குடும்பத்திலுள்ள நான்கு உறுப்பினர்கள் வரை அமுல்படுத்தப்பட்டதுடன் இதில் பின்வருவன அடங்குகின்றன:<br>• 10 வாரங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் பால்நிலை சமத்துவம், மரியாதையளித்தல், தொடர்பாடல், வன்முறையை குறைத்தல் தொடர்பான 10 சமூக வலுவூட்டல் அமர்வுகள்<br>• திருமணமான இளம் பெண்கள் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினரை இலக்கு வைத்து 10 வாரங்களுக்கு மேலாக நடாத்தப்படும் பால்நிலை, வேலை மற்றும் வாழ்வாதார வலுப்படுத்துதல், வணிக அபிவிருத்தி மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் (IGAs) உள்ளிட்ட பொருளாதார வலுவூட்டல் அமர்வுகள்<br>• ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு IGA இனை ஆரம்பிப்பதற்கு 370 அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது<br>• IGA இனை மேற்பார்வை செய்தலும் உதவுதலும்[8] | 18+ மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:**<br>கலப்பு முறை மதிப்பீடு[9]<br>**தாக்கம்:**<br>• குறிப்பிடத்தக்க நேர்மறையான மாற்றங்கள் உறவுப் பரிமாணத்தில், உள ஆரோக்கியத்தில் மற்றும் சமூக பொருளாதார அந்தஸ்தில் காணப்பட்டது<br>• ஆண்களாலும் (குற்றம்) மற்றும் பெண்களாலும் (அனுபவம்) அறிக்கையிடப்படும் IPV அனைத்து வடிவங்களிலும் புள்ளிவிபரவியல் ரீதியான குறிப்பான குறைவு காணப்பட்டது. |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| உலக உணவுத் திட்ட பணப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் **(ஈகுவடோர்)** | உலக உணவுத் திட்டத்தால் (WFP) அமுலாக்கப்பட்ட உணவுப் பன்முகத்தன்மை மற்றும் ஊட்டச்சத்து, உணவுப் பாதுகாப்புக் களம் தொடர்பான பெண்களின் பேரம் பேசும் திறன் மற்றும் ஈகுவடோர் சமூகங்களில் கொலம்பிய அகதிகளை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்ட நிபந்தனை அடிப்படையிலான பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம். | வடக்கு ஈகுவடோரின் வறிய நகர்ப்புற பிரதேசங்கள் | கொலம்பிய அகதிகள் மற்றும் ஈகுவடோர் வாழ் மக்கள் உட்பட வறிய பெண்கள் (வயது வந்த பெண் இல்லாத சிறுபான்மை குடும்பங்களில் ஆண்களும் இலக்காக கொள்ளப்பட்டனர்) | பங்குபெறும் குடும்பங்களில் உள்ள பெண்கள் (மற்றும் சில ஆண்கள்) மாதமொன்றிற்கு அண்ணளவாக $40 (அண்ணளவாக குடும்ப நுகர்வில் 11%) இற்கு சமமான பரிமாற்றங்களை பணம், உறுதிச்சீட்டுக்கள் மற்றும் உணவு வடிவில் பெற்றனர். பரிமாற்றங்கள் 6 மாத காலத்திற்கு மாதாந்த ஊட்டச்சத்து பயிற்சிநெறிகளுக்கு வருகை தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்டன. | 06 மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:** எழுந்தமானமான கட்டுப்பாடு பரிசோதனை (RCT)[16]<br>**தாக்கம்:** சுமார் 6 மாதகால பரிமாற்றங்களுக்குப் பிறகு, நெருக்கமான துணையால் ஏற்படும் உடலியல் மற்றும்/அல்லது பாலியல் வன்முறைகள் 30% குறைவதாக மீளாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. VAW ஐக் குறைப்பதில் உள்ள பல்வகையான பரிமாற்றங்களைப் போலவே **முதலீட்டு பரிமாற்ற** வகையின் அடிப்படையில் பணமும் விளைதிறனானதாக இருந்தது என்பதைக் காட்டும் வகையில் முடிவுகள் மாறுபடவில்லை. மூன்று நிரப்பு வழிகள் குறைப்பிற்கு வழிவகுத்ததாக பகுப்பாய்வு பரிந்துரைக்கிறது: 1) நாளாந்த குடும்ப பணம் தேவைகளுக்கான பேச்சு வார்த்தை அவசியத்தால் ஏற்பட்டதாக கூறப்பட்ட திருமண மோதல்கள் குறைவடைந்தது, 2) அதிகரித்த குடும்ப நல்வாழ்வு மற்றும் மகிழ்ச்சி மற்றும் 3) பெண்களின் அதிகரித்த தீர்மானம் மேற்கொள்ளல், தன்னம்பிக்கை மற்றும் நடமாடும் சுதந்திரம். |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீட்டு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| **HPTN 068, தென் ஆபிரிக்காவில் HIV இனைக் குறைப்பதற்கான நிபந்தனையுடனான பணப் பரிமாற்றம்** | பெண்பிள்ளைகள் மற்றும் இளம் பெண்களின் பாடசாலைக்கான வருகை குறித்த நிபந்தனைக்குட்பட்ட பணப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் | கிராமப்புற தென் ஆபிரிக்கா | இடைநிலை பாடசாலை வயதுடைய இளம் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் (வயது 13 - 20) மற்றும் அவர்களின் பெற்றோர் மற்றும்/அல்லது பாதுகாவலர்கள் | பெண் பிள்ளைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு பாடசாலை நாட்களில் குறைந்தபட்சம் 80% இடைநிலைப் பாடசாலை வருகை எனும் நிபந்தனையின் அடிப்படையில் பணம் மாற்றப்பட்டது. பணமானது நிகழ்ச்சித் திட்டத்தின் முன்பான மாதாந்த குடும்பச் செலவில் அண்ணளவாக 15.7% என்பதுடன், ஒவ்வொரு மாதமும் சிறுமிகளுக்கு $10 மற்றும் அவர்களின் பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு $20 ஆகும். | 3 வருடங்களுக்கு மேற்பட்டது | **மதிப்பீட்டு வகை:** RCT[17]<br>**தாக்கம்:** பணப் பரிமாற்றத்தின் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு பெண்பிள்ளைகள் மற்றும் இளம் பெண்களின் உடலியல் ரீதியான IPV அனுபவங்கள் 34% இனால் குறைவடைந்ததை மதிப்பீடு கண்டறிந்தது. பணப் பரிமாற்றங்கள் இளம் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் சாத்தியமான வன்முறைப் பங்காளிகளுக்கு வெளிப்படுவதைக் குறைத்து, அவர்களின் பாலியல் அறிமுகத்தைத் தாமதப்படுத்துவதுடன் பாலியல் பங்காளரின் எண்ணிக்கையைக் குறைக்கிறது என்று பகுப்பாய்வு பரிந்துரைக்கின்றது. |

# வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்பு பட்டியல்

VAW இன் அளவைக் குறைப்பதில் வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளுக்கான வினைத்திறனான அணுகுமுறைகளின் பொதுவான கூறுகள் மற்றும் கொள்கைகள் பின்வருமாறு-

## நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு மற்றும் இசைவாக்கம்

**பொருளாதார நிகழ்ச்சித் திட்டவாக்கத்திற்கான வழங்கலின் தரம் மற்றும் போதியளவான அனுகூல நிலைகளை உறுதி செய்தல்.** வறுமையை நிவர்த்தி செய்வது பங்கேற்பாளர்களுக்கு நிலைமாற்றும் ஆற்றலைக் கொண்டிருக்கும் அதே வேளையில், வழங்கலின் தரம் மற்றும் அனுகூல நிலைகள் முக்கியமானவையாகும். உதாரணமாக, கணிக்க முடியாத வழங்கலுடன் குறைந்த மதிப்புடைய அல்லது மோசமாக அமுல்படுத்தப்பட்ட பணப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் பரவலான நன்மையான விளைவுகளைக் கொண்டிருக்க வாய்ப்பில்லை. அதேபோல், வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் கொள்கைகள் மற்றும் சுரண்டலுள்ள வேலைவாய்ப்பு அல்லது பாதுகாப்பற்ற நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள், அல்லது பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை கொண்டவை ஆகியவற்றிற்கு பால்நிலைத் தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பில்லை. வாழ்வாதாரப் பயிற்சிநெறி அமைப்பிற்கு பொருத்தமானதாக இருக்க வேண்டியதுடன் திறமையான பயிற்சியாளர்கள் மற்றும் வழிகாட்டிகள் மூலமாக வழங்கப்பட வேண்டும். அதிகமான மற்றும் கொள்ளையடிக்கும் வட்டி விகிதங்களை வசூலிக்கும் சேமிப்பு மற்றும் கடன் திட்டங்கள் வறுமை அல்லது வறுமை தொடர்பான உளஅழுத்தத்தைக் குறைக்க வாய்ப்பில்லை. எனவே, VAW ஐக் குறைப்பதில் மற்றும் நிவர்த்தி செய்வதில் வெற்றிபெற, வறுமைக் குறைப்பில் வலுவான தாக்கத்தை அடைவதில் நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு முதலில் வெற்றிபெற வேண்டும்.

1. **VAW தடுப்புக்கான முக்கிய பாதைகளை நிவர்த்தி செய்வதற்காக பரிமாற்ற நடவடிக்கைகளை வடிவமைத்து இசைவாக்கல்.** VAW மீதான வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளின் தாக்கத்தை மேம்படுத்துவதற்கு, வழங்கப்பட்ட அமைப்பிற்குள் செயற்படும் VAW இனைக் குறைப்பதற்கு சாத்தியமான பாதைகளில் சூழல் மற்றும் வடிவமைப்பு அம்சங்கள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை கவனமாகக் கருத்திற் கொள்வது முக்கியமானதாக இருக்கின்றது. உதாரணமாக, பொருளாதாரப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களில், ஆண் குடும்பத் தலைவர்களுக்கோ அல்லது பெண்களுக்கோ பணப்பரிமாற்றம் வழங்கப்படுமாயின் குடும்பங்களுக்கிடையான உறவுகளில் எதிர்பார்க்கப்படும் தாக்கம், பரிமாற்றம் நேர்மறையான பால்நிலை விழுமியங்களை ஊக்குவிக்கிறதா என்பது தொடர்பான செய்தி மற்றும் குடும்பங்களுக்குள்ளான இயக்கத்தை மாற்றவும், பின்னடைவை தணிப்பதற்கும் அவசியமாக இருக்கின்ற குழுப்பயிற்சிகள் போன்ற ஏதேனும் நிபந்தனை அம்சங்கள்.[18] இந்தக் காரணிகள் குறிப்பிட்ட இலக்குக் குழுவின் பால்நிலை சமத்துவமின்மைகள், பால்நிலை தொடர்பான நெறிமுறைகள் மற்றும் பரிசீலனைகள் உள்ளிட்ட அமைப்புக்களின் மூலம் தீர்மானிக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன.

2. **VAW இன் நிலைகள் மீது இன்றுவரை சான்றுகள் தொடர்ச்சியான தாக்கங்களைக் காட்டாததால், தனித்த தொழிற்படை அல்லது நுண் நிதித் நடவடிக்கைகளின் மேலதிக சோதனைகள் தேவைப்படுகிறது.**[19] இதற்கு LMIC களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான வலுவான ஆய்வுகள் மற்றும் ஏனைய தொகுக்கப்பட்ட கூறுகளுக்கு எதிராக பொருளாதாரக் கூறுகளின் குறிப்பிட்ட பங்களிப்பைத் வெளிப்படுத்தும் ஆய்வுகளின் வரையறுக்கப்பட்ட திறன் ஆகியன பகுதியளவில் காரணமாகும். சாத்தியமான தாக்கத்தின் வலுவினை மதிப்பிடுவதற்கு, அத்தகைய நிகழ்ச்சித் திட்டமாக்கலின் பொருளாதார செயற்திறனைப் பற்றிய பரந்த விடயங்களுக்கு பரிசீலனைகள் வழங்கப்பட வேண்டும்.[20] எனவே, இந்த வகையான நிகழ்ச்சித் திட்டங்களைப் பரிந்துரைக்கும் முன் கவனமான பரிசீலனை மற்றும் மேலதிக பரிசோதனை தேவைப்படுகின்றது.

3. **VAW தொடர்பான வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பயனுள்ள துணை நடவடிக்கைகளை உள்ளடக்குதல்.** குடும்பத்தினுள் பெண்களின் நிலையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேம்படுத்தும் பயனுள்ள துணை நடவடிக்கைகள் IPV தொடர்பில் நிலையான தாக்கத்தை ஏற்படுத்த முக்கியமானதாக இருக்கலாம். உதாரணமாக, வங்காள தேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பீடு, பரிமாற்றத்தைப் பெற்ற பங்கேற்பாளர்களிடையே உடலியல் ரீதியாக IPV இல் 26% குறைவு மற்றும் நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்து 6 முதல் 10 மாதங்களுக்குப் பின்பும் ஊட்டச்சத்து நடத்தை மாற்ற தொடர்பாடல் கூறுகள் தொடர்ச்சியாக காணப்பட்டன. ஆனால் பரிமாற்றத்தை மட்டுமே பெற்ற பங்கேற்பாளர்களிடையே அத்தகைய மாற்றம் காணப்படவில்லை.[21]

4. **நடவடிக்கைகளை எவ்வாறு கட்டமைப்பது என்பதை கவனமாகக் அவதானியுங்கள்.** உதாரணமாக, சிறுவர்களின் ஆரோக்கியம் அல்லது குடும்ப நல்வாழ்வைச் சுற்றி ஒரு பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்குவது மிகவும் பொதுவானதாகவும், மிகவும் இலகுவாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பதுடன், பெண்களின் வலுவூட்டலைச் சுற்றி நேரடியாக நிகழ்ச்சித் திட்டத்தை


உருவாக்குவதை விட, இதற்கு பின்னடைவைத் தூண்டுவதற்கான வாய்ப்புகள் குறைவாகும்.[22] ஏனைய VAW விடயங்களுடன் தொடர்ச்சியாக, இவற்றிற்கிடையிலான சமநிலையை ஆராய்வதற்கு எவ்விதமான அளவறிரீதியான சான்றுகளும் இல்லா நிலையில், எவ்வாறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்களால் (மற்றும் ஆண் ஈடுபாட்டால்) பார்க்கப்படுகின்றன மற்றும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பது VAW மீதான நிகழ்ச்சித் திட்டத்தின் தாக்கத்தை தீர்மானிப்பதில் முக்கியமான கூறாக இருக்கமுடியும் என்று நிபுணர்கள் அனுமானிக்கின்றனர்.

## அமுல்படுத்தல் மற்றும் தாக்கத்தை அதிகரித்தல்

5. **VAW குறைப்பிற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு வழிவகுக்கும் என்பதற்கான ஆதாரங்களை உருவாக்குவதற்காக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்புகளை வடிவமைத்தல்.** இது மாற்றத்திற்கான வழிகளை உள்ளடக்குவதற்காகவும், பல்வேறு கூறுகளின் நன்மைகளைப் புரிந்து கொள்வதற்காகவும் நம்பகரமான அளவறி ரீதியான மற்றும் பண்பறி ரீதியான முறைகளின் கலவையை (கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வழிகாட்டியைப் பார்க்கவும்) உள்ளடக்கியிருக்க வேண்டும். பொருத்தமான இடங்களில், மிகச்சிறிய மாற்றங்களை உள்ளடக்குவதற்கு VAW இனுடைய அனுபவம், இடம்பெற்ற தடவைகள் மற்றும் அதன் தீவிரம் ஆகிய இரண்டையும் உள்ளடக்க வேண்டும். முக்கியமாக, நன்மைகள் முடிவடைந்த பின்னர் நிகழ்ச்சித் திட்டத்திற்கு முன்னரான நிலைகளுக்கு VAW திரும்புகிறதா அல்லது நன்மையான தாக்கங்கள் நிலைத்திருக்கின்றதா என்பதைப் புரிந்து கொள்வதற்கு நடுத்தர மற்றும் நீண்ட கால தாக்கங்கள் (5-10 ஆண்டுகள்) மற்றும் நடவடிக்கையிற்குப் பின்னரான தாக்கங்கள் உட்பட நீண்ட கால எல்லைகளில் மேலான சான்றுகள் தேவைப்படுகின்றன.

6. **உடலியல் மற்றும் பாலியல் ரீதியான வடிவங்களுக்கு மேலதிகமாக, வன்முறையின் பொருளாதார மற்றும் உணர்ச்சி ரீதியான வடிவங்களில் தாக்கத்தை அளவிடுவதுடன் கண்காணிக்கவும்.** வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பொருளாதார மற்றும் உணர்ச்சி ரீதியான வன்முறையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லையென்பதுடன், சில மதிப்பீட்டு முடிவுகள் இந்த வன்முறை வடிவங்கள் உடலியல் மற்றும் பாலியல் ரீதியான வடிவங்களை விட கடினமாக இருக்கலாம் அல்லது வீட்டு மட்டத்தில் வளங்கள் மற்றும் பால்நிலை அதிகார பரிமாண மாற்றங்களுக்கான ஆண்களின் பதிலளிப்பின் விளைவாக அதிகரிக்கலாம் என்று பரிந்துரைக்கின்றன.

7. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், இயலாமை உடைய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள், இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் பலதார மணம் புரிந்த குடும்பங்கள் போன்ற **பல்வேறு வகையான குடும்பங்களில் ஏற்படும் தாக்கங்களை நன்கு புரிந்து கொள்வதற்கு தரவை பிரிக்கவும்**, உதாரணமாக, கானாவில் புதிய தாய்மார்களுக்கான LEAP 1000 பணப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பீட்டின்படி, நடவடிக்கை முழு நடவடிக்கையிலும் IPV நிகழும் தடவைகளை குறைத்த போதிலும், IPV இன் அனுபவம் (பலதார மணம் புரிந்த குடும்பங்கள் IPVயின் உயர் விகிதங்களைக் கொண்டிருப்பினும்) ஒருதார மணம் புரிந்த குடும்பத்தில் மட்டுமே குறைக்கப்பட்டது.[23] மாறாக, ஆண் குடும்பத் தலைவர்களை இலக்காகக் கொண்டு மாலியில் இடம்பெற்ற தேசிய பணப் பரிமாற்றத் திட்டத்தின் மதிப்பீடு பலதார மணம் கொண்ட குடும்பங்களில் IPV இல் குறிப்பிடத்தக்க குறைவுகளைக் கண்டறிந்தது எனினும் ஒருதார மணம் புரிந்த குடும்பங்களில் மட்டுப்படுத்தப்பட்டளவிலான தாக்கங்களையே காட்டியது.[24] இதற்கான விளக்கம் சூழல் சார்ந்ததாக இருக்கலாம் என்றாலும், இந்த வெளிவரும் சான்றுகள் வன்முறையின் நிலைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டமாக்கத்திற்கான பதிலளிப்புகள் ஆகிய இரண்டும் வீட்டின் கட்டமைப்பால் வேறுபட்டதாக இருக்கலாம் என்று பரிந்துரைக்கின்றது.



## நுழைவுப்புள்ளிகள்

பின்வரும் அட்டவணை தற்போதுள்ள வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது தளங்களில் IPV மீதான நேர்மறையான தாக்கங்களை அதிகரிக்கும் அதே நேரத்தில் சாத்தியமான எதிர்மறை தாக்கங்களைக் குறைப்பதுடன் தொடர்புடைய மூலோபாயத்திற்கான பிரதான நுழைவுப்புள்ளிகளை சுட்டிக்காட்டுகின்றது. இது சில நிகழ்ச்சித் திட்ட உதாரணங்களை மேலும் உள்ளடக்குகின்றது.

| நுழைவுப் புள்ளி | விளக்கம் |
| --- | --- |
| **சமூக பாதுகாப்பு வலையமைப்புக்கள்**<br>• நேரடியான பொருளாதார பரிமாற்றம் | LMIC களில் உள்ள 2.5 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் பொருளாதார பரிமாற்றங்கள் உட்பட சில வகையான சமூக பாதுகாப்பு வலையமைப்புக்களின் மூலமாக பாதுகாக்கப்பட்டுள்ளனர்.[25] குறைந்தளவு வள அமைப்புகளில் அவர்களின் பரந்த மற்றும் விரிவாக்கமான அடைதல் காரணமாகவும், பெண்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவுற்ற குழுக்களை நேரடியாக இலக்காக கொள்ளும் அவர்களின் திறன் காரணமாகவும் சமூக பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் கொள்கை வகுப்பாளர்களுக்கு தாக்க அதிகரிப்புடனான விளைவுகளை அடைவதற்கு முன்னெப்போதும் அல்லாத வாய்ப்பை வழங்குகின்றன.<br><br>VAW ஐக் குறைப்பதனை நேரடியான நோக்காக கொண்டிராத பொருளாதார பரிமாற்றங்கள் கூட IPV இல் பாரியளவிலான குறைப்புகளுக்கு வழிவகுக்க முடியும் என்பதை வெளிவருகின்ற சான்றுகள் நிரூபித்துள்ளன. வடிவமைப்பை மாற்றுவது அல்லது குறித்த நோக்குடன் சமாளிப்பதற்காக குடும்பங்களுக்கிடையான பரிமாணங்கள், பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் குடும்ப பொருளாதார நல்வாழ்வு உள்ளிட்ட மேலதிக கூறுகளைச் சேர்ப்பதன் ஊடாக பிரதான வழிமுறையை மாற்றுவது பெரியளவான மற்றும் அதிக நிலைத்தன்மையான VAW குறைப்பிற்கு வழிவகுக்க முடியும்.<br><br>உதாரணமாக, பங்களாதேசின் மேலதிகமான நடத்தை மாற்றக் கூறு பரிமாற்றுகின்ற ஆராய்ச்சி முயற்சி மாதிரி (இதில் தாய்மார்கள் மற்றும் சமூக ஈடுபாட்டுக்கான இடைத்தொடர்பு குழு பயிற்சியும் உள்ளடங்கும்) உணவு மற்றும் பணப் பரிமாற்றம் முடிவடைந்து ஆறு முதல் பத்து மாதங்களுக்குப் பின்னர் வரை முடிவுகளை நிலைநிறுத்துவதற்கு மையமாக இருந்தது. இந்த நடவடிக்கையின் மதிப்பீடு இந்த மேலதிக கூறு பெண்களின் அதிகரித்த சமூக மூலதனம் மற்றும் பேரம்பேசும் திறன், வன்முறையைத் ஏற்படுத்தும் ஆண்களுக்கு பாரிய சமூக செலவீனங்கள் மற்றும் குடும்ப நலனில் நீண்டகால முன்னேற்றங்கள் உட்பட VAW குறைப்புக்கான மூன்று பிரதான வழிமுறைகளில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியதற்கான சான்றுகள் கண்டறியப்பட்டன.[26] |
| **சேமிப்பு மற்றும் கடன் சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், சமூக பாதுகாப்பு சங்கங்கள் போன்ற ஏற்கனவேயுள்ள சமுதாயம் சார்ந்த பொருளாதார நிறுவனங்கள்** | தனித்த நடவடிக்கையாக செயற்படுவதற்கு மேலதிகமாக, ஏற்கனவேயுள்ள சமூக மட்டத்தில் உள்ள பொருளாதார கட்டமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் மற்ற வகை VAW தடுப்பு பணிகளுக்கான செலவு விளைதிறனான மற்றும் அளவிடக்கூடிய நுழைவுப்புள்ளியை வழங்கலாம். தனியாக இந்த வகையான நடவடிக்கைகள் VAW ஐக் குறைப்பதில் செயற்திறனானவையாக இருப்பதற்கான வலுவான ஆதாரம் இல்லை எனினும், தொகுக்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக உள்ளன என்று நிரப்பு சான்றுகள் தெரிவிக்கின்றன. இந்த நடவடிக்கைகள் பொருளாதார கூறுகளுக்கு இணையாக பெண்களின் சமூக திறன்கள், நம்பிக்கை மற்றும் வலையமைப்புகளை கட்டியெழுப்புவதன் மூலமாக பணியாற்றின.<br><br>உதாரணமாக, ருவாண்டாவில் Indashyikirwa நடவடிக்கை சமத்துவமற்ற உறவுப் பரிமாணத்தை மேம்படுத்தவும் IPV இனைக் குறைப்பதற்காகவும் தம்பதிகளை ஈடுபடுத்துவதற்காக CARE இனுடைய ஏற்கனவேயுள்ள VSLA இனை நுழைவுப் புள்ளியாக பயன்படுத்தி வெற்றிகரமாக கட்டியமைக்கப்பட்டது.[27] எனவே, பொருளாதார நிகழ்ச்சித் திட்டவாக்கம் பங்காளர்களால் மற்றும் பரந்த சமுதாயத்தால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வலையமைப்பு மூலம் பெண்களை அணுகவும் ஈடுபடுத்தவும் பயனுள்ள தளமாக இருந்தது.<br><br>தான்சானியாவில், MAISHA நடவடிக்கை பெண்கள் அனுபவிக்கும் உடலியல் மற்றும்/அல்லது பாலியல் ரீதியான IPV அபாயத்தைக் குறைப்பதற்காக பால்நிலை வலுவூட்டல் நடவடிக்கையுடனான நுண்நிதியுடன் இணைந்தது.[28] தொகுக்கப்பட்ட அணுகுமுறைகள் தொடர்பான மேலதிக தகவல்கள் **உறவுமுறை திறன்கள் பலப்படுத்தப்பட்டது மற்றும் பெண்களின் வலுவூட்டல் தொடர்பான RESPECT மூலோபாய சுருக்கங்களில்** காணலாம். |

# பிரதானமான வளங்கள்

## சான்று மீளாய்வுகள்

A Mixed-Method Review of Cash Transfers and Intimate Partner Violence in Low- and Middle-Income Countries. Buller, A. M., Peterman, A., Ranganathan, M., Bleile, A., Hidrobo, M., & Heise, L. The World Bank Research Observer, 33(2), pp.218–258. 2018
குறைந்த மற்றும் நடுத்தர-வருமான நாடுகளில் பதினான்கு அளவறிரீதியான மற்றும் எட்டு பண்பறிரீதியான ஆய்வுகளின் ஆய்வுகளைக் கொண்ட இந்த கலப்பு-முறை மீளாய்வு பணப் பரிமாற்றம் IPV ஐப் பாதிக்கும் மூன்று வழிகளை முன்மொழியும் ஒரு நிகழ்ச்சித்திட்ட கோட்பாட்டை உருவாக்கியது: 1) பொருளாதார பாதுகாப்பு மற்றும் உணர்ச்சி நல்வாழ்வை அதிகரித்தல், 2) குடும்பங்களுக்கு இடையேயான முரண்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் 3) பெண்கள் வலுவூட்டலில் ஏற்படும் மாற்றங்கள்.

What Works to Prevent Violence against Women and Girls? A Rigorous Global Evidence Review of Interventions to Prevent Violence against Women and Girls, Kerr Wilson A, Gibbs A, McAslan Fraser E, Ramsoomar L, Parke A, Khuwaja H and Jewkes R. What Works to Prevent VAWG. 2020
இந்த வலுவான சான்று மீளாய்வு IPV தடுப்பதன் மீதான பொருளாதார பரிமாற்ற திட்டங்கள், நுண்நிதி சேமிப்பு மற்றும் நிதி தலையீடுகள், மற்றும் ஒருங்கிணைந்த பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக வலுவூட்டல் தலையீடுகள் ஆகியவற்றின் முடிவுகளை அடையாளம் கண்டு வழங்குகிறது.

Humanitarian Cash Transfer Programming and Gender-Based Violence Outcomes: Evidence and Future Research Priorities, Cross, A, Manell, T. & Megevand, M. R. New York: Women's Refugee Commission and IRC. 2018.
இந்த அறிக்கை மனிதாபிமான சூழலில் பால்நிலை மற்றும் பண பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய 28 ஆய்வுகளின் சான்றுகளைச் சுருக்கமாகக் கூறுகிறது.

## சம்பவ ஆய்வுகள் மற்றும் சுருக்கங்கள்

Cash, food, and vouchers reduce intimate partner violence in urban areas in Ecuador. Cash Transfer and Intimate Partner Violence Research Collaborative. Washington, DC: International Food Policy Research Institute (IFPRI). 2019.
வடக்கு ஈக்வடாரில் உடல் மற்றும்/அல்லது பாலியல் IPV இல் 30 சதவீத குறைப்புக்கு வழிவகுத்த நகர்ப்புற ஏழைகளை இலக்காகக் கொண்ட குறுகிய கால உணவு, பணம் மற்றும் வவுச்சர் நிகழ்ச்சித் திட்டத்தின் தாக்கத்தை இந்த சம்பவ ஆய்வு சுருக்கமாகக் கூறுகிறது.

Food and cash transfers coupled with nutrition behaviour change communication lead to sustained reductions in intimate partner violence in Bangladesh. Cash Transfer and Intimate Partner Violence Research Collaborative. Washington, DC: International Food Policy Research Institute (IFPRI). 2019.
இந்த சம்பவ ஆய்வு, பங்களாதேசில் ஊட்டச்சத்து நடத்தை மாற்ற தொடர்பாடல் கூற்றுடன் இணைந்ததாக பொருளாதார பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கண்டறிவுகளை சுருக்கமாகக் கூறுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டம் உடலியல் IPV இல் 26% குறைப்புக்கு வழிவகுத்தது.

Cash transfers conditional on schooling reduce IPV among young women in South Africa. Cash Transfer and Intimate Partner Violence Research Collaborative. Washington, DC: International Food Policy Research Institute (IFPRI). 2019.
தென்னாப்பிரிக்காவில் உள்ள இளம்பெண்களை இலக்காகக் கொண்ட நிபந்தனை அடிப்படையிலான பணப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் தாக்கத்தை இந்தச் சுருக்கம் சுருக்கமாகக் கூறுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில், பரிமாற்றங்கள் பாலியல் உறவுக்கான அறிமுகத்தை தாமதித்தல், அவர்களுடைய பாலியல உறவுப் பங்காளர்களின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலமாக பெண்களை சாத்தியமான வன்முறை தொடர்புகளை தவிர்க்க அனுமதிப்பதன் மூலம் நெருங்கிய துணைவரின் உடல்ரீதியான வன்முறையை 34 சதவீதம் குறைக்க வழிவகுத்தது.

Getting down to business: Women's economic and social empowerment in Burundi. International Rescue Committee (IRC), New York: IRC.
இந்த சம்பவ ஆய்வு புருண்டியில் IRC இன் EA$E நிகழ்ச்சித் திட்டத்தின் (Economic And Social Empowerment for women) மதிப்பீட்டின் கண்டறிவுகளை சுருக்கமாகக் கூறுகிறது. இதன் முடிவுகள் VSLA இல் பால்நிலை கலந்துரையாடல் குழுவைச் சேர்ப்பதன் மூலம் IPV குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்தது என்று முடிவுகள் காட்டுகின்றன (கடந்த இரண்டு வாரங்களில் 22%). EA$E Programme Implementation Manual பார்க்கவும்.

### செயன்முறை வழிகாட்டுதல்

Resources for Mainstreaming Gender-Based Violence (GBV) Considerations in Cash and Voucher Assistance (CVA) and Utilizing CVA in GBV Prevention and Response. Women's Refugee Commission, Mercy Corps, IRC. New York: Women's Refugee Commission and IRC; Portland: Mercy Corps. 2020.
இந்த சுருக்கம் நெருக்கடி மற்றும் மோதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு GBV யிலிருந்து பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு பணம் மற்றும் GBV பயிற்சியாளர்களை ஆதரிக்கிறது.

Cash & Voucher Assistance and Gender-Based Violence Compendium: Practical Guidance for Humanitarian Practitioners. CARE and Cash Learning Partnership (CaLP). 2019.
இந்த தொகுப்பு மனிதாபிமான தரப்பினர்களுக்கு பணம் மற்றும் வவுச்சர் உதவி நடவடிக்கைகளில் (CVA) GBV ஆபத்துக் குறைப்பு மற்றும் தடுப்பு ஆகியவற்றையும் மற்றும் பொருத்தமான போது பதிலளிக்கும் வகையில் CVA ஐ GBV தடுப்புடன் ஒருங்கிணைக்க உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### நிகழ்நிலை அமர்வுகள்

Leveraging Cash Transfers to Reduce Intimate Partner Violence at Scale, Promise and Potential from Research around the Globe. The Transfer Project (2019) CSW63 Side Event [online video]. Available at: https://www.youtube.com/watch?v=dtNxb8FKmyc
இந்த CSW63 பக்க நிகழ்வு ஐ.நா பெண்கள் அமைப்பு, சிடா மற்றும் பிரதமர் அலுவலகம் (தான்சானியா) ஆகியவற்றால் தொகுக்கப்பட்டதுடன் பெண்களுக்கு எதிரான நெருங்கிய துணையிடமிருந்தான வன்முறையை (IPV) எவ்வாறு பணப் பரிமாற்றம் குறைக்க உதவும் என்பது குறித்து உலகம் முழுவதும் இருந்தான சான்றுகளை வழங்குகின்றது.

# இறுதிக் குறிப்புகள்

[1] வறுமை, பொருளாதாரப் பாதுகாப்பு, பொருளாதாரப் பாதுகாப்பின்மை, செல்வம், சொத்துக்கள் ஆகிய எண்ணக்கருக்களுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பதை இந்த மூலோபாயம் ஏற்றுக்கொள்கிறது, ஆனால் அவை கதை / கட்டமைப்பின் நோக்கங்களுக்காக ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட ஆராய்ச்சியை விவரிக்கும் போது தனிப்பட்ட குறிகாட்டிகளுக்கு மேலும் தனித்துவமான எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

[2] Stockl H, March LM, Pallitto C, et al. (2014) Intimate partner violence among adolescents and young women: prevalence and associated factors in nine countries: a cross sectional study. BMC Public Health. 2014;14:751;
Decker MR, Peitzmeier S, Olumide A, et al. (2014) Prevalence and health impact of intimate partner violence and non-partner sexual violence among female adolescents aged 15–19 years in vulnerable urban environments: a multi-country study. J Adolesc Health;55:S58–S67; Heise L, Kotsadam A. (2015) Cross-national and multilevel correlates of partner violence: an analysis of data from population-based surveys. Lancet Global Health. 2015;3:e332–e340. Jewkes, R. (2017) What are the drivers of violence against women and girls and how to prevent it. Presentation for What Works to Prevent VAWG.

[3] Peterman, A., Roy, S., and Ranganathan, M. (2019) How is economic security linked to gender-based violence? New insights from the Sexual Violence Research Initiative Forum 2019. IFPRI Blog.

[4] Gibbs, A and Bishop, K (2019) Combined economic empowerment and gender-transformative interventions. Evidence Review. What works to prevent VAWG programme.

[5] Ibid.

[6] சமூக பாதுகாப்பு வலைகள் 'ஏழைகள் அல்லது பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நோக்குடன் பணமாகவோ அல்லது பொருளாகவோ வழங்கப்படுகின்ற பங்களிக்காத நன்மைகள். அவை ஓய்வூதியங்கள் மற்றும் உடல்நலக் காப்பீடு, அத்துடன் தொழிலாளர் சந்தைக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் போன்ற பங்களிப்பு சமூகக் காப்பீட்டையும் உள்ளடக்கிய பெரிய சமூகப் பாதுகாப்பு அமைப்பின் ஒரு அங்கமாகும்' என வரையறுக்கப்படுகின்றன.
p.4 of Beegle, K., Coudouel, A. & Monsalve, E. (2019) Realizing the Full Potential of Social Safety Nets in Africa, Washington D.C.: World Bank.

[7] சான்று மதிப்பீடுகள் பெரும்பாலும் ஒன்றிற்கும் மேற்பட்ட நடவடிக்கைகளின் முறையான மதிப்பாய்வுகளிலிருந்து பெறப்படுகின்றன, அவை பெரும்பாலும் எழுந்தமானமான, தொகுதியாக்கப்பட்ட எழுந்தமானமான மற்றும் கட்டுப்பாட்டுப் பரிசோதனை முறைகள் உட்பட சோதனை வடிவமைப்புகளைப் பயன்படுத்துகின்றன. நீதித் துறை நடவடிக்கைகள் போன்ற சில மூலோபாயங்களுக்கு, குறைந்த தரமுடையவை என்று கருதப்பட்டாலும், நேரத் தொடர், அவதானிப்பு மற்றும் இடைப்பட்ட வடிவமைப்புகள் உள்ளிட்ட மாற்று மதிப்பீட்டு முறைகள் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வளர்ந்து வரும் துறையென்பதால், ஆய்வு வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டின் பாரியளவான அளவில் மாறுபாடுகள் உள்ளன. இந்த மீளாய்வுகள் மற்றும் கற்கைகளுக்கான சான்றுகள் குறிப்புகளின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ளன.

[8] உதா. சம சொத்துரிமை போன்ற சட்ட நடவடிக்கைகள் இந்தியாவில் நேரடி வறுமை நடவடிக்கை மூலோபாயங்களுடன் சிறப்பாகச் செயற்பட்டன. பார்க்க: Amaral, S (2017) Do Improved Property Rights Decrease Violence Against Women in India? Institute for Social and Economic Research.

[9] Buller, A. M., Peterman, A., Ranganathan, M., Bleile, A., Hidrobo, M., & Heise, L. (2018) A Mixed-Method Review of Cash Transfers and Intimate Partner Violence in Low- and Middle-Income Countries. The World Bank Research Observer, 33(2), pp.218–258.

[10] Ibid.

[11] Falb, K., Annan, J., Blackwell, A., & Stennes, J. (2019). Cash transfers in Raqqa Governorate, Syria: Changes over time in women's experiences of violence and wellbeing. Washington DC: International Rescue Committee and London: UK Department for International Development; Kerr Wilson A, Gibbs A, McAslan Fraser E, Ramsoomar L, Parke A, Khuwaja H and Jewkes R (2020) What Works to Prevent Violence against Women and Girls? A Rigorous Global Evidence Review of Interventions to Prevent Violence against Women and Girls, South Africa; What Works to Prevent VAWG

[12] Pettifor, A., MacPhail, C., Selin, A., Gómez-Olivé, F. X., Rosenberg, M., Wagner, R. G., Mabuza, W., Hughes, J. P., Suchindran, C., Piwowar-Manning, E., Wang, J., Twine, R., Daniel, T., Andrew, P., Laeyendecker, O., Agyei, Y., Tollman, S., Kahn, K., & HPTN 068 protocol team (2016). HPTN 068: A Randomized Control Trial of a Conditional Cash Transfer to Reduce HIV Infection in Young Women in South Africa-Study Design and Baseline Results. AIDS and behavior, 20(9), 1863–1882.

[13] Kerr Wilson A, Gibbs A, McAslan Fraser E, Ramsoomar L, Parke A, Khuwaja H and Jewkes R (2020) Ibid.

[14] The Trickle-Up programme comprised a control arm and an economic intervention-only arm, with VSLA, livelihoods training and start-up capital for women over a six-month period.

[15] Kerr Wilson A, Gibbs A, McAslan Fraser E, Ramsoomar L, Parke A, Khuwaja H and Jewkes R (2020) Ibid.

[16] Hidrobo, Melissa, Amber Peterman, and Lori Heise. (2016). "The Effect of Cash, Vouchers, and Food Transfers on Intimate Partner Violence: Evidence from a Randomized Experiment in Northern Ecuador." American Economic Journal: Applied Economics, 8 (3): 284-303.

[17] Pettifor, A., MacPhail, C., Huges, J., Selin, A., Wang, J., Gomez-Olive, F.X…Khan, K. (2016) The effect of a conditional cash transfer on HIV incidence in young women in rural South Africa (HPTN 068): a phase 3, randomized controlled trial. Lancet Global Health, 4(12) PE978-E988

[18] Prevention Collaborative (2019) Cash transfers and intimate partner violence: Findings from a review of quantitative and qualitative studies in low and middle-income countries. Prevention Collaborative evidence brief. Prevention Collaborative.

[19] Kerr Wilson A, Gibbs A, McAslan Fraser E, Ramsoomar L, Parke A, Khuwaja H and Jewkes R (2020) Ibid.

[20] Peterman A, Palermo TM, Ferrari G. (2018) Still a leap of faith: microfinance initiatives for reduction of violence against women and children in lowincome and middle-income countries. BMJ Glob Health;3:e001143. doi:10.1136/ bmjgh-2018-001143

[21] Roy, Shalini & Hidrobo, Melissa & Hoddinott, John & Ahmed, Akhter. (2018). Transfers, Behavior Change Communication, and Intimate Partner Violence: Post-Program Evidence from Rural Bangladesh. The Review of Economics and Statistics. 1-45.

[22] Buller, A. M., Peterman, A., Ranganathan, M., Bleile, A., Hidrobo, M., & Heise, L. (2018). Ibid.

[23] Peterman, A., Valli, E. & Palermo, T. (2020) Government Anti-Poverty Programming and Intimate Partner Violence in Ghana, Economic Development and Cultural Change (in press).

[24] Heath, R., Hidrobo, M., and Shalini, R (2020) Cash transfers, polygamy, and intimate partner violence: Experimental evidence from Mali Journal of Development Economics, Vol 143 March 2020

[25] The World Bank (2018) The State of Social Safety Nets 2018. World Bank. Washington DC.

[26] Roy, S., Hidrobo, M., Hoddinott, J., & Ahmed, A. (2019) Ibid.

[27] Dunkle, K., Stern, E., Chatterji, S,. and Heise, L., (2019) Indashyikirwa programme to reduce intimate partner violence in Rwanda: Report of findings from a cluster randomized control trial. CARE. London.

[28] Kapiga, S., Harvey, S., Mshana, G., Holm Hansen, C., Mtolela, G.J., Madaha, F. … & Watts, C. (2019). A social empowerment intervention to prevent intimate partner violence against women in a microfinance scheme in Tanzania: findings from the MAISHA cluster randomised controlled trial. The Lancet Global Health, 7(10), 1423- 34.

**© UN Women 2020**

**இந்த ஆவணம் ஐ.நா. பெண்கள் அமைப்பால் உத்தரவளிக்கப்பட்டதுடன் Social Development Direct இனால் உருவாக்கப்பட்டதுமான RESPECT கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் ஒரு பகுதியாகும், அதை இங்கே காணலாம்.**

**Suggested citation:** UN Women and Social Development Direct (2020) Preventing Violence Against Children and Adolescents, RESPECT: Preventing Violence against Women Strategy Summary.

# RESPECT WOMEN

## மூலோபாயச் சுருக்கம்

## பெண்களை வலுவூட்டல்

(Empowerment of women)

UN WOMEN

World Health Organization

# பெண்களை வலுவூட்டல்

**மூலோபாயத்தின் குறிக்கோள்:** பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கும், உறவுகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் குடும்பங்கள், சமுதாயங்கள் மற்றும் சமூகத்தினுள் சக்திமிக்க சமமான பால்நிலை உறவுகளை மேம்படுத்துவதற்காக பெண்களின் பொருளாதார, சமூக, உளவியல் மற்றும் அரசியல் வலுவூட்டலை வசதிப்படுத்துதல்.

## விளக்கம்

பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) என்பது சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்கள் கொண்டுள்ள தாழ்ந்த நிலையின் வெளிப்பாடென்பதால், சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் அரசியல் ரீதியான பெண்களின் வலுவூட்டல் பெண்களுக்கு[1] எதிரான வன்முறை (VAW) அபாயத்தைக் குறைப்பதற்கான ஒரு பாதுகாப்புக் காரணியாகும்.

இந்த மூலோபாயத்தின் கீழான நடவடிக்கைகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் தன்னம்பிக்கை மற்றும் சுயசெயற்திறன், உறுதிப்பாடு மற்றும் பேசித்தீர்க்கும் திறன் ஆகியவற்றை கட்டியெழுப்புகின்றன. அவை மேலும் பெண்களின் பொருளாதார அறிவு, சொத்துக்கள், சுயாட்சியை அதிகரிப்பதுடன் அவர்களின் ஆண்கள் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் மீதான நிதியியல் சார்ந்திருப்பை குறைக்கின்றன. வலுவூட்டல் மூலோபாயங்கள் பெண்கள் தங்களின் பேரம் பேசும் சக்தி, நம்பிக்கை, தீர்மானமெடுக்கும் சுயாட்சி ஆகியவற்றை அதிகரிக்க உதவுவதுடன் பாதுகாப்பு தொடர்பில் அவர்கள் சொந்தமாகவும் அவர்களின் குடும்பங்கள் சார்பிலும் செயற்படுவதற்கான தெரிவுகளையும் நிறுவனங்களையும் அவர்களுக்கு வழங்குகின்றது.

மூலோபாயம் சமூகங்களில் உள்ள நலிவடைந்த பெண்களின் குழுக்கள் (உதா. பெண் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் இயலாமைகள் உள்ள பெண்கள்) உட்பட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுடன் பணியாற்றுவதற்கான அணுகுமுறைகளை உள்ளடக்கியுள்ளது. பெண்களின் குறிப்பிட்ட குழுக்களுடனான அணுகுமுறைகள் மீதான கவனம் கூட பாகுபாடு மற்றும் சமத்துவமின்மையின் பல்தரப்பட்ட மற்றும் மேற்பொருந்தும் வடிவங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் யாரையும் பின்தள்ளி[2] விடவில்லை என்பதை உள்ளடக்கிய RESPECT இன் வழிகாட்டும் கொள்கையுடன் இணங்கியிருக்கின்றது. இது மேலும் இளம் வயது காரணமாக அதிகார பரிமாணத்தில் ஆபத்து மற்றும் ஓரங்கட்டப்படுதலை எதிர்கொள்ளும் இளம் பெண்பிள்ளைகளை இலக்காக கொண்ட முயற்சிகளையும் உள்ளடக்கும்.

## ஆபத்து மற்றும் பாதுகாப்பு காரணிகள்


இந்த மூலோபாயம் பின்வரும் ஆபத்துக் காரணிகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் பின்வரும் VAW க்கான பாதுகாப்புக் காரணிகளை ஊக்குவிக்கின்றன:

| நிலை | ஆபத்துக் காரணிகள் | பாதுகாப்புக் காரணிகள் |
|---|---|---|
| **தனிநபர் நிலை** | பொருளாதார பாதுகாப்பின்மை (பெண்கள்)<br>வன்முறையை இயல்பானது அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்கது என மன்னிக்கும் அல்லது நியாயப்படுத்தும் அணுகுமுறைகள் (பெண்கள் மற்றும் ஆண்கள்)<br>குறைந்த சுய செயற்திறன் மற்றும் சுயமரியாதை (பெண்கள்)[3] | பொருளாதார பாதுகாப்பின்மை (பெண்கள் மற்றும் ஆண்கள்)<br>நிதியியல் சுயாட்சி (பெண்கள்)<br>பால்நிலை சமத்துவமான அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகள் (பெண்கள் மற்றும் ஆண்கள்)<br>உயர்வான சுய-செயற்திறன் மற்றும் சுயமதிப்பு (பெண்கள்) |
| **நபர்களுக்கிடையிலான நிலை** | நெருங்கிய துணை மற்றும் திருமண உறவுகளிடம் அதிகளவான சமத்துவமின்மை<br>பெண்களின் நிதியியல் ரீதியான தங்கியிருத்தல் மற்றும் குடும்பங்களில் தீர்மானம் மேற்கொள்ளலில் மட்டுப்படுத்தப்பட்ட கருத்துச் சுதந்திரம் | பகிரப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் வீட்டுப் பொறுப்புகள் உள்ளிட்ட பால்நிலை சமத்துவத்தால் நெருக்கமான உறவுகள் வகைப்படுத்தப்படுதல்<br>கல்வி நிலைகளில் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே பாரியளவிலான சமத்துவம் |
| **சமுதாய நிலை** | ஆண்களை முன்னுரிமைப்படுத்துவதுடன் பெண்களின் சுயாட்சியை மட்டுப்படுத்தும் தீங்கு விளைவிக்கும் பால்நிலை விழுமியங்கள் | வன்முறையின்மையை ஆதரிக்கும் விழுமியங்கள், பன்முகத்தன்மை மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு மதிப்பளித்தல் மற்றும் பெண்களின் வலுவூட்டலை ஊக்குவித்தல் |
| **சமூக நிலை** | பெண்களின் தகுதிக்கு குறைவான பணி மற்றும் வேலையின்மை மற்றும்<br>சுரண்டலுக்குள்ளாக்கும் பணியிடச் சூழல்கள்<br>பெண்களின் குறைந்தளவிலான அரசியல் பங்கேற்பு | அதிகரித்த பெண்களின் வேலைவாய்ப்பு<br>அதிகரித்த பெண்களின் கல்வி<br>அரசியல் வாழ்வில் பெண்களின் முனைப்பான பங்கேற்பு |

## மாற்றத்தின் கோட்பாடு

பின்வரும் வரைபடம், பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) குறைப்புகளுக்கு வழிவகுக்கும் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பெண்களை வலுவூட்ட எதிர்பார்க்கும் சான்று அடிப்படையிலான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வதென்பதை காட்டுகின்ற எளிமையான மாற்றத்திற்கான கோட்பாட்டை வழங்குகின்றது. இது குறிப்பான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிக விருத்தியையும் இசைவாக்கத்தையும் தேவைப்படுத்துகின்றது.

## E: பெண்களை வலுவூட்டல்



## நடவடிக்கைகளின் வகைகள்

இந்த மூலோபாயத்தின் கீழ் உள்ள நடவடிக்கைகளில் பெண்களின் தொழிற்துறை, நிதியியல் மற்றும் வாழ்க்கைத் திறன்களை கட்டியெழுப்புவதற்கு, சமமற்ற தலைமுறையுரிமை மற்றும் சொத்து உரிமை ஆட்சிகள் போன்ற சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உள்ளடங்கலுக்கான தடைகளை நிவர்த்தி செய்தற்கு மற்றும் சமூக வலைப்பின்னல்கள் மற்றும் கூட்டு நிறுவனத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆகியன உள்ளடங்கும். இந்த மூலோபாயங்கள் பெண்களின் உறவுகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களிலுள்ள சமத்துவமின்மை மற்றும் கீழ்ப்படிதலை சவாலுக்குள்ளாக்குவதற்கு பெண்களின் தனிநபர், குழு மற்றும் கூட்டு சக்தியை கட்டியெழுப்புவதனை நோக்கமாகக் கொண்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில், நிகழ்ச்சித் திட்டங்கள் பொருளாதார அல்லது சமூக வலுவூட்டலில் மட்டுமே முழுமையாக கவனம் செலுத்துகின்றதுடன், பிற நிகழ்ச்சித் திட்டங்கள் சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை இணைக்கின்றன. பின்வரும் அட்டவணை RESPECT கட்டமைப்பில் இடம்பெற்றுள்ள முக்கியமான அணுகுமுறைகளை காட்டுவதுடன் தற்போதைய சான்று அடிப்படையின் சுருக்கமான கண்ணோட்டத்தையும் உதாரணமான நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகிறது.

**LEGEND**

- ● **தெளிவானது,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க குறைவினை காட்டுகின்றது
- ■ **மேலதிக சான்றுகள் தேவை,** >1 மதிப்பீடு வன்முறை தொடர்பான நடவடிக்கைகளில் நடுத்தரமான முன்னேற்றத்தை காட்டுகின்றது
- ◆ **முரண்பாடான நிலை,** மதிப்பீடுகள் வன்முறை குறைத்தலில் முரண்பாடான முடிவுகளை காட்டுகின்றது
- □ **சான்றுகள் இல்லை,** நடவடிக்கைகள் இன்னமும் வலுவாக மதிப்பிடப்படவில்லை
- ▼ **செயற்திறனற்ற நிலை,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் எவ்விதமான குறைவையும் காட்டவில்லை
- H உலக வங்கி உயர் வருமானமுள்ள நாடுகள் (HIC)
- L உலக வங்கி நடுத்தர மற்றும் குறைந்த வருமானமுள்ள நாடுகள் (LMIC)

| நடவடிக்கையின் வகை | விபரம் | விளைதிறனுக்கான சான்று | | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **பெண்கள் அல்லது பெண் பிள்ளைகளுக்கான வாழ்க்கை திறன்கள், பாதுகாப்பான இடங்கள்[4] மற்றும் வழிகாட்டுதல் உள்ளிட்ட வலுவூட்டல் பயிற்சி** | இது பெண்கள் அல்லது பெண் பிள்ளைகளுக்கான வாழ்க்கை திறன்கள், பாதுகாப்பான இடங்கள் மற்றும் வழிகாட்டுதல் உள்ளிட்ட சமூக வலுவூட்டலில் கவனம் செலுத்தப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடங்குகின்றது<br><br>இது மேலும் பாலியல் தொழிலாளர்கள் போன்ற நலிவுற்ற பெண் குழுக்களுடனான கூட்டு வலுவூட்டலையும் உள்ளடக்கலாம். | L<br><br>H | இந்த வகை நடவடிக்கை பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் நெருங்கிய துணையின் வன்முறை (IPV) உள்ளிட்ட வன்முறை அனுபவத்தை குறைக்க உதவும் என்று LMIC களிலிருந்தான **தெளிவான சான்றுகள்** உள்ளன.<br><br>இந்த வகை அணுகுமுறைகள் வன்முறையில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதற்கு HIC களிலிருந்து மேலதிக சான்றுகள் தேவை.<br><br>இளவயது பெண்களுடன் பணிபுரியும் போது, ஒரு வருடம் அல்லது அதற்கு அதிகமாக வழங்கப்பட்ட தீவிர குழு அடிப்படையிலான சமூக வலுவூட்டல் நடவடிக்கைகள் அதிக செயற்திறனான அணுகுமுறைகளாக இருக்கும்.[5] | The Adolescent Girls Initiative (AGI) (கென்யா)<br><br>AVAHAN sex worker collectivisation (இந்தியா) |

| நடவடிக்கையின் வகை | விபரம் | விளைதிறனுக்கான சான்று | | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **தலைமுறையுரிமை மற்றும் சொத்து உரிமை கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள்** | நிலம் மற்றும் பிற உற்பத்தித்திறனான சொத்துக்கள் மீதான பெண்களின் அணுகல் மற்றும் கட்டுப்பாட்டை அதிகரிப்பதற்காக தலைமுறையுரிமை மற்றும் சொத்து உரிமைகள் தொடர்பான சட்டங்களை மேம்படுத்துவதையும் அத்துடன் பெண்களின் மதிப்பை அவர்களின் குடும்பங்களுக்கு அதிகரித்தலையும் இலக்காகக் கொண்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும். | L<br>H | சமமற்ற தலைமுறையுரிமை மற்றும் சொத்து ஆட்சிகளை சீர்திருத்துவது பெண்களுக்கு எதிரான வன்முறையின் (VAW) ஒட்டுமொத்த அளவைக் குறைப்பதற்கான ஒரு முக்கியமான பகுதி என்பதற்கு LMIC களிலிருந்து **தெளிவான சான்றுகள்** உள்ளன. இதில், பரம்பரை உரிமைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாக வழங்கப்பட்ட மாநிலங்களில் பொலிஸாருக்கு அறிக்கையிடப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறையின் (VAW) மொத்த அளவு 1976 முதல் 2004 வரை 36% குறைந்துள்ள இந்தியாவிலிருந்தான பகுப்பாய்வும் உள்ளடங்குகின்றது. HICகளிலிருந்து எவ்வித சான்றுகளும் இல்லை. | The change in inheritance law (இந்தியா) |
| **பால்நிலை மற்றும் வலுவூட்டல் பயிற்சி கூறுகளுடன் இணைந்ததாக நுண்கடன் அல்லது சேமிப்பு மற்றும் கடன்கள்** | பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் கூறுகளை ஒன்றிணைக்கும் பல தெளிவான அணுகுமுறைகள் உள்ளன. இந்த நடவடிக்கைகள் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் வலுவூட்டலில் முழுமையான பார்வையை எடுப்பதுடன், பெண்களின் சமூக திறன் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பல் மற்றும் அவர்களின் நிதியியல் அறிவு மற்றும் சுதந்திரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் செயற்பாடுகளை ஒன்றிணைக்கின்றது. சில நடவடிக்கைகள் எந்தவொரு சாத்தியமான பின்னடைவையும் குறைப்பதற்காகவும் ஆண்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும் ஆண் பங்காளர்களை அல்லது இளைஞர்களை சகாக்களாக ஈடுபடுத்துகின்றன. ஏனைய வகை நடவடிக்கைகள் ஆண்கள் மற்றும் இளைஞர்களை நிகழ்ச்சித் திட்டத்தில் அதிகளவு ஆழமாக ஈடுபடுத்துகின்றன, அதனால் ஆண்கள் மற்றும் இளைஞர்களும் கூட முழுமையான பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டலை பெறுகின்றனர். | | பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் கூறுகளை (பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்த வாழ்க்கை திறன்கள், பாதுகாப்பான இடம் மற்றும் வழிகாட்டுதல் உள்ளிட்ட) இணைக்கின்ற பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் சமூக வலுவூட்டலில் கவனம் செலுத்தப்பட்ட நடவடிக்கைகளால் அவர்களின் நெருங்கிய துணையின் வன்முறை (IPV) அனுபவங்களை குறைப்பதற்கு பணியாற்ற முடியும் என்பதற்கு LMIC களிலிருந்து **தெளிவான சான்றுகள்** உள்ளன. இந்த நடவடிக்கைகள் எப்போது ஆண்கள் மற்றும் இளைஞர்களை ஈடுபடுத்துகின்றனவோ, அப்போது அவர்களால் ஆண்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட நெருங்கிய துணையின் வன்முறை (IPV) குற்றங்களைக் குறைக்க முடியும் என்பதற்கும் சான்றுகள் உள்ளன. HIC களிலிருந்து எவ்வித சான்றுகளும் இல்லை. | MAISHA (தன்சானியா)<br><br>Zindagii Shoista (தஜிகிஸ்தான்)<br><br>Do Kadam Barabari Ki Ore (Two Steps Towards Equality) (இந்தியா) |

## உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள்

பின்வரும் அட்டவணை நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) நிகழ்வுகளின் குறைவினை வெளிப்படுத்திய மூன்று வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைச் சுருக்கமாகக் காட்டுகிறது. இந்த முறைகளில் ஏதேனும் ஒன்றை பின்பற்றும்போது, RESPECT கட்டமைப்பின் பக்கம் 8 இல் வழங்கப்பட்டுள்ள **வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்புப் பட்டியல்** மற்றும் **வினைத்திறனான நிகழ்ச்சித் திட்டத்திற்கான வழிகாட்டல் கொள்கைகளுடன்** அட்டவணை மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் பற்றிய மேலதிக தகவல்கள் **நிகழ்ச்சித் திட்ட சுருக்கங்களில்** வழங்கப்பட்டுள்ளன.

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| MAISHA (based on IMAGE)[6] | **நுண்கடனுடனான பால்நிலை வலுவூட்டல் நடவடிக்கை** சமூகங்களின் பொருளாதார நல்வாழ்வு மற்றும் சுதந்திரத்தை மேம்படுத்துவதையும் HIV ற்கு பாதிக்கப்படல் மற்றும் VAW இனை குறைப்பதையும் நோக்காக கொண்டது | தன்சானியா | ஸ்தாபிக்கப்பட்டுள்ள நுண்கடன் குழுக்களிலுள்ள வறிய கிராம பெண்கள் | முன்னரே ஸ்தாபிக்கப்பட்ட நுண்கடன் குழுக்களிலுள்ள பெண்கள் 20 வாரத்திற்கு மேற்பட்ட காலத்தில் **10 பங்கேற்பு வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்ட அமர்வுகளில்** பங்கேற்க அழைக்கப்பட்டனர்.<br>ஒவ்வொரு அமர்வும் 1.5-2 மணி நேரம் நீடித்ததுடன், பயிற்சி பெற்ற பெண் வசதிப்படுத்துனர் மூலமாக Wanawake Na Maisha (‘கிஸ்வாஹிலியில் பெண்கள் மற்றும் வாழ்க்கை’) கலைத்திட்டம் வழங்கப்பட்டது. | 24 மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:**<br>எழுந்தமானமான கட்டுப்பாட்டு சோதனை (RCT) மற்றும் நெட்டாங்கான அளவறி ரீதியான ஆராய்ச்சி[7]<br>**தாக்கம்:**<br>• உடலியல் மற்றும் / அல்லது பாலியல் ரீதியாக நெருக்கமான துணையின் வன்முறையினை (IPV) அனுபவிக்கும் பெண்களின் ஆபத்து கால்வாசியாக குறைக்கப்பட்டது<br>• நெருக்கமான துணையின் வன்முறையினை (IPV) நோக்கிய மேம்படுத்தப்பட்ட நடத்தைகள் மற்றும் பெண்களின் அதிகரித்த தன்னம்பிக்கை |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| Zindagii Shoista **(கண்ணியத்துடன் வாழுதல்)** | பால்நிலை வலுவூட்டல், வருமானம் ஈட்டும் செயற்பாட்டை (IGA) உருவாக்குவதற்கான பயிற்சி மற்றும் இதனை குடும்பங்களினுள் ஆதரிப்பதற்கு நுண்நிதியளிப்பு ஆகியவற்றை ஒன்றிணைக்கின்ற **குடும்பத்தை மையமாகக் கொண்ட நடவடிக்கை.** | தஜிகிஸ்தானின் கிராமப்புறங்கள் | திருமணமான இளம் பெண்களும் அவர்களின் குடும்பங்களும் (திருமண உறவுகள் உட்பட) | இந்த நடவடிக்கை பல்வேறு தலைமுறையை கொண்ட குடும்பத்திலுள்ள நான்கு உறுப்பினர்கள் வரை அமுல்படுத்தப்பட்டதுடன் இதில் பின்வருவன அடங்குகின்றன:<br>• 10 வாரங்ளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் பால்நிலை சமத்துவம், மரியாதையளித்தல், தொடர்பாடல், வன்முறையை குறைத்தல் தொடர்பான 10 சமூக வலுவூட்டல் அமர்வுகள்<br>• திருமணமான இளம் பெண்கள் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினரை இலக்கு வைத்து 10 வாரங்களுக்கு மேலாக நடாத்தப்படும் பால்நிலை, வேலை மற்றும் வாழ்வாதார வலுப்படுத்துதல், வணிக அபிவிருத்தி மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் (IGAs) உள்ளிட்ட பொருளாதார வலுவூட்டல் அமர்வுகள்<br>• ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு IGA இனை ஆரம்பிப்பதற்கு 370 அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது<br>• IGA இனை மேற்பார்வை செய்தலும் உதவுதலும்[8] | 18+ மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:**<br>கலப்பு முறை மதிப்பீடு[9]<br>**தாக்கம்:**<br>• குறிப்பிடத்தக்க நேர்மறையான மாற்றங்கள் உறவுப் பரிமாணத்தில், உள ஆரோக்கியத்தில் மற்றும் சமூக பொருளாதார அந்தஸ்தில் காணப்பட்டது<br>• ஆண்களாலும் (குற்றம்) மற்றும் பெண்களாலும் (அனுபவம்) அறிக்கையிடப்படும் IPV அனைத்து வடிவங்களிலும் புள்ளிவிபரவியல் ரீதியான குறிப்பான குறைவு காணப்பட்டது. |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| The Adolescent Girls Initiative, **கென்யா (AGI-K)** | இளவயதுப் பெண்களுக்கான **பல்துறை வலுவூட்டல் நடவடிக்கை (சமூக, சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதாரம்)** | கென்யாவின் இரு நலிவடைந்த பகுதிகளான: கிபேரா, நைரோபி மற்றும் வஜிர் பிரதேசம், வடகிழக்கு கென்யா | 11-15 வயதுக்குட்பட்ட இளவயதுப் பெண்கள் | AGI-K நான்கு வெவ்வேறு கூறுகளை ஒன்றிணைக்கின்றது: சமுதாயத்தை அடிப்படையாக கொண்ட வன்முறைத்தடுப்பு நிகழ்ச்சித்திட்டம், கல்வி நிபந்தனை பண பரிமாற்றம் (CCT), சுகாதார கவனமுள்ள பெண்கனை வலுவூட்டும் சங்கங்கள் மற்றும் நிதியியல் கல்வி மற்றும் சேமிப்பு | 2+ வருடங்கள் | **மதிப்பீட்டு வகை:** நான்கு பரிசோதனை வகைகளுடனான எழுந்தமானமான கட்டுப்பாட்டு சோதனை (RCT)[10]<br>**இரண்டு வருட நடவடிக்கையின் இறுதியில் தாக்கம்:**<br>• நகர்ப்புறங்களில் வன்முறை குறைப்பு, ஆரம்ப பாடசாலை பூர்த்திசெய்தல், பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதார அறிவு, சமூக பாதுகாப்பு வலைகள்,நிதியியல் அறிவு மற்றும் சேமிப்பு நடத்தை, மற்றும் வீட்டு பொருளாதார நிலை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க நேர்மறையான விளைவுகள்<br>**நிறைவு செய்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரான தாக்கம்:**<br>• வன்முறை மீதான நிலைத்துநிற்கும் தாக்கம் இல்லை<br>• வஜீரில் அடிப்படை கணக்கெடுப்பில் பாடசாலைக்கு வெளியே உள்ள பெண் பிள்ளைகளுக்கு திருமணத்தை, கர்ப்பத்தை தாமதப்படுத்தியதுடன் பாடசாலை சேர்க்கை அதிகரித்தது போன்ற குறிப்பிடத்தக்க நேர்மறையான விளைவுகள்<br>• கிபேராவில் உள்ள வயது வந்த பெண்களுக்கு உடலுறவுக்கான அறிமுகத்தை, குழந்தைப்பேற்றை தாமதப்படுத்துதல் போன்ற குறிப்பிடத்தக்க நேர்மறையான விளைவுகள் |

# வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்பு பட்டியல

**பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்கான செயற்திறனான அணுகுமுறைகளின் பொதுவான கூறுகள் மற்றும் கொள்கைகள் பின்வருமாறு-**

## நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு மற்றும் இசைவாக்கம்

1. **இலக்கு குழுவை அடையாளம் காணுதல்.** இலக்கு வைக்கப்பட்ட மக்களின் யதார்த்த வாழ்விற்கேற்ப வடிவமைக்கப்பட்ட இலக்கு அணுகுமுறைகள் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் மிகவும் நலிவுற்ற பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுடன் பணியாற்றுதல். பங்கேற்பு கருவிகள் மற்றும் ஆலோசனை செயன்முறைகள் சூழலுக்கு தனித்துவமான நலிவுகளை அடையாளம் காணவும், குறிப்பாக பாடசாலைக்கு வெளியே உள்ள பெண் பிள்ளைகள் மற்றும் பெண்கள் மற்றும் இயலாமைகளை உடைய பெண்கள் போன்ற நலிவுற்ற துணைக் குழுக்களை அடையவும் பயன்படுத்தப்படலாம். நடவடிக்கையை வடிவமைப்பதற்கு முன்னர், பெண்களின்[11] குறிப்பிட்ட துணைக்குழுக்கள் எதிர்கொள்ளும் தடைகளை ஆராய்வதற்கு சூழ்நிலை பகுப்பாய்வு மற்றும் தேவை மதிப்பீடு ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நடவடிக்கை வடிவமைப்புகள் வடிவமைக்கப்பட்டு அதற்கேற்ப சரிசெய்யப்பட வேண்டும்.

2. **பால்நிலை வகிபாகங்கள் மற்றும் வருமானம் ஈட்டுதல் தொடர்பான விழுமியங்கள் மீதான முறைசார் ஆய்வை மேற்கொள்ளுதல்.** திருமணமாகாத மற்றும் திருமணமான பெண்கள் எந்தச் சூழ்நிலையின் கீழ் வருமானம் ஈட்டுவது, எவ் வகையான வேலைகளைச் செய்வது மற்றும் ஏன் செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகக் கருதப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. ஒரு பெண் பணியாற்றுவதை ஆண்கள், குடும்பம் மற்றும் சமூக உறுப்பினர்கள் எவ்வாறு பிரதிபலிக்கிறார்கள் என்பதில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நடவடிக்கைகள் பால்நிலை வகிபாகங்களை சவாலுக்கு உட்படுத்தினால், சாத்தியமான பின்னடைவை எவ்வாறு குறைப்பது என்பது குறித்து தயாராகுங்கள்.

3. **பொருளாதார வலுவூட்டல் கூறுகள் உள்ளூர் வாழ்வாதார வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதை உறுதி செய்தல்.** உதாரணமாக, பொருளாதார வலுவூட்டல் நடவடிக்கைகள் பெண்களுக்கான வாழ்வாதார தெரிவுகளின் சந்தைப் பகுப்பாய்வின் அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டியதுடன், தற்போது இருக்கும் ஆதரவுகளை[12] (உதா. சிறுகடன்கள், கிராம சேமிப்புகள் மற்றும் கடன் சங்கங்கள் (VSLAs), சுய உதவிக் குழுக்கள் (SHGs)) இயன்றவரை கட்டியெழுப்ப வேண்டும்.

4. **சாத்தியமான பின்னடைவைக் கண்டறிந்து குறைத்தல்.** இந்த மூலோபாயம் ஆணாதிக்க அமைப்புகளில் பாரம்பரிய பால்நிலை வகிபாகங்களை நேரடியாக சவாலுக்குட்படுத்தலாம், எனவே இது வன்முறை அதிகரிக்கும் அபாயம் உட்பட சாத்தியமான பின்னடைவுக்கு எதிராகத் சரிசெய்யும் முயற்சிகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். இது உறவுகளுக்குள் அல்லது குடும்பத்திற்குள்ளான[13] நிதி மோதலைக் கையாள்வது பற்றிய பயிற்சியையும், ஆண் துணைகளுடன்[14] தொடர்பு கொள்வதற்கான மூலோபாயங்களையும் உள்ளடக்க வேண்டும். உதாரணமாக, குடும்பப் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒன்றாகச் செயற்படும் கருத்தை ஊக்குவிப்பது பெண்களின் அதிகரித்த நிதி ஆதாயங்களை குடும்பத்திற்கான பங்களிப்புகளாக உறுதிப்படுத்த உதவும். பெண்களின் வாழ்க்கை திருமண உறவுகளால் கட்டுப்படுத்தப்பட்டால், குடும்பம் சார்ந்த அணுகுமுறைகள் பொருத்தமானதாக இருக்கலாம். உதாரணமாக, தஜிகிஸ்தானில் உள்ள ஜிந்தகி ஸோயிஸ்டா திருமணமான இளம் பெண்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை (திருமண உறவுகள் உட்பட) இலக்காக கொண்டதுடன், இது சாத்தியமான பின்னடைவைக் குறைக்க உதவிய அதே நேரத்தில் குடும்பத்திற்குள் பெண்களின் நிலை மற்றும் அவர்கள் அனுபவிக்கும் பலவிதமான வன்முறைகளை நிவர்த்தி செய்ய உதவியது.[15]

5. **வசதிப்படுத்துனர் பயிற்சி மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புவதற்காக போதுமான நேரம் மற்றும் வளங்களை கொண்டிருப்பதை உறுதி செய்தல்.** பால்நிலை உருமாற்றத் நடவடிக்கைகளுக்கு நன்கு பயிற்சியளிக்கப்பட்ட வசதிப்படுத்துனர்களும் தனிப்பட்ட பிரதிபலிப்பு, விளக்குதல் மற்றும் பல்வேறு சூழ்நிலைகள் மற்றும் பங்கேற்பாளர்களின் கேள்விகளைக் கையாள்வது எப்படி என்பதை வசதிப்படுத்துனர்கள் கற்றுக்கொள்வதற்கு போதுமான நேரத்துடன் தொடர்ச்சியான ஆதரவு தேவைப்படுகிறது. வசதிப்படுத்துனர்கள் பங்கேற்பாளர்களாக முதலில் பயிற்சியை அனுபவிக்க வேண்டும் என்று வலுவாக பரிந்துரைக்கப்படுகிறது.[16] உதாரணமாக, MAISHA கலைத்திட்டம் மற்றும் பயிற்சி திறன்களுடன் வசதிப்படுத்துனர்கள் பழக்கமாவதற்கு நேரத்தை அனுமதிக்க விரிவான பயிற்சியை உள்ளடக்கியது.[17]

6. **அமுலாக்கும் பங்காளர்களுக்கு போதுமான நிபுணத்துவம் இருப்பதை உறுதிப்படுத்தல்.** நுண்நிதி போன்ற வலுவூட்டல் நடவடிக்கைகளுக்கு நிறுவனரீதியாக (பொருத்தமான M&E அமைப்புகள் போன்றவை) மற்றும் தனிப்பட்ட பணியாளர்கள் ரீதியான (வலுவான வசதிப்படுத்தும் திறன்கள் மற்றும் பால்நிலை சமத்துவ மனப்பான்மை போன்றவை) குறிப்பிட்ட திறன்கள் மற்றும் அனுபவம் தேவைப்படுகிறது. விழுமியங்கள், கொள்கைகள் மற்றும் அணுகுமுறை உள்ளிட்ட, நடவடிக்கையை எவ்வாறு வழங்குவது என்பதில் தீவிரமான பயிற்சி பெற்ற தொடர்புடைய நிபுணத்துவம் கொண்ட வலுவான அமுலாக்கும் பங்காளர்களால் பணி வழங்கப்பட வேண்டும்.[18]

## அமுல்படுத்தல் மற்றும் தாக்கத்தை உயர்த்துதல்

7. **பெண்களின் பொருளாதார சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உறுதி செய்வதற்கு, போதுமான நிதியைப் உறுதிப்படுத்துவதுடன், பொருளாதார வலுவூட்டல் கூறுகளுக்கு போதுமான செறிவு மற்றும் காலப்பகுதிக்கான போதியளவிலான நேரத்தை அனுமதித்தல்.** நுண்நிதி மற்றும் சிறிய அளவிலான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளின் (IGA) பொருளாதாரப் அனுகூலங்களை பெண்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் (12+ மாதங்கள்) உணர்ந்துகொள்வதற்கு நேரம் எடுக்குமென்பதுடன், அவர்கள் எதிர்பாராத அதிர்ச்சிகளால் அச்சுறுத்தப்படலாம். பெண்களுக்கான பொருளாதார ஆதாயங்கள் பெண்களுக்கு அவர்களின் உறவுகளை உருமாற்றுவதற்குத் தேவையான பொருளாதாரச் சொத்துக்களை வழங்கும் அளவுக்கு குறிப்பிடத்தக்களவில் போதுமானதாக இருக்க வேண்டும். இதற்கு பால்நிலை மனப்பாங்குகள் மற்றும் நடைமுறைகளில் மாற்றங்களை அனுமதிப்பதற்கு நேரம் எடுப்பதுடன், தயார்படுத்தல் பணிகளுக்காக 1 வருடம் உட்பட, அமுலாக்கலிற்காக 3+ ஆண்டுகள் வரை பரிந்துரைக்கப்படுகின்றது.


8. பால்நிலை வலுவூட்டல் செலவினங்கள் சுயமான நீடித்ததன்மையுடன் இருக்கக்கூடிய நுண்நிதிச் செலவுகளைப் பாதிக்காது என்பதை உறுதிப்படுத்துவதற்காக நிதி அளவை உயர்த்தும்போது **ஒவ்வொரு கூறுக்கும் தனித்தனி நிதியளிப்பை பேணவும்.** பால்நிலை வலுவூட்டல் கூறிற்கு பெரும்பாலும் வெளிப்புற நிதி தேவைப்படுவதாக உள்ளது.[19]

9. **அதிகரித்த சேமிப்பு மற்றும் வருமானம் எவ்வாறு வீட்டு மட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதை அவதானமாக கண்காணிக்கவும்.** உதாரணமாக, வளங்களின் மீது பெண்களுக்கு கட்டுப்பாடு அல்லது இணைந்த கட்டுப்பாடு இருப்பதுதுடன், அந்த தலையீட்டின் விளைவாக உறவுகள் மற்றும் குடும்பங்களுக்குள் வன்முறைகள் அதிகரிக்காமல் இருப்பதனை உறுதிசெய்யவும்.[20] வலுவூட்டல் மூலோபாயங்கள், குறிப்பாக பொருளாதார வலுவூட்டல் மூலோபாயங்களின் அமுலாக்கம், பெண்களின் ஊதியமில்லாத உழைப்பைப் பயன்படுத்தும் எண்ணத்தை வலுப்படுத்தாதிருப்பதை அல்லது நிலைநிறுத்தாதிருப்பதை அல்லது பெண்களை வலுவிலக்க செய்யும் வகையில் அவர்கள் மீது மேலதிக நேரச் சுமைகளைச் சுமத்தாதிருப்பதையும் கண்காணிக்கவும்.[21]

10. இளம்பெண்களின் வாழ்வின் முக்கியமான நேரத்தில் அவர்களுடன் பணியாற்றும் நடவடிக்கைகளின் தாக்கம் மற்றும் செலவீனத்தின் விளைதிறனை அதிகப்படுத்துவதற்காக, **பெண்களின் சிக்கலான மற்றும் பன்முகத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் கல்வி மற்றும் ஆரோக்கியத்துடன் வலுவூட்டல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.** உதாரணமாக, பாலியல் மற்றும் இனவிருத்தி ஆரோக்கியம் மற்றும் உரிமைகள் (SRHR) தொடர்பான தகவல் மற்றும் சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்வது பெரும்பாலும் SRHR தொடர்பான தகவல் மற்றும் சேவைகளுக்கான அணுகல் மறுக்கப்படும் இயலாமைகளை உடைய இளம் வயதுப் பெண்கள் உள்ளிட்ட இளம் பெண்களுக்கு மிகவும் முக்கியமானதுடன், அதனால் அவர்கள் தங்கள் சொந்த உடல்கள் மற்றும் வாழ்க்கையை[22] தெரிவு செய்யலாம். எந்தத் தீங்கும் செய்யாதே என்ற எண்ணத்தில்: இளம் வயதுப் பெண்களின் வாழ்வாதாரங்களை ஈட்டிக்கொள்வதற்கான திறனை அதிகரிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும், அவர்கள் சுரண்டப்பட்டிருக்கக்கூடிய அல்லது துஸ்பிரயோகத்திற்குள்ளாயிருக்கக்கூடிய அல்லது கல்வி/பாடசாலைக்கான அணுகலுக்கான செலவு ஏற்படுத்தும் சூழ்நிலைகளுக்கு தவறுதலாக வெளிப்படுத்தவில்லை என்பதை கவனமாக கண்காணிக்கவும்.

11. **பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் வாழும் யதார்த்தங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைச் சுற்றிப் பொருந்துமாறு நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.** உதாரணமாக, வீட்டு மற்றும் குழந்தைப் பராமரிப்புப் பொறுப்புகள், பாடசாலை அல்லது பல்கலைக்கழகப் கல்வி, இரவு நேரங்களில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகள், பாதுகாப்பு மற்றும் பயணப் பிரச்சினைகள் போன்றவை.

12. **பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் பெயரளவிலான பங்கேற்பைத் தவிர்க்கவும்,** மாறாக, கூட்டு செயற்பாட்டை மனதில் கொண்டு, செயற்திட்டம் முழுவதும் எவ்வாறு சிறப்பாக பெண்களை வலுவூட்டுவது என்பதைப் பற்றிய தொடர்ச்சியான எண்ணத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குங்கள்.



13. **பெண்களும் பெண் பிள்ளைகளும் ஒன்றுகூடவும், சமூகமயமாகவும், கரிசனத்துக்குரிய விடயங்களைப் பற்றி கலந்துரையாடவும் மற்றும் திறன்களை விருத்தி செய்யவும் பாதுகாப்பான இடங்களை வழங்குதல்.** உதாரணமாக, குறிப்பாக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பான இடங்கள், பெண்களுக்கான நிலையங்கள் அல்லது "வரவேற்புக்கூடம்" அல்லது சமூக மையங்கள், கிளினிக்குகள் போன்றவற்றில் குறிப்பிட்ட நேரங்களை ஒதுக்குதல் போன்றன. குழு அடிப்படையிலான நடவடிக்கைகள் உறவுகளை கட்டியெழுப்புதல், தகவல் தொடர்பாடல், பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் வணிகத் திறன்கள் போன்றன தொடர்பான ஆலோசனைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ள பெண்களை ஆதரிக்கும் தளத்தை வழங்கலாமென்பதுடன், இது பொருளாதார ரீதியான, உணர்வு ரீதியான மற்றும் உடலியல் ரீதியான பாலியல் வன்முறையின் அபாயத்தைக் குறைப்பதற்கு பங்களிக்குமென கண்டறியப்பட்டுள்ளது.[23] பாதுகாப்பான இடங்கள் குறிப்பிட்ட பாதிப்புகள் உள்ளவர்கள் உட்பட அனைத்துப் பெண்களும் பெண் பிள்ளைகளும் அணுகக்கூடியதாக இருப்பதுடன், ஏனைய குடும்ப உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தாங்களாகவே ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

## நுழைவு புள்ளிகள்

பின்வரும் அட்டவணை நிகழ்ச்சித் திட்ட உதாரணங்கள் உள்ளிட்ட, இந்த மூலோபாயத்திற்கான சில முக்கிய நுழைவுப் புள்ளிகளை எடுத்துக்காட்டுகிறது.

| நுழைவுப் புள்ளி | விளக்கம் |
|---|---|
| **தற்போதுள்ள சமூக கட்டமைப்புகள் மற்றும் நுண்கடன் அல்லது சேமிப்புக்கள் மற்றும் கடன் சேவைகள்,. சுய உதவிக் குழுக்கள், சேமிப்புக் கணக்கு, கிராமிய சேமிப்புக்கள் மற்றும் கடன் சங்கங்கள் (VSLAs)** | மகளிர் சுயஉதவிக் குழுக்கள் (SHGs) அல்லது கிராம சேமிப்புக்கள் மற்றும் கடன் சங்கங்கள் (VSLA) போன்ற பெண்கள் கூடும் தற்போதைய சமூக கட்டமைப்புகள், பிரதியெடுப்பதற்கான மற்றும் தாக்கத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளுடன் வலுவூட்டல் நடவடிக்கைகளுக்கான நுழைவுப் புள்ளியை வழங்கலாம்.<br>உதாரணமாக, இந்தியாவின் பீகாரில் Do Kadam Barabari Ki Ore (சமத்துவத்தை நோக்கிய இரண்டு படிகள்) நிகழ்ச்சித் திட்டம், வெவ்வேறு குழுக்களை இலக்காகக் கொண்ட நான்கு நடவடிக்கைகளைக் கொண்டிருந்தது. தற்போதுள்ள கிராம மட்டத்திலான சுய உதவிக்குழுக்களில் ஏற்கனவே உறுப்பினர்களாக இருந்த திருமணமான பெண்களை ஓர் நடவடிக்கை இலக்கு வைக்கின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டம் தற்போதிருக்கின்ற இந்த சுய உதவிக்குழுக்களை வலுப்படுத்துதல், பெண்களுக்கெதிரான வன்முறை (VAW) தொடர்பான அறிவு மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்துதல், தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களுக்கு ஆதரவை வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உதாரண நடவடிக்கை தற்போதுள்ள சேமிப்புக் குழுவை ஒரு நுழைவுப் புள்ளியாகப் பயன்படுத்துகிறது, ஆனால் சேமிப்புக் குழுக்களை உருவாக்குவது வன்முறையைக் குறைக்கும் என்பதை அது பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சான்றுகள் முரண்படுவதால், இது குறித்து மேலும் ஆய்வு தேவைப்படுகின்றது.<br>கற்றுக்கொண்ட பாடங்கள், இந்த சமூகக் கட்டமைப்புகளின் செயற்பாட்டை குறிப்பாக வலுப்படுத்துவதற்கு, தலைமைத்துவத்தை (அறிவார்ந்த மற்றும் எண்ணியல் சார்ந்த கூறுகளை சேர்த்தல் உள்ளிட்ட) கட்டியெழுப்புவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் வளங்களை அர்ப்பணிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் விளையாட்டு கழகம் மற்றும் இளைஞர் கழகம் போன்றவற்றின் ஆண் பங்காளர்களை அடைவதற்கான பல்வேறு தளங்களைக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் ஆகியவற்றை உள்ளடக்கும். |

| நுழைவுப் புள்ளி | விளக்கம் |
|---|---|
| **பாடசாலைகளில் மற்றும்/ அல்லது சமுதாயங்களில் பெண் பிள்ளைகளின் குழுக்கள் மற்றும் பாதுகாப்பான இடங்கள்** | பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் உடல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் பாதுகாப்பாக உணரக்கூடிய பெண்களுக்கு மட்டுமான இடங்கள், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுப்படுத்துவதற்கான ஒரு நல்ல நுழைவுப் புள்ளியாக இருக்கும் அதே நேரத்தில் வன்முறை குறித்த தகவல்களையும் பதிலளிப்பு சேவைகளுக்கான அணுகலையும் வழங்குகிறது. பாதுகாப்பான இடங்கள் பொதுவாக பாடசாலைகள் அல்லது சமூகங்களை அடிப்படையாகக் கொண்டவை. சமுதாய அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்கள், திருமணமான பெண்கள், பாடசாலைக்கு வெளியே உள்ள பெண்கள் மற்றும்/அல்லது இயலாமைகளை உடைய பெண்கள் போன்ற அதிகரித்த வன்முறை அபாயம் உள்ளவர்கள் மற்றும் அவர்களை அடைவதற்கான நோக்குடனான முயற்சிகள் இல்லாமல் கவனிக்கப்படாமல் இருக்கக்கூடிய ஓரங்கட்டப்பட்ட இளையவர்களை அடைவதற்கு உதவும்.<br><br>உதாரணமாக, கென்யாவில் இளவயது பெண்களுக்கான முயற்சி (AGI) பெண்களை வலுவூட்டும் கழகங்களை உள்ளடக்கியதுடன், இது சுகாதார அறிவு, சுய-செயற்திறன் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்புகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. பெண்கள் சமூகத்தைச் சேர்ந்த இளம் பெண் வழிகாட்டியின் மூலம் வாராந்த குழு கூட்டங்களுக்கு அல்லது பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.<br><br>பெண்கள் பலவிதமான ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை-திறன் விடயங்களைப் பற்றி கலந்துரையாடியதுடன், திறந்த கலந்துரையாடலுக்கும் நேரம் ஒதுக்கினர். நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சில பெண்கள் தங்கள் பாதுகாப்பான இடங்களில் நிதியியல் கல்வி கலைத்திட்டத்தையும் பின்பற்றினர்.<br><br>கற்றுக்கொண்ட பாடங்கள் வார இறுதிப் பாடசாலை அமர்வுகள், விடுதி வசதியுள்ள பாடசாலைக்கு செல்லல், வீட்டுப் பொறுப்புகள் மற்றும் மதச் சேவைகள் போன்ற முரண்பட்ட பொறுப்புகள் காரணமாக, பாதுகாப்பான இடங்களுக்குத் தவறாமல் செல்வதில் பெண்களுக்கான சவால்களை உள்ளடக்கும். பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் வாழ்க்கை யதார்த்தங்களைப் புரிந்துகொள்வதற்கும் குடும்ப ஆதரவையும் புரிதலையும் பெறுவதற்கும் சரியான நேரத்தில் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை இந்த கண்டறிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.[24] |
| **சட்டங்கள் மற்றும் சட்டவாக்கம்** | உலக வங்கியின் 2020ம் ஆண்டுக்கான பெண்கள், வணிகம் மற்றும் சட்ட அறிக்கையின்படி, உலகப் பொருளாதாரங்களில் 40% பெண்களின் சொத்துரிமையைக் கட்டுப்படுத்துகின்றன.[25] பெண்களின் சொத்துரிமையை சட்டம் நிலைநிறுத்தினால் கூட, அதனுடைய நடைமுறை பயன்பாடு சவாலானதாக இருக்கலாம். வன்முறையைக் குறைப்பதற்கு முயலும் பரப்புரைகளும் சமூக இயக்கங்களும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கெதிராக பாகுபடுத்தும் பரம்பரை, திருமணம், குடும்பம் மற்றும் சொத்து சட்டங்களை சீர்திருத்துவதற்கும் அமுல்படுத்துவதற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும். |
| **பெண் பாலியல் தொழிலாளர்களுடனான நடவடிக்கைகள்** | பெண் பாலியல் தொழிலாளர்களை வலுவூட்டுவதனை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள் வாடிக்கையாளர்கள், பொலிசார் மற்றும் நெருக்கமான துணையிடமிருந்தான வன்முறையைக் குறைக்கும் அணுகுமுறைகளுக்கான ஒரு சிறந்த நுழைவுப் புள்ளியாகும்.<br><br>இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பெரும்பாலும் வாழ்க்கை மற்றும் பணிச்சூழலுக்கான அத்துடன் மனித உரிமைகள் மீதான பயிற்சி போன்ற ஏனைய மூலோபாயங்கள், களங்கத்தை குறைப்பதற்கு முயலும் செயற்பாடுகள் மற்றும் வன்முறையை எதிர்கொள்ளும் பாலியல் தொழிலாளர்களுக்கான பதிலளிப்பு சேவைகள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான பரப்புரைக்கு பாலியல் தொழிலாளர் அமைப்புக்களை ஈடுபடுத்துகிறது. அவை பொதுவாக சுகாதார தன்னார்வ தொண்டு நிறுவனங்களால், பெண்கள் உரிமை நிறுவனங்களால் அல்லது பாலியல் தொழிலாளர்களால் நிறுவப்பட்ட அமைப்புகளால் அமுலாக்கப்படுகின்றன.<br><br>உதாரணமாக, இந்தியாவில் ஆவாஹான் நிகழ்ச்சித் திட்டமானது பெண் பாலியல் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக கூட்டாக பிரச்சாரம் மேற்கொள்வதற்கு அணிதிரட்டலை மேற்கொள்கிறது. இது கர்நாடக சுகாதார மேம்பாட்டு அறக்கட்டளையினால் (KHTP) அமுலாக்கப்பட்டதுடன், இந்நடவடிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் 24 மணி நேர நெருக்கடி முகாமைத்துவ குழுவுடன் பொலிசார் மற்றும் வாடிக்கையாளர் வன்முறையைத் தடுப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்ட விடயத்தை கொண்டிருக்கும். மனித உரிமை வழக்கறிஞர்களும் பாலியல் தொழிலாளர்களுக்கு அவர்களின் உரிமைகள் குறித்து பயிற்சி அளித்து, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த உதவினர். ஆவாஹனின் மதிப்பீடு, பாலியல் தொழிலாளிகள் வாடிக்கையாளர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து குறிப்பிடத்தக்களவில் குறைந்தளவான வன்முறை அனுபவித்துள்ளதை கண்டறிந்தது.[26] |

# பயன்படுத்தப்பட்ட ஆதாரங்கள்

## வலுவூட்டலை வரையறுத்தல் மற்றும் அளவிடுதல்

Understanding and Measuring Women's Economic Empowerment. Definition, Framework and Indicators, Washington, DC. International Center for Research on Women (ICRW) Golla, Anne Marie, Anju Malhotra, Priya Nanda, and Rekha Mehra. 2011
இந்த பயனுள்ள ஆவணம் பெண்களின் பொருளாதார வலுவூட்டலை வரையறுக்கிறதுடன் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைக்க, அமுல்படுத்த மற்றும் மதிப்பீட வழிகாட்டக்கூடிய அளவீட்டு கட்டமைப்பையும் குறிகாட்டிகளையும் வழங்குகிறது.

A Review of Approaches and Methods to Measure Economic Empowerment of Women and Girls, Gender and Development 22(2): 233–251. Pereznieto, Paola, and Georgia Taylor. 2014
இந்த மீளாய்வு, பெண்களின் பொருளாதார வலுவூட்டல் உள்வாங்கப்பட்டதை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பது குறித்த மதிப்பீடுகளை கொள்கை வகுப்பாளர்களுக்கு தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள அதே நேரத்தில் வெற்றிகரமான பொருளாதார வலுவூட்டல் தலையீடுகளின் கூறுகளை அடையாளம் காண பயிற்சியாளர்களுக்கு உதவுவதையும் நோக்காக கொண்டுள்ளது.

## பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் நடவடிக்கைகள் தொடர்பான சான்றுகள்

Combined Economic Empowerment and Gender-transformative Interventions. Evidence Review. What Works to Prevent VAWG programme. Gibbs, A and Bishop, K. 2019
இந்த மீளாய்வு DFID இன் What Works to Prevent Violence against Women and Girls Global Programme (What Works) நான்கு வலுவூட்டல் நடவடிக்கைகளின் வலுவான மதிப்பாய்வுகளின் கண்டறிவுகளை வழங்குகின்றது.

Promoting Women's Economic Empowerment: What Works? The World Bank Group, Policy Research Working Paper 7087. Buvinic, M. and Furst-Nichols, R. 2014
பொருளாதார வலுவூட்டல் நடவடிக்கைகளின் வலுவான மதிப்பாய்வுகளின் உலக வங்கியின் மீளாய்வு.

Gender, livelihood capabilities and women's economic empowerment: Reviewing Evidence Over the Life Course. London: AGEG. Kabeer, N (2018)
இந்த அறிக்கை பொருளாதாரம் மற்றும் வாழ்வாதார களங்களுக்குள் பெண்களின் வலுவூட்டலை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் சான்றுகளை ஆராய்கிறது. வயதான பெண்கள் (60+), வேலை செய்யும் வயதுடைய பெண்கள் (20-59) மற்றும் இறுதியாக இளம் பெண்கள் (10-19) தொடர்பான சான்றுகளின் பகுப்பாய்வு இதில் அடங்கும்.

## பொருளாதார வலுவூட்டல் நிகழ்ச்சி

UN Women Economic Empowerment, New York: UN Women, 2020.
இந்த இணையப்பக்கம் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதில் ஐ.நா பெண்கள் அமைப்பின் பணி பற்றிய தகவல்களை வழங்குகிறது.

A Roadmap for Promoting Women's Economic Empowerment. Exxon and the United Nations Foundation. Buvinic, M. et al. 2013
இந்த ஆராய்ச்சி அறிக்கையானது, பல்வேறு நாட்டுச் சூழல்களில் பெண்களைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கொள்கை விருப்பங்களை முன்வைக்கும் செயற்பாடுகளுக்கான சான்று அடிப்படையிலான வரைபடத்தை முன்வைக்கிறது. பிரதானமாக தனியார் துறை மற்றும் பொது-தனியார் பங்காண்மைகளை இலக்காகக் கொண்டதுடன், இந்த அறிக்கை வலுவூட்டலை உற்பத்தித்திறன் மற்றும் வருவாயில் அதிகரிப்பு என அளவிடுகிறது.

## இளம் பெண்கள்

Investments in Adolescent Girls' Physical and Financial Assets: issues and review of the evidence. Girl Hub. Quisimbing, A.R. and Kovarik, C. 2013
சொத்துக்கள், வலுவூட்டல் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றின் பால்நிலை சார் பரம்பலுக்கான எண்ணக்கருக் கட்டமைப்பை இந்த ஆக்கம் முன்வைக்கிறது. இது கல்வி மற்றும் பயிற்சியுடன் நிதிச் சொத்துக்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இணைத்த முழுமையான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பாக ஒருங்கிணைந்த பெண்களின் சொத்துக்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள் மீதான சான்றுகளை மீளாய்வு செய்கின்றது.

Interventions Promoting Adolescent Girls' Economic Capabilities: What Works? London: GAGE Programme, Stavropolou, M, 2018
இந்த விரைவான சான்றுகளின் மீளாய்வு LMIC களில் உள்ள இளம்பெண்களை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகின்றதுடன், இது அவர்களின் பொருளாதார திறன்களை மேம்படுத்தவும் அவர்களை வலுவூட்டவும் முயல்கிறது.

Delivering Impact for Adolescent Girls: Emerging Findings from Population Council Research. New York: Girl Center, 2018
இந்த ஆய்வுச் சுருக்கமானது, வன்முறை மற்றும் பால்நிலை சமத்துவமான விளைவுகள் உட்பட, இளவயதுப் பெண்களுக்கு எவ்வாறான நடவடிக்கைகளின் தொகுப்பு சிறந்த விளைவுகளை வழங்க முடியும் என்பதை ஆராய்வதற்காக, ஒன்பது தாக்க மதிப்பீடுகளின் கண்டறிவுகளை சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.

# இறுதிக் குறிப்புகள்

[1] 44 நாடுகள் மற்றும் 481,205 பெண்களில் நெருங்கிய துணையிடமிருந்தான வன்முறையின் அபாயங்களுடன் தொடர்புடைய பேரின நிலைக் காரணிகளின் ஆய்வில், தனிப்பட்ட மட்டத்தில் நெருங்கிய துணையிடமிருந்தான வன்முறையின் அபாயத்துடன் தொடர்புடைய பேரின நிலைக் காரணிகளாக நிலம், சொத்து, பரம்பரை மற்றும் சொத்துக்களுக்கான பெண்களின் அணுகல் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பதைக் காட்டுகிறது. பெண்களின் வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் சமூக அளவில் சொத்துக்கள் ஆகியவை பெண்களின் வலுவூட்டும் குறிகாட்டிகள் என்பதுடன் நெருங்கிய துணையிடமிருந்தான வன்முறையின் அளவைக் கணிக்கின்றன என்றும் ஆய்வு முடிவு செய்துள்ளது. சான்று:
Heise, L. & Kotsadam, A. (2015) Cross-national and multilevel correlates of partner violence: an analysis of data from population-based surveys, Lancet Global Health, 3(6): E332-E340

[2] நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDGs) எவரும் பின்தங்க விடப்படவில்லை என்ற (LNOB) கொள்கைகள் பற்றிய மேலதிக தகவலுக்கு:
United Nations Committee for Development Policy (CDP) (2018) Leaving no one behind; UNDP (2018) What does it mean to leave no one behind? New York: UNDP; United Nations SDG (2019) Leaving No One Behind: A UNSDG Operational Guide for UN Country Teams, New York: UNSDG.

[3] சுய-செயற்திறன் என்பது குறிப்பிட்ட செயற்திறனை அடைவதற்குத் தேவையான நடத்தைகளைச் செயற்படுத்துவதற்கான ஒரு தனிநபரின் திறனைக் குறிக்கிறது (Bandura, A. (1997). Self-Efficacy: The exercise of control. New York, NY: W. H. Freeman)

[4] பாதுகாப்பான இடங்கள் என்பது பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் வலுவூட்டப்படும் செயன்முறைகள் மூலம் ஆதரிக்கப்படும் இடங்களாகும்.
International Medical Corps (IMC) and International Rescue Committee (IRC) (2020) Women and Girls Safe Spaces: A Toolkit for Advancing Women's and Girls' Empowerment in Humanitarian Settings. London and New York: IMC and IRC.

[5] Kerr Wilson A, Gibbs A, McAslan Fraser E, Ramsoomar L, Parke A, Khuwaja H and Jewkes R (2020) What Works to Prevent Violence against Women and Girls? A Rigorous Global Evidence Review of Interventions to Prevent Violence against Women and Girls, South Africa; What Works to Prevent VAWG

[6] Intervention for Microfinance for AIDS and Gender Equity (IMAGE) Project (South Africa) – an intervention combining microfinance and gender training for women. See: Pronyk, P. M., Hargreaves, J. R., Kim, J. C., Morison, L. A., Phetla, G., Watts, C., ... & Porter, J. D. (2006) Effect of a structural intervention for the prevention of intimate-partner violence and HIV in rural South Africa: A cluster randomised trial. The Lancet, 368(9551), 1973- 1983

[7] Harvey, S., Mshana, G., Kapinga, I., Lees, S., Kapiga, S. (2019) STRIVE Impact Case Study: MAISHA – set to reduce violence against women in Tanzania; Mwanza Intervention Trials Unit, Mwanza, Tanzania; National Institute for Medical Research, Mwanza, Tanzania; London School of Hygiene & Tropical Medicine, London, UK; 2019; Kapiga, S., Harvey, S., Mshana, G., Holm Hansen, C., Mtolela, G.J., Madaha, F. … & Watts, C. (2019). A social empowerment intervention to prevent intimate partner violence against women in a microfinance scheme in Tanzania: findings from the MAISHA cluster randomised controlled trial. The Lancet Global Health, 7(10), 1423- 34.

[8] Gibbs, A., and Bishop, K., (2018) Combined economic empowerment and gender-transformative interventions. Evidence Review. What Works to Prevent VAWG programme.

[9] Mastonshoeva, S., Shonasimova, S., Gulyamova P., Jewkes R., Shai, N., Chirwa, E.D., & Myrttinen, H. (2019). Mixed methods evaluation of Zindagii Shoista (Living with dignity) intervention to prevent violence against women in Tajikistan.

[10] Austrian, K., Soler-Hampejsek, E., Mumah, J., Kangwana, B., Wado, Y., Abuya, B., Shah, V. and Maluccio, J. (2018). Adolescent Girls Initiative-Kenya: Midline Results Report. Nairobi: Population Council.

[11] 30 வயதுக்குட்பட்ட பெண்கள் IPV க்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியதுடன், வீட்டு மற்றும் குழந்தைப் பராமரிப்புப் பொறுப்புகள் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதை மட்டுப்படுத்துவது, மற்றும் சமூக ஆதரவிலிருந்து குறைந்தளவு பயனடைவதுடன், சகாக்களின் குழு ஆதரவிலிருந்து குறைந்தளவு ஆலோசனையை பெறுவது வரை பங்கேற்பதில் தடைகளை எதிர்கொள்கிறார்கள். காண்க:
Knight, L., Ranganathan, M., Abramsky, T., Polzer-Ngwato, T., Muvhango, L., Molebatsi, M., Stockl, H., Lees, S. & Watts, C. (2020) Intervention with Microfinance for AIDS and Gender Equity (IMAGE): Women's Engagement with the Scaled-up IMAGE Programme and Experience of Intimate Partner Violence in Rural South Africa. Prevention science, 21, 268-281.
(Knight, 2019).

[12] புதிதாக நிறுவப்பட்ட பொருளாதார வலுவூட்டல் முன்முயற்சிகள் போலல்லாமல், ஏற்கனவே உள்ள மற்றும் நன்கு நிறுவப்பட்ட தளங்கள் பெரும்பாலும் மிகவும் நிலையானவை மற்றும் மேலதிக கூறு / ஒருங்கிணைப்பை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக உள்ளன. தற்போதுள்ள சமூக வலுவூட்டல் (வன்முறை தடுப்பு) நடவடிக்கைகளுடன் பொருளாதார வலுவூட்டல் நடவடிக்கைகள் சேர்க்கப்படலாம். ஒருங்கிணைந்த நடவடிக்கைக்காக ஒவ்வொரு பங்காளருக்கும் வழங்கும் மாதிரி மற்றும் செயற்பாடு மற்றும் திறன் விருத்தி ஆகியவற்றை முடிவு செய்வது முக்கியமானது. பார்க்க:
Pronyk, K., Hargreaves, M., Morison L.A., Watts, C. & Porter, J. (2005) Microfinance and HIV prevention–emerging lessons from rural South Africa. Small Enterprise Development, 16, 26-38.

[13] Knight, L. et al (2020) Ibid.

[14] Manji, K, Heise, L and Cislaghi, B (2020) Couples' Economic Equilibrium, Gender Norms and Intimate Partner Violence in Kirumba, Tanzania in Violence Against Women 1-21

[15] What Works (2018) Working with families to prevent violence against women and girls in Tajikistan. What Works Evidence review.

[16] Goldmann, L., Lundgren, R., Welbourn, A., Gillespie, D., Bajenja, E., Muvhango, L. and Michau, L., 2019. On the CUSP: the politics and prospects of scaling social norms change programming. Sexual and reproductive health matters, 27(2), pp.51-63.

[17] Kapiga, S et al (2019) Ibid.

[18] Milat, A., Bauman, A. & Redman, S. (2015) Narrative review of models and success factors for scaling up public health interventions, Implementation Science, 10(15).

[19] Hargreaves, J., Hatcher, A., Strange, V., Phetla, G., Busza, J., Kim, J., Watts, C., Morison, L., Porter, J., Pronyk, P. and Bonell, C., 2010. Group-microfinance and health promotion among the poor: Six-year process evaluation of the Intervention with Microfinance for AIDS and Gender Equity (IMAGE) in rural South Africa. Health Education Research, 25(1), pp.27-40.

[20] Ranganathan, M., Knight, L., Abramsky, T., Muvhango, L., Polzer Ngwato, T., Mbobelatsi, M., Ferrari, G., Watts, C. and Stöckl, H., (2019) Associations between women's economic and social empowerment and intimate partner violence: Findings from a microfinance plus program in rural North West Province, South Africa. Journal of interpersonal violence, p.0886260519836952

[21] Molyneux, M (2008) Conditional Cash Transfers: A Pathway to Women's Empowerment? Pathways to Women's Empowerment Working Paper 5, Institute of Development Studies, Brighton

[22] For example, the Abriendo Oportunidades ('Opening Opportunities') Initiative which provides vulnerable Mayan girls in Belize, Guatemala, and Mexico with skills and support to improve their lives.

[23] Knight, L. et al. (2020) Ibid.

[24] Austrian, K., Soler-Hampejsek, E., Kangwana, B., Maddox, N., Wado, Y., Abuya, B., Shah, V., & Maluccio, J. (2020) Adolescent Girls Initiative–Kenya: Endline Evaluation Report. Nairobi: Population Council.

[25] World Bank (2020) Women, Business and the Law 2020. Washington DC.

[26] Beattie, T. S., Bhattacharjee, P., Isac, S., Mohan, H. L., Simic-Lawson, M., Ramesh, B. M., ... & Heise, L. (2015) Declines in violence and police arrest among female sex workers in Karnataka state, South India, following a comprehensive HIV prevention programme. Journal of the International AIDS Society, 18(1), 20-32.

**© UN Women 2020**

**இந்த ஆவணம் ஐ.நா. பெண்கள் அமைப்பால் உத்தரவளிக்கப்பட்டதுடன் Social Development Direct இனால் உருவாக்கப்பட்டதுமான RESPECT கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் ஒரு பகுதியாகும், அதை இங்கே காணலாம்.**

**Suggested citation:** UN Women and Social Development Direct (2020) Preventing Violence Against Children and Adolescents, RESPECT: Preventing Violence against Women Strategy Summary.

RESPECT

WOMEN

# மூலோபாயச் சுருக்கம்

## சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினரின் துஷ்பிரயோகம் தடுக்கப்பட்டது

(Child and adolescent abuse prevented)

UN WOMEN

World Health Organization

# சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினரின் துஷ்பிரயோகம் தடுக்கப்பட்டது

மூலோபாயத்தின் குறிக்கோள்: குடும்ப உறவுகளை வளர்ப்பது, உடல் ரீதியான தண்டனையைத் தடை செய்தல், கடுமையான பெற்றோருக்குரிய நடைமுறைகளைக் குறைத்தல் மற்றும் நேர்மறையான பெற்றோர்-சிறுவர் உறவுகளை உருவாக்குதல்.


## விளக்கம்

உலகளவில், 2-17 வயதிற்குட்பட்ட அனைத்து சிறுவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஆண்டில் ஏதோவொரு வகையான துஷ்பிரயோகத்தை அனுபவித்துள்ளனர்.[1] இருப்பினும், பல சூழல்களில் சிறுவர் மற்றும் இளம்பருவத்தினரின் துஷ்பிரயோகத்தின் அளவு பாரியளவான குறைவான அறிக்கையிடலின் காரணமாக அதிகமாக இருக்கலாம்.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறை (VAC)[2], சிறுவர்களைத் துன்புறுத்துதல், கொடுமைப்படுத்துதல், இளைஞர்களின் வன்முறை, நெருங்கிய பங்காளரின் வன்முறை (IPV), பாலியல் வன்முறை அல்லது உணர்ச்சி ரீதியான வன்முறை உட்பட பல வடிவங்களை எடுப்பதுடன், சிறுவர்களின் வளர்ச்சியில் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு வடிவங்கள் நிகழ்கின்றன.[3]

VAC மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) ஆகியவை பகிரப்பட்ட அபாயங்கள், பொதுவான விளைவுகள் மற்றும் ஒன்றன் மீது ஒன்றின் மேற்பொருந்துகை உட்பட இரண்டுக்கும் இடையேயான பல்வேறு இணைப்புகளை நிரூபிக்கும் வலுவான சான்றுகளுடன் நெருங்கிய தொடர்புடையவையாகும். (படம் 1 ஐப் பார்க்கவும்).

**படம் 1: VAW மற்றும் VAC இடையே உள்ள தொடர்புகள்**




ஆதாரம்: Fulu et al (2017) இலிருந்து தழுவப்பட்டது

- **பங்காளரின் வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம்/தவறான நடத்துகை ஆகியவை பெரும்பாலும் ஒரே குடும்பங்களில் நிகழ்கின்றன.**[4] தாயார் துஷ்பிரயோகம் செய்யப்படும் குடும்பங்களில் வாழும் சிறுவர்களும் வன்முறை சம்பவங்களை அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.[5] இது குறிப்பாக கடுமையான ஆணாதிக்க கட்டமைப்புகள் சாதாரணமாகியுள்ள வன்முறை பயன்பாட்டை நியாயப்படுத்துகின்ற சூழல்களில் பொதுவானதாகும். உதாரணமாக, ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 12 மாதங்களுக்குள் உடல் ரீதியான IPVஇனை அனுபவித்த பெண்கள் அவ்வாறல்லாத பெண்களை விட, தங்கள் சிறுவர்களை அடிப்பதாக அறிக்கையிடும் வாய்ப்பு அதிகம் என கண்டறியப்பட்டுள்ளது.[6]

- இந்த ஆணாதிக்கக் கட்டமைப்புகள், வன்முறையைப் முறைப்பாடளிப்பதை கட்டுப்படுத்தும், வன்முறையான ஒழுக்கத்தை (மனைவியை அடித்தல் மற்றும் உடல் ரீதியான தண்டனை), குடும்ப நற்பெயருக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் தப்பிப்பிழைத்தவர்களைக் குற்றம் சாட்டுதல் மற்றும் பால்நிலை சமத்துவமின்மையை ஆதரிக்கும் விழுமியங்கள் உட்பட, **தீங்கிழைக்கும் சமூக விழுமியங்களால் நிலைநிறுத்தப்படுகிறது.**[7]

- VAC மற்றும் VAW பெரும்பாலும் **இளமைப் பருவத்தில் (வயது 10-19) ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தக்கூடியது.** IPV போன்ற சில வகையான வன்முறைகள் முதன்முதலில் அனுபவிப்பதற்கும் மற்றும் நிகழ்த்துவதற்கும் மற்றும் துஷ்பிரயோகத்திற்கான அதிகரித்த ஆபத்துகள் இருப்பதற்குமான காலப்பகுதியாகும். நெருங்கிய உறவில் இருக்கும் 15 முதல் 19 வயதிற்குட்பட்ட மூன்று இளம்பெண்களில் ஒருவர் உணர்ச்சி ரீதியான, உடலியல் அல்லது பாலியல் ரீதியான வன்முறையை எப்போதும் அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றதுடன், ஆப்பிரிக்காவின் துணை-சஹாராவின் சில பகுதிகளில் இது 50% க்கும் அதிகமாக உள்ளது.[8] இருப்பினும் இளம் பருவம் வன்முறை தடுப்புக்கான நுழைவாயிலாகவும் இருக்க முடியும்.[9]

- VAC **துஷ்பிரயோகத்தின் தலைமுறைகளுக்கிடையிலான சுழற்சியுடன்** தொடர்புடையது. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் வன்முறை, எதிர்கால அனுபவத்தின் அபாயத்தையும், IPV இன் தாக்கத்தையும் அதிகரிக்கிறது. குழந்தைப் பருவ அதிர்ச்சி, IPV மற்றும் கடுமையான பிள்ளை வளர்ப்பு ஆகியவற்றிற்கிடையே தொடர்பு உள்ளது.[10]

IPV மற்றும் VAC க்கு இடையேயான பரவலான இணைப்புகள் VAC மற்றும் VAW தடுப்பு துறைகளுக்கு இடையே அதிக தொடர்பு மற்றும் ஒத்துழைப்புடன், பகிரப்பட்ட ஆபத்து காரணிகள் மற்றும் இடைப்பட்டவற்றை நிவர்த்தி செய்வதற்கான மேலதிக முயற்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறது.

INSPIRE கட்டமைப்பில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஏழு மூலோபாயங்கள் உள்ளன. INSPIRE என்ற வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு வகையான வன்முறைகளைத் தடுக்கும் மூலோபாயங்களில் ஒன்றைக் குறிக்கிறது. RESPECT மற்றும் INSPIRE கட்டமைப்புகளுக்கு இடையே உள்ள சில இணைப்புகளை அட்டவணை 2 காட்டுகிறது.

**அட்டவணை 1: INSPIRE மற்றும் RESPECT கட்டமைப்புகள் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன?**[11]

2

**INSPIRE மற்றும் RESPECT கட்டமைப்புகள் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன?**

| INSPIRE: **கட்டமைப்பு-சிறுவர்களுக்கெதிரான வன்முறையை முடிவுறுத்தல்** | RESPECT: **கட்டமைப்பு-பெண்களுக்கெதிரான வன்முறையை தடுத்தல்** |
|---|---|
| சட்டங்களை அமுலாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல் | சட்டங்கள் மற்றும் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வசதிப்படுத்தல் * |
| விழுமியங்கள் மற்றும் பண்பாடு | உருமாற்றப்பட்ட மனப்பாங்கு, நம்பிக்கை மற்றும் விழுமியங்கள் |
| பாதுகாப்பான சூழல் | சூழல் பாதுகாப்பாக மாற்றப்படும் |
| பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் ஆதரவு | சிறுவர் மற்றும் இளம் பருவத்தினரின் துஸ்பிரயோகம் தடுக்கப்பட்டது |
| வருமானம் மற்றும் பொருளாதார பலப்படுத்தல் | வறுமை குறைக்கப்பட்டது |
| | பெண்களின் வலுவூட்டல் |
| பதிலளிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் | சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டது |
| கல்வி மற்றும் வாழ்க்கைத் திறன்கள் | உறவுகளைப் பேணும் திறன்கள் பலப்படுத்தப்பட்டன |
| பல்துறை ஒத்துழைப்பு *** | துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு மற்றும் பங்காண்மை ** |
| கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு *** | பலப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அமைப்புகள் ** |

* சாதகமான சூழல், ** வினைத்திறனான நிகழ்ச்சித் திட்டத்திற்கான வழிகாட்டும் கொள்கை,
*** மேற்பொருந்தும் மூலோபாயம்

## ஆபத்து மற்றும் பாதுகாப்பு காரணிகள்

இந்த உத்தி சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்கு எதிரான பல்வேறு வகையான வன்முறைகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஒருங்கிணைந்த அணுகுமுறைகளில் கவனம் செலுத்துவதுடன், பகிரப்பட்ட ஆபத்து காரணிகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டிருப்பதுடன் குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் வன்முறை மற்றும் துஸ்பிரயோகத்தின் தலைமுறைகளுக்குள்ளான சுழற்சியை நிறுத்தவும் முயல்கிறது.[12 13]

இந்த மூலோபாயத்தில் இளம் பருவத்தினருக்கு எதிரான வன்முறைகளான கொடுமைப்படுத்துதல், சகாக்கள் மற்றும் dating வன்முறை மற்றும் பாடசாலை அமைப்புகளில் அனுபவிக்கும் பாலியல் சுரண்டல் ஆகியவற்றைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட அணுகுமுறைகள் அடங்கும்.

**சூழல்கள் பாதுகாப்பாக மாற்றப்பட்டன RESPECT மூலோபாயச் சுருக்கத்தின்** கீழ் முழுப் பாடசாலை அணுகுமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இளம் பருவப் பெண்களை வலுவூட்டுவதில் கவனம் செலுத்தும் வாழ்க்கைத் திறன் அணுகுமுறைகள் **பெண்களுக்கான வலுவூட்டல் மூலோபாயச் சுருக்கத்தின்** கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.


இந்த மூலோபாயம் சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினரின் வன்முறை அபாயங்களை அதிகரிக்க அல்லது குறைக்கக்கூடிய பின்வரும் காரணிகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

| நிலை | ஆபத்துக் காரணிகள் | பாதுகாப்புக் காரணிகள் |
|---|---|---|
| **தனிநபர் நிலை** | குடும்பத்தில் வன்முறைக்கு வெளிப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் / அல்லது சிறுபராயத்தில் வன்முறையின் அனுபவம் (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br><br>குறைந்த கல்வி நிலை (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br><br>போதைப்பொருள் மற்றும் மதுவின் தீங்கு விளைவிக்கும் பயன்பாடு (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br><br>உளவியல் செயலிழப்பு / மோசமான உணர்ச்சி ஒழுங்காக்கம் (ஆண்கள்)<br><br>வன்முறையை சாதாரணமாகவோ அல்லது அங்கீகரிக்கக்கூடியதாகவோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நியாயப்படுத்தும் அணுகுமுறைகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | வன்முறையற்ற தகவல்தொடர்பாடல் + மோதல் தீர்வு (ஆண்கள் மற்றும் பெண்கள்) வழிமுறைகளின் சிறுபராய அனுபவம்<br><br>கல்வி மற்றும் எழுத்தறிவு (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br><br>உயர் சுய-செயற்திறன் மற்றும் சுயமதிப்பு (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br><br>பால்நிலை சமத்துவமான மனப்பாங்குகள் மற்றும் நடைமுறைகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) |
| **நபர்களுக்கிடையிலான நிலை** | மோசமான / எதிர்மறையான பெற்றோருக்குரிய நடைமுறைகள்<br><br>திருமண முரண்பாடு மற்றும் குடும்ப முறிவு<br><br>மோசமான தொடர்பாடல், வினைத்திறனற்ற மோதல் தீர்வு மற்றும் பிரச்சினையைத் தீர்க்கும் திறன்<br><br>வன்முறையில் ஈடுபடும் சகாக்கள் | நேர்மறையான பெற்றோருக்குரிய நடைமுறைகள்<br><br>வன்முறை தூண்டுதல்களைத் தணிப்பதற்கான உறவுமுறைத் திறன்கள் (உதா. மோதல் தீர்வு, தொடர்பாடல்) |
| **சமுதாய நிலை** | ஆணின் சிறப்புரிமையை நிலைநிறுத்தும் மற்றும் பெண்களின் சுயாட்சியைக் கட்டுப்படுத்தும் தீங்கு விளைவிக்கும் பால்நிலை விழுமியங்கள்<br><br>பாடசாலைகளில் பரவலாக நடைமுறையில் உள்ள உடல் ரீதியான தண்டனை<br><br>வன்முறையை பொறுத்துக்கொள்ளும் / பதிலளிக்கத் தவறிய சமூக நிறுவனங்கள் | பன்முகத்தன்மை மற்றும் பால்நிலை சமத்துவத்துவம் போன்றவற்றிற்கானதும் பெண்களின் வலுவூட்டலை மேம்படுத்துவதற்கானதுமான அகிம்சையை ஆதரிக்கும் விழுமியங்கள்<br><br>சிறுவர் நட்பான மற்றும் பால்நிலை சமத்துவமான கலைத்திட்டங்கள் மற்றும் கற்பித்தலை ஊக்குவிக்கும் பாடசாலைச் சூழல்கள் |

### மாற்றத்தின் கோட்பாடு

பின்வரும் வரைபடம், குடும்ப உறவுகளை வளர்க்கின்ற, உடல் ரீதியான தண்டனைகளை தடுக்கின்ற, கடுமையான குழந்தை வளர்ப்பை குறைக்கின்ற மற்றும் நேர்மறையான குழந்தை-பெற்றோர் உறவை உருவாக்க எதிர்பார்க்கும் சான்று அடிப்படையிலான நடவடிக்கைகளை விளக்குகின்ற எளிமையான மாற்றத்திற்கான கோட்பாட்டை வழங்குகின்றது. இது குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மேலதிக விருத்தியையும் இசைவாக்கத்தையும் தேவைப்படுத்துகின்றது.

### C: சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினரின் துஷ்பிரயோகம் தடுக்கப்பட்டது



## நடவடிக்கைகளின் வகைகள்

VAC மற்றும் VAW இரண்டையும் கையாள்வதை நோக்காகக் கொண்டு பல்வேறு நாட்டுச் சூழல்களில் மிகவும் தெளிவான அணுகுமுறைகளில் நேர்மறையான குழந்தை வளர்ப்பு நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மற்றைய வகை நடவடிக்கைகளுக்கு மிகவும் வரையறுக்கப்பட்ட சான்றுகளே குறிப்பாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் (LMICs) சான்றுகளே உள்ளன.

பின்வரும் அட்டவணை RESPECT கட்டமைப்பில் இடம்பெற்றுள்ள முக்கியமான அணுகுமுறைகளை காட்டுவதுடன் தற்போதைய சான்று அடிப்படையின் சுருக்கமான கண்ணோட்டத்தையும் உதாரணமான நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகிறது. LMIC களில் இருந்தான நிகழ்ச்சித் திட்ட உதாரணங்கள் கிடைக்கின்ற போது அவை முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன.

**LEGEND**

- ● **தெளிவானது,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க குறைவினை காட்டுகின்றது
- ■ **அதிக சான்றுகள் தேவை,** >1 மதிப்பீடு வன்முறை தொடர்பான நடவடிக்கைகளில் நடுத்தரமான முன்னேற்றத்தை காட்டுகின்றது
- ◆ **முரண்பாடான நிலை,** மதிப்பீடுகள் வன்முறை குறைத்தலில் முரண்பாடான முடிவுகளை காட்டுகின்றது
- □ **சான்றுகள் இல்லை,** நடவடிக்கைகள் இன்னமும் வலுவாக மதிப்பிடப்படவில்லை
- ▼ **செயற்திறனற்ற நிலை,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் எவ்விதமான குறைவையும் காட்டவில்லை
- H உலக வங்கி உயர் வருமானமுள்ள நாடுகள் (HIC)
- L உலக வங்கி நடுத்தர மற்றும் குறைந்த வருமானமுள்ள நாடுகள் (LMIC)

| நடவடிக்கையின் வகை | விபரம் | விளைதிறனுக்கான சான்று | | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **IPV மற்றும் சிறுவர்களின் தவறான நடத்துகையை நிவர்த்தி செய்யும் குழந்தை வளர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள்** | பாதுகாவலர்-குழந்தை உறவுகள் மற்றும் ஒழுங்குமுறை நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட, அத்துடன் குறிப்பான நோக்குடன் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தும் மற்றும் கட்டுப்படுத்தும் பால்நிலை விழுமியங்கள், வகிபாகங்கள் மற்றும் உறவுகளுக்கு சவால் விடுக்கும் நடவடிக்கைகள் அல்லது சேவைகள் இந்த மூலோபாயத்தின் கீழ் மிகவும் உறுதியான அணுகுமுறையாகும்.<br><br>இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் தந்தையர்கள் மற்றும் தம்பதிகளை இலக்கு வைப்பதுடன், பெற்றோர்-பிள்ளை தொடர்பாடல் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை நடைமுறைகளில் கவனம் செலுத்துவதுடன் பிரதிபலிப்பு, உரையாடல் மற்றும் செயற்பாட்டை ஊக்குவிக்கின்றன. பிள்ளை வளர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள் பொதுவாக தனிப்பட்ட ஆலோசனை அல்லது குழு கலந்துரையாடல்கள், நேர்மறையான வகிபாக மாதிரி மற்றும் பெற்றோர் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு இடையேயான கட்டமைக்கப்பட்ட விளையாட்டு ஆகியவற்றை உள்ளடக்கும்.[14] | ● H<br>● L | HICs மற்றும் LMICs[15] ஆகிய இரண்டிலும் இருந்து IPV மற்றும் சிறுவர்களின் வன்முறை செயற்பாடுகளை சமாளிப்பதற்கு இது ஒரு வினைத்திறனான நடவடிக்கை வகை என்பதற்கு **தெளிவான சான்றுகள்** உள்ளன, HIC களின் சான்றுகள் குழந்தைகளை தவறாக நடத்துதலை தடுப்பதிலும் இளைஞர்கள் மீதான மற்றும் இளைஞர்களால் ஏற்படும் வன்முறையைக் குறைப்பதில் பிரதானமான மற்றும் நீண்டகால நன்மைகளைக் காட்டுகின்றன. | Bandebereho (ருவாண்டா)<br><br>Real Fathers (உகாண்டா)<br><br>Parenting for Lifelong Health (தென் ஆபிரிக்கா)<br><br>Parents Make the Difference (லைபீரியா)<br><br>Building Happy Families (தாய்லாந்து) |

| நடவடிக்கையின் வகை | விபரம் | | விளைதிறனுக்கான சான்று | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **பாலியல் வன்புணர்வு மற்றும் dating உட்பட வாழ்க்கைத் திறன்கள்/ பாடசாலை சார்ந்த கலைத்திட்டம்** | இதில் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் இளம் பருவத்தினரிடையே பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் சகாக்கள் மற்றும் உறவுகளின் மூலமான வன்முறையை நிவர்த்தி செய்வதற்கான கலைத்திட்ட அடிப்படையிலான அணுகுமுறைகள் அடங்கும். | H<br>L | HIC களில் இருந்தான dating வன்முறை தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட பாடசாலை அடிப்படையிலான நடவடிக்கைகளின் மதிப்பீடுகள், இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் VAW ஐக் குறைப்பதற்கு காட்டப்பட்டுள்ளதா என்பதில் **குழப்பகரமான முடிவுகளைக்** காட்டுகின்றன. | Prepare (தென் ஆபிரிக்கா)<br><br>Right to Play (பாகிஸ்தான்) |
| **வன்முறைத் தடுப்பு பயிற்சிநெறி** | | | LMICக்களில் வன்முறையைக் குறைப்பதில் இந்த நடவடிக்கை வகையின் வினைத்திறன் குறித்து **இன்னமும் அதிகமான சான்றுகள் தேவைப்படுகின்றது.**<br><br>மேலதிகமாக, கல்லூரி சார்ந்த தற்காப்பு நடவடிக்கைகள் HIC களில் வினைத்திறனானதாக இருக்கும் என்பதற்கு சிறந்த சான்றுகள் உள்ளன, ஆனால் LMIC க்களில் உள்ள பாடசாலைகளில் dating வன்முறையைக் குறைப்பதில் தற்காப்பு நடவடிக்கைகள் வினைத்திறனாக இருக்கும் என்பதற்கு குழப்பகரமான சான்றுகள் உள்ளன. | Ujamaa/ No Means No Empowerment Transformation Training (கென்யா) |
| **வீட்டு வருகையும் சுகாதார பணியாளர்களின் பெறுகையும்** | இந்த நடவடிக்கைகளில் பொதுவாக தாதியர்கள் அல்லது சமூக சுகாதாரப் பணியாளர்கள் வீட்டிற்குச் செல்வது, IPV ஆபத்தில் இருக்கும் அல்லது அனுபவிக்கும் தாய்மார்கள் மற்றும் சிறுவர் துஸ்பிரயோக ஆபத்தில் உள்ள குடும்பங்களை இலக்காக கொள்வது ஆகியவை அடங்கும். இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பொதுவாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அனைத்து வயது குழந்தைகளின் தாய்மார்கள் உட்பட தாய்மாருடன் செயற்படுவதுடன், குழந்தை வளர்க்கும் திறன்களை வலுப்படுத்த முயல்கின்றன.[16] | H<br>L | பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் அனுபவிக்கும் வன்முறையின் அளவைக் குறைப்பதற்கு **தெளிவான அணுகுமுறையாக** பல அமர்வுகளை உள்ளடக்கிய வீட்டு வருகை மற்றும் சுகாதாரப் பணியாளர்களை அடைவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன என்பதற்கு HIC களில் இருந்து சான்றுகள் உள்ளன.<br><br>நேர்மறையான தாக்கங்கள் நிலையானதா என்பதைச் சோதிப்பதற்கான பின்தொடர்தல் ஆய்வுகளுடன் கூடியதாக இந்த நடவடிக்கைகள் IPV மற்றும் பிள்ளையை தவறாக நடாத்துதலின் அளவைக் குறைக்க முடியுமா என்பதற்கு LMIC களிடமிருந்து **இன்னமும் அதிகமான சான்றுகள் தேவைப்படுகின்றது.**[17] | Nurse-Family Partnership (அமெரிக்கா)<br><br>VoorZorg (நெதர்லாந்து)<br><br>The Infants programme (தென் ஆபிரிக்கா) |

| நடவடிக்கையின் வகை | விபரம் | | விளைதிறனுக்கான சான்று | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **வன்முறையை அனுபவிக்கும் மற்றும் IPV க்கு சாட்சியாக இருக்கும் சிறுவர்களுக்கான உளவியல் ஆதரவு நடவடிக்கைகள்** | இந்த உளவியல் நடவடிக்கைகளின் தொகுப்பு உளநலம் மற்றும் சிறுவயது அனுபவம் அல்லது வன்முறையை நேரில் கண்டதுடன் தொடர்புடைய உளநலம் மற்றும் உளக்காய விளைவுகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் சிறுவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், தலைமுறைகளுக்கிடையேயான வன்முறையின் சுழற்சியை நிறுத்துவதற்கும் முக்கியமானதாக இருக்கும். | H | இந்த வகையான நடவடிக்கைகள் VAW மற்றும் VAC இன் அளவைக் குறைக்க வழிவகுக்கும் என்பதற்கு HIC களில் இருந்து **உறுதியான சான்றுகள்** உள்ளன. | WHO Guidelines for Mental Health (mh-GAP) (உலகெங்கிலும்) |
| | | L | LMICக்களில் இருந்து கிடைக்கும் சான்றுகள், தாய்மார்களையும் அவர்களது குழந்தைகளையும் இலக்கு வைக்கும் தனித்தனியான அமர்வுகள் மற்றும் ஒன்றுசேர்ந்த அமர்வுகளை கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் வன்முறையின் உளசமூக தாக்கங்களை நிவர்த்தி செய்வதில் குறிப்பாக பயனுள்ளவையாக இருக்கலாமென பரிந்துரைக்கின்றன.[18] இருப்பினும், இவ்வாறான அணுகுமுறைகள் எதிர்காலத்தில் சிறுவர் துஸ்பிரயோகத்தையும் வீட்டில் IPV இடம்பெறுவதையும் தடுக்கின்றனவா என அறிவதற்கு LMICக்களிலிருந்து **இன்னமும் அதிகமான சான்றுகள் தேவைப்படுகின்றது.** | VEGA Family Violence Project (கனடா) |

## உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள்

பின்வரும் அட்டவணை நிகழ்ச்சித் திட்ட கால எல்லைக்குள் VAC மற்றும் VAW பரவலைக் குறைப்பினை வெளிக்காட்டிய மூன்று வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைச் சுருக்கமாகக் கூறுகிறது. இந்த ஏதேனும் செயன்முறைகளில் இசைவாக்கமடையும் போது பக்கம் 9 இல் வழங்கப்பட்டுள்ள **வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்புப் பட்டியல்** மற்றும் RESPECT கட்டமைப்பில் வழங்கப்பட்டுள்ள **வினைத்திறனான நிகழ்ச்சித் திட்டத்திற்கான வழிகாட்டுதல் கொள்கைகளுடன்** அட்டவணை மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விரிவான தகவல்கள் **நிகழ்ச்சித் திட்ட சுருக்கங்களில்** வழங்கப்பட்டுள்ளன.

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| **Bandebereho, MenCare+, Rwanda Men's Resource Center (RWAMREC)** | பால்நிலை-அதிகார சமத்துவமின்மைகளை மாற்றுவதற்கும் மற்றும் IPV மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை செயற்பாடுகளை குறைப்பதற்குமான நேர்மறையான தந்தையாக இருத்தலையும் தந்தை மற்றும் அவர்களது பங்காளர்களிடையே பால்நிலை சமத்துவத்தையும் ஊக்குவிப்பதற்கான தம்பதிகளுக்கான ஒரு நடவடிக்கை | ருவாண்டாவின் 4 மாவட்டங்களான Karongi, Musanze, Nyaruguru and Rwamagana இல் அமுல்படுத்தப் பட்டது | 21-35 வயதுடைய ஆண்கள், திருமணமான அல்லது இணைந்து வாழ்கின்ற தந்தையாக எதிர்பார்ப்பவர்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்டவர்களின் தந்தைகள் மற்றும் அவர்களது கூட்டாளிகள் | பங்கேற்புடனான, 15 அமர்வுகள் ஆண்களுக்கும் மற்றும் 8 அமர்வுகள் அவர்களின் பங்காளர்களுக்கும் உட்பட ஆண்கள் மற்றும் அவர்களது பங்காளர்களுக்கான சிறிய குழு அமர்வுகள்.<br><br>இந்த அமர்வுகள் பால்நிலை மற்றும் அதிகாரம், தந்தையாக இருத்தல், பராமரிப்பு, சிறுவர் விருத்தி, தம்பதிகளின் தொடர்பாடல் மற்றும் தீர்மானமெடுத்தல் ஆகியவற்றில் முக்கிய பிரதிபலிப்பு மற்றும் உரையாடலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.<br><br>கலைத்திட்டமானது, தாய்மை மற்றும் குழந்தை ஆரோக்கியத்தில் ஆண்களை ஈடுபடுத்துவதற்காக MenCare + நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து பின்பற்றப்பட்டது. | 1 வருடம் | **மதிப்பீட்டு வகை:** எழுந்தமானமான கட்டுப்பாட்டு சோதனை (RCT)<br><br>**தாக்கம்:** ஆரம்ப கணக்கெடுப்பின் 21 மாதங்களுக்கு பிறகு, பெண்களின் உடலியல் ரீதியான IPV மற்றும் பாலியல் ரீதியான IPV அனுபவங்களில் குறிப்பிடத்தக்க குறைவுகள் காணப்பட்டன.<br><br>நடவடிக்கையில் பங்கெடுத்த பெண்களும் ஆண்களும் சிறுவர்களின் உடலியல் ரீதியான தண்டனையை கணிசமாகக் குறைத்தாக அறிக்கையிட்டுள்ளனர்.[19] |

| அணுகுமுறை | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| **PREPARE, Western Cape Department of Health, the City of Cape Town Health Department, the Desmond Tutu HIV Foundation; Centre for Justice and Crime Prevention (CJCP)**[20] | பல்வேறு கூறுகளை கொண்டது, இளம் பருவத்தினருக்கான பாடசாலை அடிப்படையிலான HIV மற்றும் IPV தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் | மேற்கு கேப், தென் ஆபிரிக்காவில் 42 உயர்தர பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டது | 13-14 வயதுக்குட்பட்ட தரம் 8 மாணவர்கள் | 25 பங்கேற்பாளர்கள் வரை உள்ளடக்கி நேர்மறை பால்நிலை விழுமியங்கள் மற்றும் பாலியல் கல்வியுடனான சௌகரியத்திற்காக மதிப்பிடப்பட்ட பயிற்சி பெற்ற வசதிப்படுத்துனர்களால் வழங்கப்படுகின்ற 21 அமர்வுகள். அமர்வுகள் தொடர்பாடல், உறவுமுறைகள், பால்நிலை அதிகார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் IPV ஆகியவற்றை உள்ளடக்கியது. கல்விக்கான கூறு பாதுகாப்பற்ற பௌதீக இடங்கள் தொடர்பான பயிற்சிநெறி மற்றும் வரைபடமாக்கல் ஆகியவை உள்ளிட்ட பாடசாலை சுகாதார சேவை மற்றும் பாடசாலை பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்படுகிறது. | 12 மாதங்கள் | **மதிப்பீட்டு வகை:** RCT<br><br>**தாக்கம்:** ஆரம்ப கணக்கெடுப்பின் 12 மாதங்களுக்கு பின்னர், பெண்பிள்ளைகள் அனுபவித்த dating வன்முறை அனுபவத்தில் குறைவு.[21] |
| Right to Play<br>**Right to Play Pakistan (RTP) and the Aga Khan Foundation** | பாடசாலைகளில் சகாக்களின் வன்முறையைக் குறைப்பதற்கான ஒரு விளையாட்டு மற்றும் விளையாட்டு சார்ந்த நிகழ்ச்சித் திட்டம் | ஹைதராபாத், சிந்து மாகாணம், பாகிஸ்தான் | சராசரி வயது 12 உடைய தரம் 6 மாணவர்கள் | பாடசாலை அட்டவணையில் வாரத்திற்கு இருமுறை 40 நிமிடம் வரையான கட்டமைக்கப்பட்ட இடைத்தொடர்புடன் கூடிய விளையாட்டு அடிப்படையிலான கற்றல் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டது. வன்முறை மற்றும் பாலின சமத்துவமின்மையை சவாலுக்கு உட்படுத்துகின்ற தர்க்கரீதியான சிந்தனை உள்ளிட்ட அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களை விருத்தி செய்வதில் செயற்பாடுகள் கவனம் செலுத்தப்பட்டன.<br><br>பாடசாலை அடிப்படையிலான நடவடிக்கை சுற்றுப்போட்டிகள், நிகழ்வுகள் மற்றும் வழக்கமான "விளையாட்டு நாட்கள்" (உதா. "வன்முறையை நிறுத்துதல்" என்ற கருப்பொருளில் கவனம் செலுத்தப்பட்டது) மூலம் பெற்றோர்களையும் பரந்த சமூகத்தையும் ஈடுபடுத்தியது.[22] | 2 வருடங்கள் | **மதிப்பீட்டு வகை:** RCT<br><br>**தாக்கம்:** சகாக்களின் வன்முறையில் குறிப்பிடத்தக்க குறைவு, பாடசாலைகளிலும் வீட்டிலும் உடலியல் ரீதியான தண்டனைகளில் குறிப்பிடத்தக்க குறைவு மற்றும் வீட்டில் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் குடும்ப வன்முறையைக் கண்டதாக அறிக்கையிடுவதில் குறிப்பிடத்தக்க குறைவு. ஆண்பிள்ளைகள் மற்றும் பெண்பிள்ளைகள் ஆகிய இருபாலருக்கும் பால்நிலை சமத்துவ மனப்பாங்குகள் மேம்பட்டன.[23] |

# வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்பு பட்டியல்

**சிறுவர் மற்றும் இளம்பருவத்தினரின் துஸ்பிரயோகத்தை தடுப்பதற்கான வினைத்திறனான அணுகுமுறைகளின் பொதுவான கூறுகள் மற்றும் கொள்கைகள் பின்வருமாறு-**[24 25]

## நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு மற்றும் இசைவாக்கம்

1. **VAC மற்றும் VAW ஆகிய இரண்டிற்குமான ஆபத்து காரணிகளை நிவர்த்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைக்கவும்.** சிறுவர் துஸ்பிரயோகத்தை மட்டும் நிவர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், தங்களின் தாய்மார்களுக்கு எதிராக IPV ஐத் தொடர்ந்து பார்க்கும் சிறுவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தையே ஏற்படுத்தும் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன.[26] VAC மற்றும் VAW ஆகிய இரண்டிற்கும் பொதுவான ஆபத்து காரணிகளை அகற்றுவதில் கவனம் செலுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டு வகையான வன்முறைகளையும் குறைப்பதற்கான அதிகளவான சாத்தியத்தைக் கொண்டுள்ளன. உதாரணமாக, SASA தொடர்பான ஒரு கற்கை! உகாண்டாவில் குடும்பங்களில் இடம்பெறும் அனைத்து வகையான வன்முறைகளையும் தடுப்பதற்கு அதிகளவில் இணைந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான சாத்தியத்தை அடையாளம் கண்டுள்ளது.[27]

2. **குடும்பங்களுக்குள் உள்ளடங்கலாக, பால்நிலை மற்றும் அதிகாரத்தைப் பற்றிய பகுத்தறிகின்ற பிரதிபலிப்பில் கவனம் செலுத்துதல்.**[28] பால்நிலை விழுமியங்கள் சிறுவர்களுக்கு எவ்வாறு கற்பிக்கப்படுகின்றன மற்றும் அவர்களின் நடத்தையை அகற்றவும் மாற்றவும் அவர்களுக்கு உதவும் ருவாண்டாவில் பண்டேபெரேஹோ தம்பதிகளுக்கான நடவடிக்கைகள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் VAC மற்றும் VAW ஆகிய இரண்டையும் குறைப்பதில் உறுதியைக் காட்டுகின்றன.[29]

3. **வெறுமனே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை விட, உறவுமுறை மற்றும் குழந்தை வளர்ப்புக்குரிய திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள்.**[30] பாதுகாப்பான இடங்களில் உறவுமுறை திறன்களைப் பயிற்சி செய்வதற்கான வாய்ப்புகள் உட்பட, உறவுமுறை திறன்களை வளர்த்துக்கொள்ள முனைப்பாக முயற்சிக்கும் நடவடிக்கைகள், வன்முறையைத் தடுப்பதில் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளன.[31] இவற்றில் பெற்றோர்களிடையே நேர்மறையான ஒழுக்கத் திறன்களை விருத்தி செய்தல், கோபம் மற்றும் விரக்தி போன்ற கடினமான உணர்ச்சிகளை முகாமை செய்ய பெற்றோருக்கு உதவுதல் மற்றும் நெருங்கிய பங்காளர்களிடையே நேர்மறையான தொடர்பாடல் திறன்கள் ஆகியவை உள்ளடங்கும்.[32]

4. **அணுகுமுறைகள் உள்ளூர் சூழலுக்கு ஏற்றவாறு இசைவாக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட வேண்டும்.** நிகழ்ச்சித் திட்ட இசைவாக்கம், குறிப்பாக தந்தைமாரை ஈடுபடுத்துவதிலுள்ள ஆட்சேர்ப்பு மற்றும் தக்கவைப்புக்குரிய தடைகளை தீர்க்க உதவும். மேலதிகமாக, நிகழ்ச்சித் திட்டங்கள் தனிப்பட்ட நிலை மாற்றங்களைத் தக்கவைக்கக்கூடிய ஓர் சாதகமாக்கும் சூழலை உருவாக்குவதற்கு இலக்கு குழுவிற்கு அப்பால் விழுமியங்களை நிவர்த்தி செய்வதற்கு பணியாற்ற வேண்டும். உதாரணமாக, வெவ்வேறு தரப்பினரை (சமூகம் மற்றும் மதத் தலைவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள், பாடசாலை முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், குழந்தை பருவ கல்வி சேவைகள்) ஈடுபடுத்துவதன் மூலமும் சமூக மற்றும் நடத்தை பிரச்சாரங்கள் போன்ற பிற உத்திகள் மூலமாகவும்.

## அமுல்படுத்தல் மற்றும் தாக்கத்தை அதிகரித்தல்

5. **பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு பல்வேறு அமர்வுகளைச் உள்ளடக்கியதாக, பிரதானமான எண்ணக்கருக்களை வலுப்படுத்தி, வாரங்களுக்குப் பதிலாக மாதங்களில் கற்பித்தல்.**[33 34] ஒரு முறை மட்டும் நிகழும் அமர்வுகள் வினைத்திறனானதாக தெரியவில்லை. VAW மற்றும் VAC ஆகியவற்றை இயக்கும் மற்றும் நிலைநிறுத்தும் தீங்கிழைக்கும் சமூக விழுமியங்களை மாற்றுவதற்கு, பிரதான செய்திகளை கற்பதும் காலப்போக்கில் அதனை திரும்பத் திரும்பச் செய்வது அவசியமாகும். தனி பாலினம் மற்றும் கலப்பு-பாலின குழுக்கள் ஆகிய இரண்டையும் அனுமதிக்கின்ற பல்வேறு அமர்வுகள் நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியமான வெற்றிக் காரணியாக உள்ளன.[35]

6. **வசதிப்படுத்துனர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள், மேற்பார்வையிடப்பட்டவர்கள் மற்றும் கண்காணிக்கப்படுபவர்கள்**[36 37] மற்றும் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுக்கான அணுகலைக் கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தவும். இந்தக் காரணிகள் சிறுவர்களை தவறாக நடத்துகை உட்பட, நேர்மறையான நிகழ்ச்சித் திட்ட விளைவுகளுடன் தொடர்புடையவை என்பதை வீட்டுவருகை நிகழ்ச்சித் திட்டங்களின் சான்றுகள் காட்டுகிறன.[38]

7. **குழந்தை வளர்ப்பிற்கான நடவடிக்கைகளில் சிறு குழுக்கள் மற்றும் தனிப்பட்ட அமர்வுகள் இரண்டையும் உள்ளடக்கி,** பங்கேற்பாளர்களுக்கு பால்நிலை விழுமியங்கள் மற்றும் அதிகாரம் தொடர்பில் மற்றவர்களுடன் கலந்துரையாடுவதற்கும், பாதுகாப்பான இடத்தில் புதிய மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளை பயிற்சி செய்து மாதிரியாக்குவதற்கும் மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகளை வழிகாட்டிகளுடன் பகிர்ந்து கொள்ளுவதற்கும் வாய்ப்புகளை வழங்குதல்.[39]

8. **வன்முறைக்கான அதிகரித்த ஆபத்தில் இருக்கும் குடும்பங்களை எவ்வாறு சென்றடைவது என்பதைக் கருத்தில் கொள்ளவும்.** வீடுகளுக்குச் செல்வது வீட்டிற்குள் வன்முறையை அனுபவிக்கும் அபாயம் உள்ளவர்கள் உட்பட வழக்கமான சேவைகளில் ஈடுபடாத குடும்பங்களைச் சென்றடைய மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.[40]

9. **பங்கேற்பு முறையிலான மற்றும் விளையாட்டு அடிப்படையிலான அணுகுமுறைகளைப் பயன்படுத்தவும்.**[41] பாடசாலை நாட்களினுள் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட இடைத்தொடர்பை ஏற்படுத்தும், கலைத்திட்ட அடிப்படையிலான அணுகுமுறைகள் குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.[42] உதாரணமாக, Right to Play இனுடைய நேர்மறையான இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் பாகிஸ்தான் பெற்றோர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்திற்கான கருப்பொருளை முன்னிலைப்படுத்தும் விளையாட்டு நாட்கள் உட்பட சமூக விழுமியங்களை சிறுவர்கள் புரிந்து கொள்ளவும், பிரதிபலிக்கவும் அனுமதிக்கும் கலைத்திட்டம் மற்றும் விளையாட்டு அடிப்படையிலான பாடசாலைச் செயற்பாடுகளின் தொகுப்பை உள்ளடக்கியது.[43]

10. அமுல்படுத்துகைக்கு முன்னராக **சிறுவர் பாதுகாப்புச் செயற்பாட்டாளர்களுடனான ஒருங்கிணைப்பு** மற்றும் அமுல்படுத்துபவர்கள் இந்த பொறிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருப்பதை உறுதிப்படுத்தல் **உட்பட சிறுவர்களுக்கு நட்புறவான பால்நிலை-உணர்திறனான அறிக்கையிடல் மற்றும் ஆற்றுப்படுத்தல் பொறிமுறைகள் நடைமுறையில் உள்ளமையை உறுதிப்படுத்தல்.**[44] இது பாதுகாப்பு மற்றும் "எந்தத் தீங்கும் செய்யாமை" நிகழ்ச்சித் திட்டங்களின் இன்றியமையாத பகுதியென்பதுடன், VAW மற்றும் VAC ஆகிய இரண்டிற்கும் (பெரும்பாலும் வெவ்வேறு பங்குதாரர்களுடன் பணியாற்ற வேண்டியிருக்கும்) சரியான முறையில் பதிலளிப்பதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாராக இருக்க வேண்டும். கட்டாயமான அறிக்கையிடல் நடைமுறையில் உள்ள அமைப்புகளில், உடலியல் அல்லது பாலியல் ரீதியான துஸ்பிரயோகம் தொடர்பான சம்பவங்களை உரிய அரச தரப்பிற்கு சேவை வழங்குநர்கள் தெரிவிக்க வேண்டும். பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்கு பதிலளிப்பது குறித்த உலக சுகாதார அமைப்பின் மருத்துவ வழிகாட்டுதலின் சிறந்த நடைமுறைகளுக்கான அறிக்கை 7 இல் கட்டாயமான அறிக்கையிடலின் நெறிமுறை மற்றும் பாதுகாப்புக் கருத்தாய்வுகள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

11. குறிப்பாக சிறுவர் பாதுகாப்பு அமைப்புகளான சம்பவ முகாமைத்துவம், ஆற்றுப்படுத்தல்கள் மற்றும் உளசமூக ஆதரவு போன்ற பயிற்சி பெற்ற சமூகப் பணியாளர்களின் போதுமான எண்ணிக்கையுடன் **அமைப்புகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துவது தாக்கத்தை உயர்த்துவதற்கு மிக முக்கியமானது.**

## நுழைவுப்புள்ளிகள்

சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினரின் துஸ்பிரயோகத்தை நிவர்த்தி செய்வதற்கான அணுகுமுறைகள் தாக்கத்தை அதிகரிப்பதற்காக பல்வேறு அமைப்புகள் மற்றும் பிரிவுகளில் ஒருங்கிணைக்கப்படலாம். தற்போதைய முன்முயற்சிகளின் மீது கட்டியெழுப்புவது தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை அடைவதை அதிகரிப்பதற்கு வினைத்திறனானதாக இருப்பதுடன் அவர்களின் முயற்சிகளுக்கு மேலதிகமான நேர்மறையான விளைவுகளை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சித் திட்ட உதாரணங்கள் உட்பட, இந்த மூலோபாயத்திற்கான முக்கிய நுழைவுப் புள்ளிகளை பின்வரும் அட்டவணை சுட்டிக்காட்டுகிறது.

| நுழைவுப் புள்ளி | விளக்கம் |
|---|---|
| **சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார வலுவூட்டல் நடவடிக்கைகள்**<br>• பணப் பரிமாற்றங்கள்<br>• பால்நிலை விழுமிய பயிற்சியுடன் இணைந்த கிராம சேமிப்பு மற்றும் கடன் சங்கங்கள் (VSLAs)<br>• பால்நிலை விழுமிய பயிற்சியுடன் இணைந்த நுண்நிதி<br>• இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டங்கள் | வருமானம் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள், ஆபத்து காரணிகளில் கவனம் செலுத்துவதன் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் VAC மற்றும் VAW க்களை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. பால்நிலை விழுமியங்கள் தொடர்பான பயிற்சியுடன் குடும்பங்களுக்கும் பெண்களுக்கும் பொருளாதார வாய்ப்புகளை வழங்கும் திட்டங்கள் வன்முறையைக் குறைப்பதில் வெற்றிகரமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.[45] இளம் பருவத்தினருக்கு, பல அடுக்குகளை கொண்ட நீண்ட கால நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனாக இருக்கும்.[46]<br><br>உதாரணமாக, **இளம் பருவத்தினருக்கான வலுவூட்டல் மற்றும் வாழ்வாதார (ELA) நிகழ்ச்சித் திட்டம்** ஆப்கானிஸ்தான் மற்றும் உகாண்டாவில் பாலியல் வன்புணர்வு நிகழ்வுகளை 50% குறைத்தது. இது இளம் பருவப் பெண்களுக்கு வழிகாட்டுதல், வாழ்க்கைத் திறன்கள் மற்றும் இளைஞர் கழகங்களில் நுண்கடன் பயிற்சி ஆகியவற்றை ஆதரிக்கிறது. இந்த நிகழ்ச்சித் திட்டம் சக வழிகாட்டிகளால் நடாத்தப்படுகின்றதுடன், பால்நிலை விழுமியங்கள் மற்றும் பாலியல் மற்றும் இனவிருத்தி ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.[47]<br><br>பணப் பரிமாற்றங்கள் உட்பட சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கள் VAW மற்றும் VAC ஆகியவற்றில் பாதுகாப்பு விளைவுகளை ஏற்படுத்தலாம்.[48] ஆப்பிரிக்காவில் இளம்பருவ பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை தொடர்பான மிகவும் உறுதியான சான்றுகள் உள்ளன. உதாரணமாக, கென்யாவில் அனாதைகள் மற்றும் நலிவடையக்கூடிய சிறுவர்களுக்கான பணப் பரிமாற்ற மதிப்பீட்டில், இளம்பருவ பெண்களிடையே பணத்திற்கான பாலியல் உறவில் குறைவை கண்டறிந்துள்ளது.[49] பணப் பரிமாற்றங்கள் சிறுவர்களை தவறாக நடாத்துவதை 10% குறைக்கலாமென்றும் இளம் பருவ ஆண்பிள்ளைகளிடையே சமூக சார்பு நடத்தையை அதிகரிக்கும் என்றும் ஆராய்ச்சி காட்டுகிறது.[50] சிறுவர்கள் மற்றும் பெண்களை வன்முறையில் இருந்து பாதுகாக்கும் வடிவமைப்பு அம்சங்களை ஆராய்வதற்கும், மேலும் சாத்தியமான பாதகமான தாக்கங்களை எவ்வாறு குறைப்பது என்பது குறித்தும் ஆராய்வதற்கு மேலதிக ஆராய்ச்சி தேவையாகும்.[51] மேலதிக தகவலுக்கு RESPECT- வறுமை குறைக்கப்பட்டது மூலோபாய உத்தியைப் பார்க்கவும். |
| **கல்வி**<br>• வாழ்க்கை திறன்கள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்<br>• விரிவான பாலியல் கல்வி<br>• விளையாட்டு மற்றும் பங்கெடுத்தல்<br>• ஆரம்பகால குழந்தை பருவ வளர்ச்சி | பாடசாலைகள் அதிக எண்ணிக்கையிலான சிறுவர்களை வன்முறையைச் சுற்றியுள்ள பால்நிலை விழுமியங்கள் உள்வாங்கப்படுவதற்கு முன்பான வயதில் சென்றடைவதால் VAC மற்றும் VAW தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு குறிப்பாக பயனுள்ள அமைப்புகளாகும். இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் சிறுவர்களுக்கு வன்முறையைப் பற்றி கற்பிக்க முனைவதுடன் மற்றும் மற்றைய சிறுவர்கள் அல்லது வளர்ந்தவர்களால் வன்முறைக்கு ஆளாகும் அபாயத்தைக் குறைப்பதற்காக அவர்களின் திறன்களை அடிக்கடி வளர்க்கின்றன.<br><br>உதாரணமாக, பால்நிலை சமத்துவம் மற்றும் அகிம்சைக்கு ஆதரவாக சமூக விழுமியங்களை மாற்றுவதற்காக பாகிஸ்தானில் Right to Play விளையாட்டு மற்றும் பங்கெடுத்தலைப் பயன்படுத்தியது. இறுதிநிலை ஆராய்ச்சி வீட்டிலும் பாடசாலையிலும் உடலியல் ரீதியான தண்டனைகளிலும், பாடசாலையில் சகாக்களின் வன்முறை மற்றும் வீட்டில் குடும்ப வன்முறையை கண்டமையிலும் குறிப்பிடத்தக்க குறைவுகளைக் காட்டியது.[52 53] |

| நுழைவுப் புள்ளி | விளக்கம் |
|---|---|
| **சுகாதாரம்**<br>• பாலியல், இனவிருத்தி ஆரோக்கிய நிகழ்ச்சித்திட்டம், குறிப்பாக பிறப்புக்கு முந்தைய பராமரிப்பு<br>• சமூக சுகாதார பணியாளர்களை கொண்டிருத்தல் | வன்முறை அனுபவம், குறிப்பாக வீட்டில் வன்முறை, பெரும்பாலும் சுகாதாரத் துறையினரால் தான் முதலில் கையாளப்படுகின்றது. நுழைவுப் புள்ளிகளில் மற்ற வகை சமூக அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கப்படாத பிரசவத்திற்கு முன்னய பரிசோதனைகள் மற்றும் சுகாதாரப் பணியாளர் வீட்டிற்குச் செல்வது ஆகியவை அடங்கும்.<br><br>உதாரணமாக, வாழ்நாள் ஆரோக்கியத்திற்கான குழந்தை வளர்ப்பு திறன் (PLH) நிகழ்ச்சித் திட்டமானது பிரசவத்திற்கு முன்னரான மற்றும் இளம் பருவ பெற்றோருக்கான அணுகுமுறைகளை உள்ளடக்கியது. தாய்மார்கள் கர்ப்பமாக இருக்கும் போது ஆரம்பித்து, அவர்களின் குழந்தைகளுக்கு 6 மாதங்கள் ஆகும் வரை சமூக சுகாதாரப் பணியாளர்களால் இந்த குழந்தைகள் நிகழ்ச்சித் திட்டம் வழங்கப்படுகிறது. நேர்மறையான குழந்தை பராமரிப்பு மற்றும் பெற்றோர்-குழந்தை உறவுகளை உருவாக்குவதற்கான முறைமைகளுடன் இணைந்த ஆலோசனை அணுகுமுறையை நிகழ்ச்சித் திட்டம் பயன்படுத்துகிறது.[54 55] பெற்றோர் மற்றும் பதின்ம வயதினருக்கான PLH திட்டம் பெற்றோர் மற்றும் 10-17 வயதுடைய சிறுவர்களுடன் இதே அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. தென்னாப்பிரிக்காவில் இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களின் ஆய்வுகளும், துஸ்பிரயோகம் மற்றும் உடலியல் ரீதியான தண்டனைகளின் குறைவு மற்றும் மேம்படுத்தப்பட்ட நேர்மறையான குழந்தை வளர்ப்பு திறன் ஆகியவற்றில் நீண்டகால நடவடிக்கை விளைவுகளைக் கண்டறிந்துள்ளன. |

# பயன்படுத்தப்பட்ட ஆதாரங்கள்

## சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையுடனான அதன் தொடர்புகளைப் புரிந்துகொள்தல்

Bridging the gaps: a global review of intersections of violence against women and violence against children, Guedes, A. Bott, S., García-Moreno, C. and M. Colombini. Global Health Action, vol. 9, no. 10. 2016
குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து, பங்காளர் அல்லாதவர்களின் பாலியல் வன்முறை உட்பட VAC மற்றும் VAW இடையேயான மேற்பொருந்துகைகளின் சான்றுகளின் மீளாய்வு விவரிப்பை வழங்குகிறது.

Intersections of violence against women and violence against children. Fulu, E., McCook, S. and K. Falb. What Works Evidence Review Cape Town: South Africa. 2017
பகிரப்பட்ட ஆபத்து காரணிகள், பொதுவான சமூக விழுமியங்கள், இணையான நிகழ்வுகள் மற்றும் துஸ்பிரயோகத்தின் இடைநிலை சுழற்சி உட்பட VAC மற்றும் VAW க்கு இடையேயான தொடர்புகள் பற்றிய சான்றுகளின் சுருக்கத்தை வழங்குகிறது.

Global prevalence of past-year violence against children: a systematic review and minimum estimates Hillis, S., Mercy, J., Amobi, A., et al. Pediatrics, vol. 137; no. 3. 2016
சிறுவர்களுக்கு எதிரான கடந்த ஆண்டு வன்முறைக்கான மிகவும் வலுவான மற்றும் சமீபத்திய உலகளாவிய பரவுகை தொடர்பான மதிப்பீடுகளை வழங்குகிறது.

Hidden in plain sight: a statistical analysis of violence against children, New York: UNICEF. 2014.
உலகளாவிய புள்ளிவிவரங்கள் மற்றும் 190 நாடுகளின் தரவுகளுடன் சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு வகையான வன்முறைகளின் பரவல் பற்றிய தரவை வழங்குகிறது.

What works to prevent sexual violence against children: Evidence Review. Ligiero, D., Hart, C., Fulu, E., Thomas, A., & Radford, L. Together for Girls. 2019
சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்கு எதிரான பாலியல் வன்முறையைத் தடுக்க என்ன வேலை செய்கிறது என்பதற்கான தற்போதைய சான்றுகளின் வாசகருக்கு நட்புறவான சுருக்கத்தை வழங்குகிறது.

## ஏயுஊ மற்றும் பதிலளிப்பின் தாக்க அதிகரிப்பை புரிந்துகொள்ளுதல்

Violence Against Children Surveys (VACS), US Centers for Disease Control and Prevention (CDC).
பெண்பிள்ளைகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான உடலியல், உணர்ச்சி மற்றும் பாலியல் வன்முறைகளை அளவிடும் VAC கணக்கெடுப்புகள், ஒன்றாக இணைந்து பெண்களுக்காக CDC ஆல் வழிநடத்தப்படுகின்றன. பல LMIC களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பகுப்பாய்வு இணையதளத்தில் கிடைக்கிறது.

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை அச்சுறுத்தலுக்கு நாடுகள் எவ்வாறு பதிலளிக்கின்றன என்பதை 60-நாடுகளின் தரப்படுத்தல் குறியீடான The Economist Out of the Shadows index மதிப்பிடுகின்றது.

## சர்வதேச கட்டமைப்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள்

United Nations Convention on the Rights of the Child (UNCRC), 1992
54 ஆக்கங்கள் மற்றும் வரலாற்றில் மிகவும் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தம் உட்பட சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச அறிக்கை.

INSPIRE: Seven strategies for Ending Violence Against Children, Geneva: World Health Organization (WHO); 2016
அரசு, அடிப்படை மட்ட மக்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை உட்பட சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதிலும் பதிலளிப்பதிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்கான சான்று அடிப்படையிலான வளங்கள்.

INSPIRE Handbook: action for implementing the seven strategies for ending violence against children, New York: UNICEF; 2018
கொள்கை வகுப்பாளர்கள், திட்டமிடுபவர்கள், பயிற்சியாளர்கள், நிதியளிப்பவர்கள் மற்றும் பரப்புரையாளர்கள் தங்கள் நாட்டில் அல்லது அமைப்பில் ஏழு INSPIRE மூலோபாயங்களை அமுல்படுத்த உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மூலோபாயச் சுருக்கம்

INSPIRE Indicator Guidance and Results Framework, New York: UNICEF; 2018
அரசாங்கங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், ஏழு INSPIRE மூலோபாயங்களில் காலப்போக்கிலான மாற்றங்களைக் கண்காணிக்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் முடிவுகள் கட்டமைப்பு மற்றும் குறிகாட்டிகளின் முக்கிய தொகுப்பு, அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான விரிவான வழிகாட்டுதல் ஆகியவை அடங்கும்.

Preventing and responding to violence against children: Theory of Change, New York: UNICEF; 2017
பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினருக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கும் அதற்குப் பதிலளிப்பதற்கும் UNICEF இன் பணிகளுக்கு வழிகாட்டும், மாற்றத்தின் ஓர் முக்கியமான, பல்துறைக் கோட்பாட்டை முன்வைக்கிறது.

Global Guidance on Addressing School-related Gender-based Violence, Paris and New York: UNESCO and UN Women; 2016
பாடசாலை தொடர்பான பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SRGBV) பற்றிய விரிவான, ஒரே இடத்திலான ஆதாரத்தை வழங்குகிறது.

# இறுதிக் குறிப்புகள்

[1] Hillis, S., Mercy, J., Amobi, A,, and Kress, H (2016) ) Global prevalence of past-year violence against children: a systematic review and minimum estimates. Pediatrics;137(3):e20154079.

[2] 18 வயதுக்குட்பட்ட எந்த ஒருவருக்கும் எதிரான வன்முறை.

[3] 3 பெண்பிள்ளைகள் மற்றும் சிறுவர்கள் ஆகிய இருவரும் சிறுவர் மற்றும் இளம் பருவ துஸ்பிரயோகத்தை அனுபவிக்க முடியும், குறிப்பாக பெண்கள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாகக் கூடிய அதே சமயம் சிறுவர்கள் கொலைக்கு ஆளாக மற்றும் குற்றவாளிகளாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். இளமைப் பருவம் (வயது 10-19) வன்முறை அபாயம் அதிகரிக்கும் காலகட்டமாகும், 15 முதல் 19 வயதுக்குட்பட்ட மூன்று இளம்பெண்களில் ஒருவர், நெருங்கிய உறவில் உள்ளவர்களின் உணர்ச்சி, உடலியல் அல்லது பாலியல் வன்முறையை அனுபவித்ததாக அறிக்கையிடுகிறார்கள், துணை-சஹாரா ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் 50% க்கும் அதிகமாக உள்ளனர். இளமைப் பருவம் என்பது பாலியல் வன்முறை குற்றங்கள் (சிறுவர்களால்) அடிக்கடி தொடங்கும் ஒரு காலமாகும், ஆனால் அது தடுப்புக்கான வாய்ப்பாகவும் இருக்கலாம். பார்க்கவும்:

Stoltenborgh, MA., van Ijzendoorn MH, Euser, E., Bakerman-Kranenburg,. MJ (2011) A global perspective on child sexual abuse: Meta-analysis of prevalence around the world. Child Maltreatment. 16:79–101; WHO (2015) Preventing Youth Violence: An Overview of the Evidence. Geneva: World Health Organization;

[4] Guedes, A. Bott, S., García-Moreno, C. and M. Colombini (2016) Bridging the gaps: a global review of intersections of violence against women and violence against children, Global Health Action, vol. 9, no. 10.

[5] Guedes, A. Bott, S., García-Moreno, C. and M. Colombini (2016) Ibid.

[6] Fulu E, McCook S, Falb K (2017) What Works Evidence Review: Intersections of violence against women and violence against children

[7] Kenny, L., Cislaghi, B. et al. (2019) Addressing Social Norms at the VAW/VAC Intersection Learning Group on Social Norms and Gender-related Harmful Practices Convened by the Gender, Violence and Health Centre (GVHC) of the London School of Hygiene & Tropical Medicine (LSHTM).

[8] UNICEF (2014) A Statistical Snapshot of Violence against Adolescent Girls. New York: United Nations Children's Fund

[9] Guedes, A. Bott, S., García-Moreno, C. and M. Colombini (2016) Ibid; Fulu E, McCook S, Falb K (2017) Ibid.

[10] Fulu E, McCook S, Falb K (2017) Ibid.

[11] Guedes, A. (2020) Personal communication - table shared for forthcoming paper

[12] Guedes, A. Bott, S., García-Moreno, C. and M. Colombini (2016) Ibid.

[13] Fulu E, McCook S, Falb K (2017) Ibid.

[14] Kerr Wilson A, Gibbs A, McAslan Fraser E, Ramsoomar L, Parke A, Khuwaja H and Jewkes R (2020) What Works to Prevent Violence against Women and Girls? A Rigorous Global Evidence Review of Interventions to Prevent Violence against Women and Girls, South Africa; What Works to Prevent VAWG

[15] DFID இன் VAWG நிரலைத் தடுக்க என்ன வேலை செய்கிறது என்பதன் சான்றின் அடிப்படையில், RESPECT கட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த வகைப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தயவு செய்து நேர்மறையான பெற்றோருக்குரிய நடவடிக்கைகளின் சான்றுகள் பற்றிய மேலதிக தகவலுக்கு Ker Wilson et al (2020) ஐப் பார்க்கவும்.

[16] WHO (2013) Preventing Violence: Evaluating Outcomes of Parenting Programmes. Geneva: World Health Organization.

[17] Prosman, GJ., Lo Fo Wong, SH., van der Wouden, JC., Lagro-Janssen, AL (2015) Effectiveness of home visiting in reducing partner violence for families experiencing abuse: a systematic review, Family Practice. 32(3):247-56.

[18] Anderson, K, & van Ee, E (2018) Mothers and Children Exposed to Intimate Partner Violence: A Review of Treatment Interventions, International journal of environmental research and public health, 15(9), 1955.

[19] Doyle, K., Levtov, RG., Barker, G., Bastian, GG., Bingenheimer, JB., Kazimbaya, S & Shattuck D (2018) Gender-transformative Bandebereho couples' intervention to promote male engagement in reproductive and maternal health and violence prevention in Rwanda: Findings from a randomized controlled trial. PloS One, 13(4), e0192756

[20] Mathews, C., Eggers, SM., Townsend, L., Aarø LE, de Vries, PJ., Mason-Jones, AJ & Wubs, A (2016) Effects of PREPARE, a multi-component, school-based HIV and intimate partner violence (IPV) prevention Programme on adolescent sexual risk behaviour and IPV: Cluster randomised controlled trial. AIDS and Behavior, 20(9), 1821-1840.

[21] Mathews et al., (2016) Ibid.

[22] McFarlane, J., Karmalian, R. et al (2017) Preventing Peer Violence Against Children: Methods and Baseline Data of a Cluster Randomized Controlled Trial in Pakistan, Global Health: Science and Practice, 5(1): 115-137.

[23] What Works (2018) Right to Play: Preventing violence among and against children in schools in Hyderabad, Pakistan. Evidence Brief

[24] Kerr Wilson, A et al (2020) Ibid.

[25] UNICEF (2020) What works to prevent online and offline child sexual abuse and exploitation. A review of national education policies in East Asia and the Pacific. Bangkok.

[26] Eckenrode J, Ganzel B, Henderson CR Jr et al. Preventing child abuse and neglect with a program of nurse home visitation: the limiting effects of domestic violence. JAMA 2000; 284: 1385–91, cited in Prosman, GJ., Lo Fo Wong, SH., van der Wouden, JC., Lagro-Janssen, AL (2015) Effectiveness of home visiting in reducing partner violence for families experiencing abuse: a systematic review, Family Practice. 32(3):247-56.

[27] Kyegombe, N., Abramsky, T., Devries, K., Michau, L., Nakuti, J., Starmann, E., Musuya, T., Heise, L. & Watts, C. (2015) What is the potential for interventions designed to prevent violence against women to reduce children's exposure to violence? Findings from the SASA! study, Kampala, Uganda. Child abuse & neglect, 50. pp. 128-140.

[28] Kerr Wilson et al (2020) Ibid.

[29] Doyle K et al (2018) Ibid.

[30] Kerr Wilson et al (2020) Ibid.

[31] Jewkes, R., Willan, S., Heise, L., Washington, L., Shai, N., Kerr-Wilson, A, Christofides, N. (2020) Effective design and implementation elements in interventions to prevent violence against women and girls. What Works To Prevent VAWG? Global Programme Synthesis Product Series. South African Medical Research Council, Pretoria; Kerr Wilson et al (2020) Ibid.

[32] Prevention Collaborative (2019) Evidence Review: Parenting and caregiver support programmes to prevent and respond to violence in the home.

[33] Kerr Wilson et al (2020) Ibid.

[34] WHO (2009) Violence Prevention: The Evidence. Promoting gender equality to prevent violence against women. Geneva: WHO

[35] Siu GE, Wight D, Seeley J et al. (2017) Men's Involvement in a Parenting Programme to Reduce Child Maltreatment and Gender-Based Violence: Formative Evaluation in Uganda. Eur J Dev Res 29, 1017–1037.

[36] Kerr Wilson et al (2020) Ibid.

[37] Ligiero D, Hart C, Fulu E, Thomas A, & Radford L. (2019) What Works to Prevent Sexual Violence against Children: Evidence Review. Together for Girls. togetherforgirls.org/svsolutions

[38] Casillas KL, Fauchier A, Derkash BT, & Garrido EF (2016) Implementation of evidence-based home visiting programs aimed at reducing child maltreatment: A meta-analytic review. Child Abuse & Neglect, 53, 64-80

[39] Prevention Collaborative (2019) Ibid.

[40] Prosman et al. (2015) Ibid.

[41] Kerr Wilson et al (2020) Ibid.

[42] Ligiero et al (2019) Ibid.

[43] What Works (2018) Ibid.

[44] Wathen CN and HL MacMillan (2013) Children's exposure to intimate partner violence: impacts and interventions. Paediatric Child Health 18(8):419-422.

[45] Kerr Wilson et al (2020) Ibid.

[46] Kerr Wilson et al (2020) Ibid.

[47] WHO (2016) INSPIRE Framework: Seven strategies for ending violence against children. Geneva: World Health Organisation.

[48] Peterman, A., Neijhoft, A., Cook, S., & Palermo, T. M. (2017). Understanding the linkages between social safety nets and childhood violence: A review of the evidence from low- and middle-income countries. Health Policy and Planning, 32(7), 1049-1071;

[49] Rosenberg, M., Pettifor, A., Thirumurthy, H., Halpern, C. T., & Handa, S. (2014) The impact of a national poverty reduction program on the characteristics of sex partners among Kenyan adolescents. AIDS and Behavior, 18(2), 311-316; Buller, A. M., Peterman, A., Ranganathan, M., Bleile, A., Hidrobo, M., & Heise, L. (2018) A mixed-method review of cash transfers and intimate partner violence in lowand middle-income countries. UNICEF Office of Research Innocenti Working Paper.

[50] WHO (2016) INSPIRE: Seven Strategies for Ending Violence against Children, Geneva: World Health Organisation; Cancian M, Yang M, Slack KS. (2013) The effect of additional child support income on the risk of child maltreatment. Social Service Review.87(3): 417–37; Huston AC, Miller C, Richburg-Hayes L, Duncan GJ, Eldred CA, Weisner TS et al. (2003) New hope for families and children: five year results of a program to reduce poverty and reform welfare. New York: Manpower Demonstration Research Corporation. 117; Ozer EJ, Fernald LCH, Manley JG, Gertler PJ. (2009) Effects of a conditional cash transfer program on children's behavior problems. Pediatrics. 123:e630–7

[51] Ligiero D, Hart C, Fulu E, Thomas A, & Radford L. (2019) Ibid.

[52] What Works (2018) Ibid.

[53] Fulu et al (2017) Ibid.

[54] https://www.who.int/violence_injury_prevention/violence/child/PLH_Infants/en/

[55] WHO (2016) Ibid.

**© UN Women 2020**

இந்த ஆவணம் ஐ.நா. பெண்கள் அமைப்பால் உத்தரவளிக்கப்பட்டதுடன் **Social Development Direct** இனால் உருவாக்கப்பட்டதுமான **RESPECT** கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் ஒரு பகுதியாகும், அதை இங்கே காணலாம்.

**Suggested citation:** UN Women and Social Development Direct (2020) Preventing Violence Against Children and Adolescents, RESPECT: Preventing Violence against Women Strategy Summary.

# RESPECT WOMEN

## மூலோபாயச் சுருக்கம்

### உருமாற்றப்பட்ட மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள்

(Transformed attitudes, beliefs and norms)

UN WOMEN

World Health Organization

# வரைவிலக்கணங்கள்

**நம்பிக்கை** = உலகத்தைப் பற்றிய ஒரு நபரின் அனுமானம்
(உதா. பெண்கள் இயல்பாகவே ஆண்களால் வழிநடத்தப்பட வேண்டும்)

**பண்பு** = ஒரு நபர் முக்கியமானதாக உணரும், பெரும்பாலும் காலமற்ற மற்றும் உலகளாவிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குணங்கள்
(உதா. சமத்துவம், நேர்மை, விசுவாசம்)

**மனப்பாங்கு** = ஒரு நபர் தனது நம்பிக்கைகள் மற்றும் பண்புகளை வார்த்தைகளில் தொடர்பாடல் செய்யும் அல்லது வெளிப்படுத்தும் விதமாகும்
(உதா. என் மனைவிக்காக தீர்மானமெடுப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்)

**ஒரே மாதிரியான உள எண்ணங்கள்** = ஒரு குழுவின் பண்புகள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தை தொடர்பான பரவலாக உள்ள எதிர்பார்ப்புக்கள்
(உதா. பெண்கள் ஆண்களை விட குறைவான திறன் கொண்டவர்கள்)

**நடத்தை** = ஒரு நபர் உண்மையில் என்ன செய்கிறார் என்பதாகும், இது பெரும்பாலும் அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் பண்புகளுடன் ஒத்துப்போகின்றது, ஆனால் எப்போதும் இல்லை
(உதா. ஒரு ஆண் தனது மனைவி தன்னிடம் திருப்பிப் பேசுவதால் அவரை அடிப்பது)

**விழுமியம்** = ஒரு கலாச்சார அல்லது சமூகக் குழுவிற்குள் பொதுவானது மற்றும் பொருத்தமானது என்பது பற்றிய பகிரப்பட்ட நம்பிக்கை
(உதா. ஒரு ஆண் தனது மனைவியை ஒழுக்கப்படுத்தலாம்)

# உருமாற்றப்பட்ட மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள்

மூலோபாயத்தின் குறிக்கோள்: பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தும் நேர்மறையான மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களை மேம்படுத்தல், ஆண்களின் அதிகாரம் மற்றும் சிறப்புரிமை, பாகுபாடு மற்றும் பெண்கள் கீழ்ப்படிதல் ஆகியவற்றை சவாலுக்கு உட்படுத்தல், மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை (VAW) கண்டித்தல்.

## விளக்கம்

பால்நிலை சமத்துவமற்ற மனப்பாங்குகள், மதிப்புகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள் ஆகியன பெண்களுக்கு எதிரான வன்முறைக்கான (VAW) சக்திவாய்ந்த காரணிகளாகும். ஆண் அல்லது பெண்ணாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதைச் சுற்றியுள்ள தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள், வீடு, சமூகம் மற்றும் பரந்த பொது வாழ்வில் உள்ள சமமற்ற பால்நிலை வகிபாகங்கள், வன்முறையை மன்னித்து அது குடும்ப விடயம் என்று குறிப்பிடும் மனப்பான்மை ஆகியவை இதில் உள்ளடங்கும் (படம் 1 ஐப் பார்க்கவும்). இனவெறி, ஓரினச்சேர்க்கையாளரின் பாகுபாடு மற்றும் வகுப்புவாதம் உள்ளிட்ட பாகுபாட்டின் பிற வடிவங்களுடன் தொடர்புடைய மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களையும் இது உள்ளடக்கியிருக்கலாம். பால்நிலை தொடர்பான நேர்மறையான அணுகுமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் VAW இல் நீண்டகால மற்றும் நீடித்த குறைப்புகளை அடைவதற்கும், பால்நிலை சமத்துவத்தை அடைவதற்கும், மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, பாதுகாப்பான சமூகங்களை உருவாக்குவதற்கும் இன்றியமையாத பகுதியாகும்.

**படம் 1: VAWஇனை நியாயப்படுத்தும், நிலைநிறுத்தும் தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் சமூக விழுமியங்கள்**

| நம்பிக்கை / விழுமிய வகை | விசேட நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களின் உதாரணங்கள் |
|---|---|
| ஆண்மை மற்றும் பெண்மைக்கான உதாரணங்கள் | மேலோங்கிய ஆண்மை மற்றும் படிந்து போகும் பெண்மை<br>ஆண்களுக்கு பாலுறவுக்கான உரிமை (திருமணத்திற்கு உள்ளே/வெளியே)<br>பெண்கள் திருமணம் வரை கன்னித்தன்மையுடன் இருக்க வேண்டியதுடன் திருமணத்திற்கு புறம்பாக பாலியல் உறவில் ஈடுபட முடியாது<br>ஆண்கள் கண்டிப்பாகவும் பெண்களின் நடத்தையை கட்டுப்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும்<br>பெண்களின் மதிப்பு திருமணத்துடனும் குழந்தை பிறப்புடனும் இணைக்கப்பட்டிருக்கும்<br>விவாகரத்தான, விதவையான, தனியான மற்றும் குழந்தையற்ற பெண்கள் களங்கப்படுத்தப்படுவர் |
| கடுமையான பால்நிலை வகிபாகங்கள் | ஆண்கள் குடும்பத் தலைவர்கள் மற்றும் பிரதானமான தீர்மானம் மேற்கொள்பவர்கள்<br>வலுவான பால்நிலை அடிப்படையிலான தொழிற்பிரிப்பு-ஆண்கள் வழங்குனராகவும் பெண்கள் பராமரிப்பாளர்களாகவும்<br>ஆண்களுக்கு வீட்டு வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது அதிகாரம் உண்டு<br>மனைவிகள் தங்களின் கணவருக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் |
| VAW இனை ஏற்றுக்கொள்ளல் | ஆண்களின் வகிபாகங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களை ஒழுக்கமாக்குதல் உள்ளடங்கும்<br>வன்முறை முரண்பாடுகளை தீர்ப்பதற்கான சட்டமுறையான வழியாகும்<br>வன்முறை ஒழுக்கப்படுத்துவதற்கான சட்டமுறையான வழியாகும்<br>வன்முறை தனிநபரின் மற்றும்/அல்லது குடும்பத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்கான சட்டமுறையான வழியாகும் |
| குடும்ப தனியுரிமை | வன்முறையை வெளிப்படுத்துவது குடும்ப பெயரை பாதிக்கும்<br>குடும்ப விடயங்களில் பிறநபர்கள் தலையிடக்கூடாது<br>வன்முறையை வெளிப்படுத்தும் பெண்கள் குடும்பத்திற்கு அவமானத்தை ஏற்படுத்துகின்றனர் |

## இந்த மூலோபாயம் எந்த ஆபத்து மற்றும் பாதுகாப்பு காரணிகளை நிவர்த்தி செய்கின்றது

இந்த மூலோபாயம் VAW க்கான பின்வரும் ஆபத்து காரணிகளை நிவர்த்தி செய்வதையும் பின்வரும் பாதுகாப்பு காரணிகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது:

| நிலை | ஆபத்துக் காரணிகள் | பாதுகாப்புக் காரணிகள் |
|---|---|---|
| **தனிநபர் நிலை** | வன்முறையை சாதாரணமாக அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மன்னிக்கும் அல்லது நியாயப்படுத்தும் நடைமுறைகள் மற்றும் மனப்பாங்குகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br>VAW தொடர்பான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் முறைப்பாட்டு நடைமுறைகள் உள்ளிட்ட விழிப்புணர்வின் பற்றாக்குறை (ஆண்கள் மற்றும் பெண்கள்) | பால்நிலை சமத்துவ மனப்பாங்குகள் மற்றும் நடைமுறைகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்)<br>செயற்படுவதற்கான விழிப்புணர்வு மற்றும் திறன் VAW இனை தடுத்தல் (ஆண்கள் மற்றும் பெண்கள்) |
| **நபர்களுக்கிடையிலான நிலை** | மோசமான தொடர்பாடல், வினைத்திறனற்ற மோதல் தீர்வு மற்றும் பிரச்சினையை தீர்க்கும் திறன்<br>நெருங்கிய துணை அல்லது திருமண உறவுகளில் அதிகளவான சமத்துவமின்மைகள் | வன்முறையின் தூண்டுதல்களைத் தணிக்க உறவுமுறைத் திறன்கள் (உதா. மோதல் தீர்வு, தொடர்பாடல்)<br>நெருங்கிய துணை மற்றும் குடும்ப உறவுகளுடனான பகிரப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் வீட்டுப் பொறுப்புகள் உள்ளிட்ட பால்நிலை சமத்துவத்தால் வகைப்படுத்தப்படல். |
| **சமுதாய நிலை** | ஆண்களுக்கான சலுகைகளை முன்னிறுத்தும் மற்றும் பெண்களின் சுயாட்சியை மட்டுப்படுத்தும் தீங்கு விளைவிக்கும் பால்நிலை விழுமியங்கள் | வன்முறையற்ற, பல்வகைமை மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு மரியாதையளிக்கும் மற்றும் பெண்களின் வலுவூட்டலை ஊக்குவிக்கும் விழுமியங்கள் |

### பெட்டி 1: சமூக விழுமியங்கள் என்றால் என்ன மற்றும் அவை VAWஇனை எவ்வாறு இயக்குகின்றன?

**சமூக விழுமியங்கள் என்பது** கொடுக்கப்பட்ட "கட்டுப்பாட்டுக் குழுவிற்குள்" (முறைசாரா அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட சமூக மற்றும் கலாச்சார குழுக்கள் அல்லது ஒரு தனிநபரின் எதிர்பார்ப்புகளுக்கு முக்கியமான வலையமைப்புகள்) உள்ள **வழக்கமான மற்றும் பொருத்தமான நடத்தை தொடர்பான பகிரப்பட்ட நம்பிக்கைகள் ஆகும்.**

**சமூக விழுமியங்கள் தனிப்பட்ட மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமில்லை** என்பதுடன், அவை உருவாக்கும் சமூக எதிர்பார்ப்புகள் தனிப்பட்ட நடத்தையின் சக்திவாய்ந்த காரணியாக இருக்கலாம். VAW மீதான தனிப்பட்ட அறிவு மற்றும் மனப்பாங்குகளில் ஏற்படும் மேம்பாடுகள், ஆகியன நடத்தையில் மாற்றம் மற்றும் வன்முறைச் செயல்களைக் குறைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இது விளக்குகிறது. தனிநபரின் நடத்தைகள் கூட அவர்களின் மனப்பாங்குகள் மாறுவதற்கு முன்பு மாறலாம். மனப்பான்மை மற்றும் நடத்தை இரண்டும் நன்மைக்காக மாற வேண்டும் என்றாலும், மாற்றத்திற்கான செயன்முறை நேரியதல்ல.

**சமூக விழுமியங்கள் நிலையற்றவை மற்றும் மாற்றமடையக்கூடியவை,** போதியளவான நபர்கள் வித்தியாசமாக நடந்து கொள்ளத் தூண்டப்பட்டால், ஒரு "திருப்ப புள்ளியில்" அது சாதாரண மற்றும் வழக்கமான நடத்தையாக பார்க்கப்படுவதாக மாற்றுகிறது. கட்டுக்கதைகளை உடைத்து, ஒருவரின் எண்ணம் யதார்த்தம் அல்ல என்பதை காட்டுவதற்கும் கூட உதவுகிறது.


மூலோபாயச் சுருக்கம்

## மாற்றத்தின் கோட்பாடு

பின்வரும் வரைபடம், பால்நிலை சமத்துவம் மற்றும் VAW இனை சுற்றியுள்ள மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களை உருமாற்ற எதிர்பார்க்கும் சான்று அடிப்படையிலான நடவடிக்கைகளை விளக்குகின்ற எளிமையான மாற்றத்திற்கான கோட்பாட்டை வழங்குகின்றது.

இது குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மேலதிக விருத்தியையும் இசைவாக்கத்தையும் தேவைப்படுத்துகின்றது.

## T: உருமாற்றப்பட்ட மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள்



## நடவடிக்கைகளின் வகைகள்

VAW ஐச் சுற்றியுள்ள மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களை மாற்றுவதற்கு பல்வேறு நாட்டுச் சூழல்களில் பல்வேறு நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றிற்கு பால்நிலை, அதிகாரம் மற்றும் VAW ஆகியவற்றில் உள்ள மேலாதிக்க சமூக விழுமியங்களைப் பொறுத்து தனிப்பட்ட நம்பிக்கைகள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளை மாற்றுவதற்கு பெண்கள் மற்றும் ஆண்களுடன் செறிவான பணியாற்றுகை தேவைப்படுகிறது. இந்த அட்டவணை RESPECT கட்டமைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரதான நடவடிக்கை வகைகள், மற்றும் தற்போதைய சான்று அடிப்படையிலான[1] உதாரண நிகழ்ச்சித் திட்டங்களின் சுருக்கமான கண்ணோட்டங்களை வழங்குகிறது. கிடைக்கின்ற போது குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் (LMICs) நிகழ்ச்சித் திட்ட உதாரணங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.

LEGEND

- ● **தெளிவானது,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க குறைவினை காட்டுகின்றது
- ■ **அதிக சான்றுகள் தேவை,** >1 மதிப்பீடு வன்முறை தொடர்பான நடவடிக்கைகளில் நடுத்தரமான முன்னேற்றத்தை காட்டுகின்றது
- ◆ **முரண்பாடான நிலை,** மதிப்பீடுகள் வன்முறை குறைவடைதல் தொடர்பான முடிவுகளில் முரண்பாடான முடிவுகளை காட்டுகின்றது
- □ **சான்றுகள் இல்லை,** நடவடிக்கைகள் இன்னமும் வலுவாக மதிப்பிடப்படவில்லை
- ▼ **செயற்திறனற்ற நிலை,** >1 மதிப்பீடுகள் வன்முறை நடவடிக்கைகளில் எவ்விதமான குறைவையும் காட்டவில்லை
- H உலக வங்கி உயர் வருமானமுள்ள நாடுகள் (HIC)
- L உலக வங்கி நடுத்தர மற்றும் குறைந்த வருமானமுள்ள நாடுகள் (LMIC)

| நடவடிக்கையின் வகை | விபரம் | | விளைதிறனுக்கான சான்றுகளின் சுருக்கம் | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **சமுதாய செயற்பாடு/ அணிதிரட்டல் அணுகுமுறைகள்** | இந்த மூலோபாயத்தின் கீழுள்ள மிகவும் வினைத்திறனான அணுகுமுறைகளில் சமூக செயற்பாடு/அணிதிரட்டல் அணுகுமுறைகள் உள்ளடங்கும். இந்த அணுகுமுறையானது, இந்த சமூகங்களில் வாழும் மற்றும்/அல்லது பணிபுரியும் சமூகத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுடன் ஈடுபடுவதற்கு பயிற்சி மற்றும் ஆதரவு பெற்ற தன்னார்வமான "சமுதாய ஆர்வலர்களை" VAW மீதான தீங்கான விதிமுறைகள் மற்றும் அணுகுமுறைகளை முறைசாரா செயற்பாடுகள் மூலம் சவால் செய்வதற்கு ஈடுபடுத்துகின்றது. இந்த அணுகுமுறைகள் விழுமியங்களில் செல்வாக்கு செலுத்துவதற்காகவும், தப்பிப் பிழைத்தவர்களுக்கான உள்ளூர் அளவிலான பதிலளிப்பு சேவைகளை வலுப்படுத்துவதற்காகவும் மத மற்றும் பாரம்பரியத் தலைவர்கள், பொலிஸ், சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் போன்ற பிரதான தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றன. | L ● | நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் அமுலாக்கப்பட்ட பல ஆண்டு நடவடிக்கைகள், நிகழ்ச்சித் திட்ட கால எல்லைக்குள் நெருங்கிய பங்காளரின் உடலியல் மற்றும் பாலியல் வன்முறையில் சமுதாய அளவிலான குறைப்புகளுக்கு வழிவகுக்கும் என்பதற்கு LMICக்களில் இருந்து **தெளிவான** சான்றுகள் உள்ளன.[2] | SASA! (25+ நாடுகள்)<br>SHARE (உகாண்டா)<br>COMBAT (கானா) |
| | | H □ | சமூகச் செயல்பாடு/அணிதிரட்டல் அணுகுமுறைகள் உயர்வான-செறிவுடன் வழங்கப்படும் போது, சமூகத்தின் பிரதிநிதித்துவ மாதிரியுடன் ஈடுபடுகையில் மற்றும் தர்க்கரீதியான பிரதிபலிப்பு மற்றும் கலந்துரையாடலைத் தூண்டும் முறைசாரா செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவை சிறப்பாகச் செயற்படும் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன.[3]<br>இந்த நடவடிக்கைகள் இன்னும் வலுவாக மதிப்பீடு செய்யப்படாததால் HIC களில் இருந்து **எந்தவிதமான சான்றுகளும் இல்லை.** | |

| நடவடிக்கையின் வகை | விபரம் | விளைதிறனுக்கான சான்றுகளின் சுருக்கம் | | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களில் மாற்றங்களை ஊக்குவிப்பதற்காக ஆண்கள் மற்றும் பெண்களுடன் குழு அடிப்படையிலான பயிலரங்குகள்** | இந்த அணுகுமுறைகள் நம்பிக்கைகள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளை மேம்படுத்துவதற்காக ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் பெண்பிள்ளைகளுடன் சிறிய சகா-குழு பயிலரங்குகளை உள்ளடக்கும். அவை பொதுவாக பால்நிலை, அதிகாரம் மற்றும் VAW பற்றிய கலந்துரையாடல்களில் பங்கேற்பாளர்களை தர்க்கரீதியாக ஈடுபடுத்தும் பங்கேற்பு குழுக் கல்வி அணுகுமுறைகளை உள்ளடக்குகின்றன. இந்த அணுகுமுறைகள் பரந்த சமூக மாற்றத்தில் செல்வாக்கு செலுத்தும் திறன் மற்றும் தன்னம்பிக்கை கொண்ட ஒரு சிறிய குழுவினரை கொண்டிருக்க முடியும்.[4] | L<br><br>H | ஆண்கள் மற்றும் பெண்களுடன் செறிவான குழு அடிப்படையிலான பயிலரங்குகள் VAW பரவலைக் குறைப்பது உட்பட இலக்கு வைக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட மனப்பாங்கு மற்றும் நடத்தைகளை மேம்படுத்தும் என்பதற்கு LMIC களிலிருந்து **தெளிவான** சான்றுகள் உள்ளன. HIC களில் இருந்து **இன்னமும் அதிகமான சான்றுகள் தேவைப்படுகின்றன.**<br><br>இந்த அணுகுமுறைகள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் பெண்பிள்ளைகளுடன் இணைந்து பணியாற்றுவதை தம்பதிகளாகவோ அல்லது பொதுவாக தனித்தனியாகச் செயற்பட்டு பின்னர் ஒன்று சேர்க்கப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட சகா-குழு கல்வி நடவடிக்கைகளிலோ ஒன்றிணைக்கும் போது சிறப்பாகச் செயற்படும் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன (**உறவுகளைப் பேணும் திறன்கள் வலுவூட்டப்பட்டன RESPECT மூலோபாய சுருக்கத்தை** மேலும் பார்க்கவும்). | Stepping Stones<br><br>The Indashyikirwa programme (தம்பதிகளுக்கான கூறு) (ருவாண்டா)<br><br>Transforming Masculinities (DRC) |
| **மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களை மாற்றுவதற்காக ஆண்கள் மற்றும் சிறுவர்களுடன் குழுக்கல்வி** | இந்த அணுகுமுறையானது VAW இன் ஆண்களின் குற்றச்செயல்களைக் குறைப்பதற்காக ஆண்கள் மற்றும் சிறுவர்களுடன் மட்டும் பால்நிலை சமத்துவமான மனப்பாங்குகள், விழுமியங்கள் மற்றும் நடத்தைகளை மேம்படுத்துவதற்காக முனைப்பாக செயற்படுகிறது (அதாவது பெண்களையோ அல்லது பெண்பிள்ளைகளையோ ஈடுபடுத்தாது). பொதுவாக ஆண்மை மற்றும் சமத்துவமற்ற பால்நிலை மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகள் பற்றிய எண்ணக்கருக்கள், அத்துடன் வன்முறையின் பயன்பாடு பற்றிய கலந்துரையாடல்களை வெளிப்படுத்தும் பங்கேற்பு குழுக் கல்வி அணுகுமுறைகளால் நடாத்தப்படுகிறது. | L<br><br>H | LMIC களின் சான்றுகள் ஆண்கள் மற்றும் சிறுவர்களுடன் மட்டும் வேலை செய்வது வன்முறை விளைவுகளைக் குறைப்பதில் **வினைத்திறனற்றது** என்பதைக் குறிக்கிறது. HIC களில் இருந்து **இன்னமும் மேலதிகமான சான்றுகள் தேவையாகும்.**<br><br>வன்முறையைக் குறைப்பதில் ஆண்கள் மற்றும் பெண்களுடன் (மற்றும் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள்) பணியாற்றும் நடவடிக்கைகள் ஒற்றை பாலின நடவடிக்கைகளிலும் பார்க்க மிகவும் வினைத்திறனானதாக இருக்கும் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன.[5] | Yaari Dosti (இந்தியா)<br><br>Ethiopian male norms initiative (எதியோப்பியா) |

| நடவடிக்கையின் வகை | விபரம் | | விளைதிறனுக்கான சான்றுகளின் சுருக்கம் | உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| **சமூக சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் அல்லது "கல்வியுடனான பொழுதுபோக்கு" அணுகுமுறைகள் மற்றும் குழு கல்வி** | இந்த அணுகுமுறை பிரபலமான பொழுதுபோக்கு ஊடகங்களில் (தொலைக்காட்சி அல்லது வானொலி போன்றவை) ஒருங்கிணைக்கப்பட்ட செய்திகளையும், VAW ஐக் குறைப்பதற்காக நேருக்கு நேரான குழு அடிப்படையிலான கல்வியையும் ஒருங்கிணைக்கிறது. | H<br>L | VAW இன் அளவைக் குறைப்பதற்கு மட்டும் சமூக சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் அல்லது கல்வியுடனான பொழுதுபோக்குடன் குழுக் கல்வியின் வினைத்திறனுக்கு LMICகள் மற்றும் HICக்களிடமிருந்து **மேலதிகமான சான்றுகள் தேவையாகும்.**[6]<br>எவ்வாறாயினும், நீண்ட காலத்திற்கு (2+ ஆண்டுகள்) சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பிரச்சாரங்கள் மற்றும் அணுகுமுறைகள் சமூக செயற்பாடு/அணிதிரட்டுதல் அல்லது குழு அடிப்படையிலான பயிலரங்குகள் ஆகியவற்றுடன் குறிப்பாக சமூக மட்டத்தில் வேலையுடன் இணைந்து அறிவை மேம்படுத்துவதில், VAW இன் ஏற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் தனிப்பட்ட அணுகுமுறைகளை மாற்றுவது பற்றிய கலந்துரையாடலைத் தூண்டுவதில் முக்கிய பங்கு வகிக்கலாம்[7] | Bell Bajao (இந்தியா)<br>Soul City (தென்ஆபிரிக்கா)<br>Sexto Sentido (Nicaragua) |
| **தனியான விழிப்புணர்வூட்டும் பிரச்சாரங்கள்** | இந்த அணுகுமுறை வெகுசன தகவல்தொடர்பாடல்கள் (தொலைக்காட்சி, வானொலி, விளம்பர பலகைகள், இணையம் போன்றவை) மூலம் VAW பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இருப்பினும், மேலே உள்ள அணுகுமுறைகளைப் போலல்லாமல், தனிநபர்கள் அல்லது சமூகங்களுடனான எந்தவொரு செறிவான பணியையும் அவை உள்ளடக்கவில்லை. | L<br>H | LMICகள் மற்றும் HIC களின் சான்றுகள், VAW பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க வெகுசனத் தகவல்தொடர்பாடல்களைப் பயன்படுத்தும் முழுமையான விழிப்புணர்வு பிரச்சாரங்கள், சாத்தியமான அணுகல் மற்றும் தாக்கத்தை அதிகரிப்பதன் அடிப்படையில் ஈர்க்கும் அதே வேளையில், VAW ஐக் குறைப்பதில் வினைத்திறனற்றவையாகும்.[8] | வருடாந்த GBV இற்கு எதிரான ஒருமுறைமட்டும் நடைபெறும் 16 நாட்கள் செயற்பாட்டின் பிரச்சாரங்கள் (இவை விழிப்புணர்வை அதிகரிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துபவை) |

## உதாரண நிகழ்ச்சித் திட்டங்கள்

பின்வரும் அட்டவணை நிகழ்ச்சித் திட்ட காலஎல்லைக்குள் மனப்பாங்குகள், நம்பிக்கைகள், விழுமியங்களை உருமாற்றுவதிலும் VAW பரவலைக் குறைப்பிலும் வினைத்திறனை வெளிக்காட்டிய மூன்று வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை சுருக்கமாகக் கூறுகிறது. இந்த செயன்முறைகள் எவற்றையேனும் பின்பற்றும் போது பக்கம் 11 இல் வழங்கப்பட்டுள்ள **வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்புப் பட்டியல்** மற்றும் RESPECT கட்டமைப்பில் வழங்கப்பட்டுள்ள **வினைத்திறனான நிகழ்ச்சித் திட்டத்தின் வழிகாட்டுதல் கொள்கைகளுடன்** அட்டவணை மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் பற்றிய மேலதிக விரிவான தகவல்கள் **நிகழ்ச்சித் திட்ட சுருக்கங்களில்** வழங்கப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இடம் | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| SASA! | சமுதாய தலைமையிலான பால்நிலை சமத்துவமின்மை, VAW மற்றும் பெண்கள் HIV இற்கு பாதிக்கப்படும் அதிகரித்த தன்மையை நிலைநிறுத்தும் சமூக விழுமியங்கள் மற்றும் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு சமுதாய அணிதிரட்டல் அணுகுமுறை. | ஒவ்வொரு பிராந்தியத்திலும் 25 இற்கு அதிகமான நாடுகள் | வன்முறை, அதிகாரம் மற்றும் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளில் ஆர்வமாக உள்ள பெண்கள் மற்றும் ஆண்களை கொண்ட சமூக ஆர்வலர்கள்.<br>உள்ளூராட்சி மற்றும் கலாச்சாரத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பிற சமூக உறுப்பினர்கள் உள்ளிட்ட சமுதாயத் தலைவர்கள். | பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அணுகுமுறையை உள்வாங்கி பின்பற்றுவதற்கு நேரம் வழங்கப்படுகிறது. உள்ளூர் ஆர்வலர்கள் சமூக மட்டத்தில் முறைசாரா நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக செறிவான பயிற்சி மற்றும் தொடர்ச்சியான வழிகாட்டுதலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.<br>சமுதாயத்தில் உள்ள பலதரப்பட்ட மக்களை சென்றடைவதற்காக உள்ளூர் செயற்பாடு, ஊடகம் மற்றும் பரப்புரை மற்றும் தகவல் தொடர்பாடல் பொருட்கள் உட்பட பல மூலோபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன.<br>SASA! Activist Kit[9] சமுதாய மட்டத்தில் மாற்றத்திற்கான செயன்முறையை உள்ளூர் நிறுவனங்கள் வினைத்திறனாக மற்றும் முறையாக வசதிப்படுத்தும் வகையில் நான்கு கட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது. | 3 வருடங்கள் | **மதிப்பீட்டு வகை:** எழுந்தமானமான கட்டுப்பாட்டு பரிசோதனை (RCT)[10]<br>**தாக்கம்:** இந்த நடவடிக்கை நெருங்கிய பங்காளர் வன்முறையை (IPV) ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கில் குறிப்பிடத்தக்க குறைவுகளுக்கு வழிவகுத்ததுடன் பெண்களின் IPV அனுபவங்களில் குறிப்பிடத்தக்க குறைவுகளை ஏற்படுத்தியது. |

| நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இடம் | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| **சமுதாய அடிப்படையிலான செயல் குழுக்கள் ஊடான சமுதாய அடிப்படையிலான கிராமிய பதிலளிப்பு மூலோபாயம் (RRS) (COMBAT)** | கானாவில் VAWG இன் நிகழ்வைக் குறைப்பதற்கும், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான அரச மற்றும் சமுதாய அடிப்படையிலான கட்டமைப்புகள் மூலமான ஒரு சமுதாய அணிதிரட்டல் அணுகுமுறை | கானா | உள்ளூர் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரையும் உள்ளடக்கிய சமுதாயம் சார்ந்த செயற்பாட்டு குழுக்கள் (COMBATs),<br>VAW பதிலளிப்பில் ஈடுபட்டுள்ள பாரம்பரிய மற்றும் மதத் தலைவர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் பிற சமுதாய உறுப்பினர்கள் உட்பட சமுதாயப் பங்குதாரர்கள். | COMBATகள் அவதானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரந்த சமுதாயத்தை உணர்வூட்டுவதற்கும், தப்பிப் பிழைப்பவர்களுக்கு மிகவும் தேவையான ஆலோசனைகள், ஆதரவு மற்றும் ஆற்றுப்படுத்தல்களை வழங்குவதற்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன.<br>COMBAT கள் சமூகக் கூட்டங்கள், பிற சமூகக் குழுக்கள் மூலம் சமூக உறுப்பினர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பாத்திரமேற்புகள், நாடகம் மற்றும் உரையாடல் உள்ளிட்ட பங்கேற்பு முறைகளை பயன்படுத்துகின்றன. | 2+ வருடங்கள் | **மதிப்பீட்டு வகை:** பகுதியளவிலான கட்டுப்பாட்டுப் பரிசோதனை<br>**தாக்கம்:** பாலியல் மற்றும் உடல் ரீதியான IPV தொடர்பான பெண்களின் அனுபவத்தில் குறைவு. பெண்களிடையே ஆண் பங்காளரின் நடத்தையை கட்டுப்படுத்தும் மற்றும் உளஅழுத்தம் தொடர்பாக புள்ளிவிவர ரீதியாக குறிப்பிடத்தக்க குறைவு, ஆண்கள் மற்றும் பெண்களிடையே மேம்பட்ட பால்நிலை மனப்பாங்குகள்.[11] |

| நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இடம் | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| **அனைவருக்கும் பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் மரியாதையளிப்பு (SHARE) நடவடிக்கை** | சமுதாய அடிப்படையிலான அணிதிரட்டல் வழக்கமான எச்.ஐ.வி தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளில் ஒருங்கிணைக்கப்பட்டது | உகாண்டா | 40 சமுதாய தன்னார்வலர்கள் - உள்ளூர் ஆண்கள் மற்றும் பெண்கள்.<br>12 தன்னார்வ சமூக ஆலோசனை உதவியாளர்கள் (CCAs) | மதிப்பீடு மற்றும் HIV இற்கான வெளிப்பாட்டுடன் தொடர்பான வன்முறை மற்றும் HIV தொடர்பான ஆலோசனை மற்றும் பரிசோதனையை நாடும் பெண்களுக்கு ஏற்படும் அபாயங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கையுடன் IPV மற்றும் HIV ஆபத்துக்கு பங்களிக்கும் மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களை மாற்றுவதற்கு ஒருங்கிணைந்த சமுதாயம் சார்ந்த அணிதிரட்டல்.<br>SHARE ஆனது SASA வின் மீது கட்டமைக்கப்பட்டது மற்றும் Stepping Stones அணுகுமுறை உயர்தர, கலாச்சார ரீதியாக பொருத்தமான வன்முறை தடுப்பு நடவடிக்கைகளை முன்னரே இருக்கும் சுகாதார மற்றும் சமூக ஆதரவு கட்டமைப்பில் ஒருங்கிணைக்கிறது. | 5 வருடங்கள் | **மதிப்பீட்டு வகை:** தொகுதியுடனான RCT<br>**தாக்கம்:** கடந்த ஆண்டு உடலியல் மற்றும் பாலியல் ரீதியாக IPV இனை முறைப்பாடளிக்கும் பெண்களின் பாதிப்பு குறைக்கப்பட்டது. பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் HIV பரவல் மற்றும் HIV வெளிப்படுத்தல் விகிதங்களில் குறைவு.[12] |

| நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இடம் | விபரம் | இடம் | இலக்குக் குழு | பிரதான செயற்பாடுகள் | காலப்பகுதி | மதிப்பீடு மற்றும் தாக்கம் |
|---|---|---|---|---|---|---|
| **பால்நிலை வகிபாகங்கள், சமத்துவம் மற்றும் உருமாற்ற நிகழ்ச்சித் திட்டம் (GREAT)** | இளம் பருவத்தை நோக்காக கொண்ட விழுமியங்களை மாற்றும் நிகழ்ச்சித் திட்டம் | உகாண்டா | **மிக இளைய பருவத்தினர்:** 10-14 வயதுடைய பாடசாலைக்கு செல்லும் ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும்<br>**வயது கூடிய இளம் பருவத்தினர்:** 15-19 வயதுடைய திருமணமாகாத மற்றும் குழந்தை இல்லாத ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும்<br>**புதிதாக திருமணமானவர் அல்லது பெற்றோராகவுள்ள இளம் பருவத்தினர்:** 15-19 வயதான, திருமணமான/ இணைந்து வாழும், குழந்தைகளுடன் அல்லது குழந்தைகள் இல்லாமல் வாழும் ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும்.<br>இந்த நிகழ்ச்சித் திட்டம் இளம்பருவத்தினரின் தனிப்பட்ட மாற்றத்தை ஆதரிப்பதற்கும் சமுதாயம் தழுவிய மாற்றத்தை அடைவதற்குமாக **சமுதாய உறுப்பினர்களை** ஈடுபடுத்தியது. | GREAT நான்கு நடவடிக்கைகளை உருவாக்கி பரிசோதித்தது<br>• சமூக செயற்பாட்டுச் சுழற்சி (CAC) சமூகத் தலைவர்களை (குலத் தலைவர்கள், மதத் தலைவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத் தலைவர்கள்) கூட்டு உரையாடல் மற்றும் செயற்பாட்டு செயன்முறையில் ஈடுபடுத்துகிறது.<br>• ஒரு வானொலி நாடக தொடர், Oteka+ நேருக்கு நேரான கலந்துரையாடல்கள்<br>• கிராம சுகாதாரக் குழு (VHT) சேவை இணைப்புகள்<br>• GREAT கருவித்தொகுப்பு - குறிப்பாக இளம் பருவத்தினருக்கு அவர்களின் சொந்த பால்நிலை விழுமியங்கள் மற்றும் SRH பற்றி கலந்துரையாடவும் பிரதிபலிக்கவும் உருவாக்கப்பட்ட பங்கேற்பு மற்றும் இடைத்தொடர்பு அணுகுமுறைகள். | 5 வருடங்கள் | **மதிப்பீட்டு வகை:** கலப்பு முறைகளிலான பகுதியளவான கட்டுப்பாட்டு சோதனை<br>**தாக்கம்:** இளம் பருவத்தினர் பின்வருமாறு அறிக்கையிடுகின்றனர்:<br>• குடும்ப கட்டுப்பாடு தொடர்பாக மேம்படுத்தப்பட்ட மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகள்.<br>• சுகாதார சேவைகளை தேடுவதற்கான விருப்பம் மற்றும் VHT சேவைகளை தேடுவதற்கான சௌகரியம் அதிகரித்தது.<br>• மேம்படுத்தப்பட்ட பங்குதாரர் தொடர்பாடல் மற்றும் பகிரப்பட்ட தீர்மானமெடுத்தல்.<br>• ஆண்களின் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஏற்றுக்கொள்ளின் குறைவு.<br>• புதிதாக திருமணமானவர்/ பெற்றோரான இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் அவர்களுடைய பங்குதாரர் கோபமாக இருக்கும்போது அவர்களும் வன்முறையில் எதிர்வினையாற்றுவதாக அறிக்கையிடும் விகிதத்தில் குறைவு. |

# வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்துகை சரிபார்ப்பு பட்டியல்

தீங்கை சமாளிப்பதற்கும் மற்றும்/அல்லது நேர்மறையான மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களை மேம்படுத்துவதற்குமான **வினைத்திறனான அணுகுமுறைகளின் பொதுவான கூறுகள் மற்றும் கொள்கைகள்:**[13]

## நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு மற்றும் இசைவாக்கம்

1. **எந்த ஒரு சூழலிலும் VAW இயக்கும் குறிப்பிட்ட விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகளை அடையாளம் காண்பதற்கு உயர்தரமான உருவாக்கத்திற்கான சூழல் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சியை மேற்கொள்ளல்.** வெற்றிகரமான நடவடிக்கைகள் VAW இன் மூல காரணத்திற்கான பால்நிலை அதிகார பகுப்பாய்வை மேற்கொள்கின்றன, அவர்கள் ஊக்குவிக்க அல்லது மாற்ற விரும்பும் நடத்தை தொடர்பில் விசேடமானதாகவும், உள்ளூர் சூழலில் இந்த நடத்தைகளில் செல்வாக்கு செலுத்தும் விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகள் மற்றும் இந்த விழுமியங்களை நடைமுறையில் வைத்திருக்கும் சமூக வெகுமதிகள் மற்றும் தடைகள் தொடர்பில் சிறந்த புரிதலை கொண்டதாகவும் இருக்கும். சமூக விழுமியங்களையும், அவை குறிப்பிட்ட சூழல்களில் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைக் கண்டறியவதற்காக பயன்படுகின்ற பல முயற்சித்து பரிசோதிக்கப்பட்ட பண்பறிரீதியான அணுகுமுறைகள் தற்போது காணப்படுகின்றன. வெவ்வேறு சூழ்நிலைகளின் கீழ் ஒரு நடத்தை வழக்கமானதாகவும் பொருத்தமானதாகவும் கருதப்படுகிறதா என்பதை ஆராய்வதற்காக குழு அமைப்பில் திறந்த வினாக்களைப் பயன்படுத்துவதும், குறிப்பிட்ட விழுமியங்களைச் சுற்றியுள்ள பரிமாணங்கள் தொடர்பான புரிதலை ஆழமாக்க, கட்டமைக்கப்பட்ட வினாக்களுடன் அனுமான விடயங்களை (vignettes) பயன்படுத்துவதும் இதில் அடங்கும்.[14] ஏற்கனவேயுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை பின்பற்றும் போது, அடிப்படைக் கொள்கைகளுக்கு நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தோற்றுவிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கும் பிற இடங்களில் உள்ள இசைவாக்க அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்வதற்கும் வலுவாக பரிந்துரைக்கப்படுகிறது.[15]

2. **நடவடிக்கைக்காக வலுவான நிறுவன ஒத்துழைப்பை உறுதிப்படுத்தல்.** அனைத்து வகையான நிறுவனங்களும் சமுதாய மட்டத்தில் பால்நிலையை உருமாற்றும் மற்றும் சமூக விழுமிய நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடுவதற்கு மிகவும் பொருத்தமானவை அல்ல. பண்புகளை நடைமுறைபடுத்துகின்ற நிறுவனங்களால் வெற்றிகரமான நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன, அவை தங்கள் தலைவர்கள் உள்ளிட்ட, தங்கள் சொந்த ஊழியர்களுக்கு ஆதரவளிக்கவும், வன்முறை, பாகுபாடு, அதிகாரம் மற்றும் உறவுகளை தங்கள் சொந்த வாழ்க்கையிலும் நிறுவனத்திலும் பிரதிபலிக்கவும் நேரம் ஒதுக்க தயாராக உள்ளன.[16]

3. **சூழல் சார்ந்த நேர்மறையான விழுமியங்கள் மற்றும் நடத்தைகளை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துங்கள்.** தீங்கு விளைவிக்கும் விழுமியங்கள் மற்றும் நடத்தைகளை அதாவது 'பிரச்சினையை' முன்னிலைப்படுத்தி இந்த நடத்தை இயல்பானது என்பதை கவனக்குறைவாகத் வெளிப்படுத்துவதிலும் பார்க்க நேர்மறையான புதிய விழுமியங்கள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளை அதாவது "எது பொருத்தமானது" என்பதை பல்வேறு தளங்களினூடாக மேம்படுத்துவது காலப்போக்கில் பொதுவாக மிகவும் வினைத்திறனானதாக இருக்கும்.[17] உதாரணமாக, "வீட்டு அபிவிருத்திக்காக ஒன்றாக வேலை செய்தல்" அல்லது "தந்தையாக ஆண்களின் பங்கு" போன்ற ஆர்வமுள்ள செய்திகள் இலக்குவைக்கப்பட்ட மக்களிடம் எதிரொலிக்கலாம் என்பதுடன் சாத்தியமான பின்னடைவுகளையும் தவிர்க்க உதவலாம்.[18] இருப்பினும், கடினமானதாகவும் மாற்றுவதற்கு அதிக நேரம் தேவைப்படுவதுமான குடும்பத்தில் உள்ள ஆழமான சமத்துவமற்ற நம்பிக்கைகள் மற்றும் அதிகார பரிமாணம் ஆகியவற்றைப் புறக்கணிக்காமல் இருப்பது முக்கியமானதாகும்.

4. **தனிநபர்கள் மற்றும் சிறிய இலக்குக் குழுக்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக பரந்த சமூக மாற்றத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கவும்.** சமூக விழுமியங்களை மாற்றுவதற்கான முயற்சிகள் வேறுபடுகின்றன. பெரும்பாலும் சிறிய குழு பிரதிபலிப்பு அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்கள் (உதா. REAL மற்றும் GREAT) சமூகம் முழுவதும் பிரதிபலிப்பைத் தூண்டுவதற்கு ஊடகங்களையும் (வானொலி நாடகம், சமூக விளம்பர பலகைகள்) பயன்படுத்துகின்றன. சமூக அணிதிரட்டல் அணுகுமுறைகள் ஏனைய பல மூலோபாயங்களிலிருந்து வேறுபடுகின்றன, ஏனெனில் அவை தனிநபர் மற்றும் குழு மட்டத்தை விட குடித்தொகை மட்டத்தில் மாற்றம் செலுத்துவதற்கு முயல்கின்றன. திருப்பு புள்ளியை அல்லது குறிப்பிட்டளவிலான மாற்றத்திற்கான தனிநபர்களின் ஆதரவினை அடைவதற்கு, நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்முறை அல்லது மூலோபாயத்தின் மூலம் சமூகம் அல்லது நிறுவனத்தின் உயர் விகிதத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக, பொது அமைப்புகளில் நேர்மறையான நடத்தைகளை முன்மாதிரியாகக் கொள்வதற்காக செல்வாக்கு மிக்க சமூக உறுப்பினர்களுடன் பணியாற்றுதல் மற்றும் முக்கிய செய்திகளைப் பெரிதாக்குவதற்கும், நேருக்கு நேரான தொடர்புகளின் தாக்கத்தை மேம்படுத்துவதற்கும் தொடர்பாடல் மூலோபாயங்களை இணைத்தல்.[19]

5. **தனித்தனியாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்க்கவும்.** இன்றுவரை VAW ஐச் சமாளிப்பதற்கான பொதுவான அணுகுமுறைகளில் ஒன்றாக இவை இருந்தபோதிலும், சான்றுகள் அவை போதுமான அளவு செறிவானவையல்ல, விமர்சன சிந்தனையைத் தூண்டுவதை விட செய்தி அல்லது தகவல் கொடுப்பதில் அதிக நம்பிக்கை கொண்டவை அல்லது ஆழமாக வேரூன்றியிருக்கும் விழுமியங்களை மாற்றுவதற்கு அல்லது VAW இனை சுயமாக குறைப்பதற்கு போதுமான கோட்பாட்டினால் உந்தப்பட்டவை அல்ல என்பதைக் காட்டுகிறது.

## அமுல்படுத்தல் மற்றும் தாக்கத்தை அதிகரித்தல்

6. **சமுதாய தன்னார்வத் தொண்டர்கள் அல்லது உதவியாளர்கள் உட்பட அனைத்து நிகழ்ச்சித் திட்ட ஊழியர்களையும் கவனமாகத் தேர்ந்தெடுத்து, பயிற்சியளித்து, மேற்பார்வையிடவும்.** வெற்றிகரமான அணுகுமுறைகள் சமூகத்தினுள் வேரூன்றியுள்ள சமுதாய தன்னார்வலர்கள் அல்லது ஆர்வலர்களின் ஈடுபாட்டைச் சார்ந்துள்ளது, அவர்கள் நடவடிக்கையின் ஆரம்பத்தில் நிகழ்ச்சித் திட்டம் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ள VAW தொடர்பான அதே விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகளைப் பகிர்ந்துகொள்வார்கள். பால்நிலை, அதிகாரம் மற்றும் VAW பற்றிய கலந்துரையாடல்களில் செல்வாக்கு செலுத்துவதற்கு இந்த நபர்கள் பால்நிலைக்கு பதிலளிக்கும் நடத்தைகளை மாதிரியாக்கவும், திறமையாக கலந்துரையாடல்களை வசதிப்படுத்தவும், VAW ஐத் தடுக்க சமூகங்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்குவிக்கவும் சமூகம் அல்லது நிறுவனத்திற்குள் நம்பகத்தன்மையைக் கொண்டிருப்பதுடன், போதுமான உந்துதல் பெற்றவர்களாகவும் போதுமான பயிற்சி பெற்றவர்களாகவும் நிகழ்ச்சித் திட்டம் முழுவதும்[20] ஆதரிக்கப்படுபவர்களாகவும் இருக்க வேண்டும்.[21] மாற்றம் பிரதிபலிப்பிற்கான நேரத்திற்குள்ளாகவே ஆரம்பிப்பதுடன், பயிற்சிகள் முதலில் நிகழ்ச்சித் திட்ட ஊழியர்களிடையே அவசியமாகும்.[22]


7. **பெண்கள் மற்றும் ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகள் மற்றும் பெண்பிள்ளைகள் ஆகியோரை ஈடுபடுத்துங்கள்.**[23] VAW ஐச் சுற்றியுள்ள சமூக விழுமியங்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்பிள்ளைகள் மற்றும் பெண்பிள்ளைகளால் கடைபிடிக்கப்படுகின்றன, எனவே நடவடிக்கைகளில் இருபாலினரையும் ஈடுபடுத்துவது மிகவும் முக்கியமானது.[24] இருப்பினும், பங்கேற்பாளர்கள் பேசுவதற்கும் யோசனைகளை ஆராய்வதற்கும் வசதியாக உணர உதவுவதற்கு ஒரே பாலினக் குழுக்களுடன் சில தனித்தனியான அமர்வுகள் மற்றும் உரையாடல்களை நடத்துவதிலிருந்து இந்த முயற்சிகளால் பெரும்பாலும் பயனடைய முடியும்.

8. **மேலிருந்து கீழாக மாற்றத்தை அமுலாக்க வேண்டாம்.** அணுகுமுறைகள் மக்கள் தலைமையில் இருக்க வேண்டியதுடன் தடுப்பு முயற்சிகளில் பல்வேறு பங்குதாரர்களை (சமூக உறுப்பினர்கள், மத மற்றும் பாரம்பரிய தலைவர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்கள்) ஈடுபடுத்த வேண்டும், மற்றும் பல்வேறு பாதைகள் மற்றும் வெளிப்பாடுகள் மூலம் செய்திகளை வலுப்படுத்த வேண்டும். பின்னடைவு போன்ற எதிர்பாராத எதிர்மறையான விளைவுகளை கவனமாக திட்டமிடுவதும், கண்காணிப்பதும் மற்றும் குறைப்பதும் முக்கியமானதாகும்.[25]

9. **அர்த்தமுள்ள தனிப்பட்ட ஈடுபாட்டின் மூலம் நீடித்த, முக்கியமான பிரதிபலிப்புக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்கவும்.** வெற்றிகரமான அணுகுமுறைகள், ஒருதடவையிலான பயிற்சிகள் மற்றும் நிகழ்வுகளுக்கு அப்பால் சென்று, மாற்றத்தின் செயன்முறையை எளிதாக்குகிறது, அவர்களின் யோசனைகள் மற்றும் அனுமானங்களை ஆராய்ந்து சவால் செய்யவும், பாதுகாப்பான இடங்களில் கட்டமைக்கப்பட்ட பங்கேற்பு அணுகுமுறைகள் மூலம் மாறான நேர்மறையான நடத்தைகளை நடைமுறைப்படுத்தவும் மக்களை ஊக்குவிக்கின்றன. இந்த அணுகுமுறைக்கு சமூக-கலாச்சார அமைப்பிற்கு பொருத்தமான மற்றும் உள்ளூர் சொற்பதங்கள், படங்கள், பிரதிநிதித்துவங்கள் மற்றும் கருத்துகளுடன் ஈடுபடும் கவனமாக வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் தேவைப்படுகிறது.

10. **போதுமான கால அளவு மற்றும் செறிவு (3-5 ஆண்டுகள்).** ஆழமாக ஊன்றியுள்ள சமூக விழுமியங்களை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட அணுகுமுறைகளுக்கு சிக்கலான சமூக மாற்ற செயன்முறைகள் தேவைப்படுவதுடன், அவற்றை "மேலோட்டமான" நடவடிக்கைகள் மற்றும் குறுகிய கால இடைவெளிகள் மூலம் அடைய முடியாது. ஆழமாக வேரூன்றிய சமூக விழுமியங்களை மாற்றுவதற்கு பல ஆண்டுகள் ஆவதுடன் வடிவமைப்பு மற்றும் இசைவாக்கத்துக்கு போதுமான நேரம் உட்பட பல் கூற்று நடவடிக்கைகள் தேவையாகும்.

11. **VAW இல் இருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கான சமூக அடிப்படையிலான கவனிப்பு மற்றும் ஆதரவை வலுப்படுத்துதல்.** உதாரணமாக, சமுதாயத் தொண்டர்கள் தப்பிப் பிழைத்தவர்களுக்கு உடல் மற்றும் உள ஆரோக்கியம், பாதுகாப்பு, சமூக நலன் மற்றும் சட்ட சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், அத்துடன் பெண்களுக்கு பொருத்தமானவிடத்து நீதியை அணுக உதவுவதற்கும் சமுதாய உறுப்பினர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் மற்றும் பிற அரச சார்பற்ற சேவை வழங்குநர்களுக்கு இடையே ஒரு முக்கியமான இணைப்பாகச் செயற்பட முடியும். (மேலும் தகவலுக்கு **சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டது RESPECT மூலோபாய சுருக்கத்தைப்** பார்க்கவும்)



## நுழைவுப்புள்ளிகள்

தீங்கு விளைவிக்கும் விழுமியங்கள், மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளை மாற்றுவதற்கான அணுகுமுறைகள் தாக்கத்தை அதிகரிப்பதற்காக பல அமைப்புகள் மற்றும் துறைகளில் ஒருங்கிணைக்கப்படலாம். நிகழ்ச்சித்திட்ட உதாரணங்கள் உள்ளடங்கலாக தீங்கு விளைவிக்கும் விழுமியங்கள், மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளை மாற்றும் பணிக்கான சில முக்கியமான சாத்தியமான நுழைவு புள்ளிகளை பின்வரும் அட்டவணை சுட்டிக்காட்டுகிறது.

| நுழைவு புள்ளி | விளக்கம் |
|---|---|
| **ஏற்கனவேயுள்ள சமுதாய கூட்டங்கள் மற்றும் கட்டமைப்புகள்** | சமூகத்தில் உள்ள பெண் உரிமை அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதும், பணிபுரிவதற்கு நம்பகரமான நபர்கள் மற்றும் குழுக்களை அடையாளம் காண்பதில் உங்களுக்கு ஆதரவை வழங்குவதற்கு உள்ளூர் சமூகத் தலைமையின் ஒத்துழைப்பை பெறுவதும் முக்கியமானதாகும். தனிநபர் குழுக்களுடனான செறிவான பணி மற்றும் பயிற்சியை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டங்கள் நுண்நிதி திட்ட கூட்டங்கள், விளையாட்டுக் கழகங்கள், பெற்றோர் சந்திப்புகள் அல்லது மதக் கூட்டங்கள் போன்ற ஆண்கள் மற்றும்/அல்லது பெண்கள், ஆண்பிள்ளைகள் மற்றும் பெண்பிள்ளைகள் சந்திக்கும் ஏற்கனவேயுள்ள தளங்களின் மீது கட்டியெழுப்பப்பட முடியும். இது பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டின் அதிக விகிதங்களை ஊக்குவிக்க உதவுவது மட்டுமல்லாமல், பெண்களை வலுவூட்டுதல் போன்ற இடைநிலை விளைவுகளின் மீதான தாக்கத்தையும் மேம்படுத்துகிறது.[26]<br><br>உதாரணமாக, தம்பதிகளின் ஆலோசனையை சமூகச் செயற்பாட்டுடன் இணைத்த Indashyikirwa நிகழ்ச்சித் திட்டம், பெற்றோருக்கான மாலை மன்றங்கள் மற்றும் கிராம சேமிப்புகள் மற்றும் கடன் உதவிக் (VSLA) கூட்டங்கள் உள்ளிட்ட சமூகங்களுடன் ஈடுபடுவதற்கு வசதியாக ருவாண்டாவில் ஏற்கனவே உள்ள முறைசார் குழுக்களை மூலதனமாக்கியது.[27] |
| **பாடசாலைகள் மற்றும் கல்வி வசதிகள்** | பாடசாலை அமைப்புகளுக்குள் தனிநபர்களின் மனப்பான்மைகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களை மேம்படுத்துவதற்காக அணுகுமுறைகளை ஒருங்கிணைத்தல் (கலைத்திட்டங்கள் உட்பட முழுமையான பாடசாலை அணுகுமுறைகள் மூலம்) மனப்பான்மை மற்றும் விழுமியங்கள் உருவாகும் செயற்பாட்டிலுள்ளதால், எனவே மாற்றத்திற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ள ஒரு முக்கியமான வயதில் அதிக எண்ணிக்கையிலான சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை சென்றடையும் சாத்தியம் கொண்டது. இந்த முயற்சிகள் இளைஞர்களிடையே பால்நிலை விழுமியங்கள், Dating வன்முறை மற்றும் பாலியல் துஸ்பிரயோகம் ஆகியவற்றை நிவர்த்தி செய்கின்றன.<br><br>உதாரணமாக, இந்தியாவில், உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடையே (வயது 12-14) பால்நிலை சமத்துவ விழுமியங்களை வளர்க்கும் பாடசாலைகளில் Gender Equity Movement in Schools (GEMS) எனப்படும் பாடசாலை அடிப்படையிலான அணுகுமுறையின் முக்கிய அம்சங்கள் மகாராஸ்ரா அரசாங்கத்தால் கிட்டத்தட்ட 25,000 பாடசாலைகளின் பாடசாலை கலைத்திட்ட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்டது.[28] |
| **பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரம் மற்றும் HIV க்கான வழிகாட்டல் ஆலோசனை, பரிசோதனை மற்றும் சிகிச்சை உள்ளிட்ட சுகாதார சேவைகள்** | சமூக விழுமியங்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடுவதற்கு சுகாதாரத் துறை ஒரு முக்கியமான நுழைவுப் புள்ளியை வழங்க முடியும். காத்திருப்பு அறைகள், பரீட்சை அறைகள் மற்றும் ஆலோசனை இடங்கள் ஆகியவற்றில் கிடைக்கும் கல்விப் பொருட்கள் மற்றும் வளங்களுடன் முக்கிய செய்திகளை ஒருங்கிணைத்து, பெண் மற்றும் ஆண் வாடிக்கையாளர்கள்/நோயாளிகளுக்கு தனித்தனியாக வழங்கலாம்.<br><br>குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனை மற்றும் HIV ஆலோசனை மற்றும் பரிசோதனை போன்ற சுகாதாரச் சேவைகள் முதன்மைத் தடுப்பில் பிரதான பங்காற்ற முடியும். உதாரணமாக, தான்சானியாவில் சிறுவர்களுடனான Stepping Stones நிகழ்ச்சித் திட்டம், HIVஇனால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் (5-14 வயது) மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்களுடன் பயிலரங்குகளை நடாத்தியதுடன், அங்கு அவர்கள் HIV, பாலியல் ஆரோக்கியம் மற்றும் அவர்களின் பின்னடைவை மேம்படுத்துவதற்கான திறன்களைப் பற்றி அறிந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சித் திட்டம் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்ததுடன் பிற விளைவுகளில் கட்டுப்பாட்டுக்குழுவுடன் ஒப்பிடும்போது, HIVஉடன் வாழும் குழந்தைகளின் CD4 எண்ணிக்கை மற்றும் உடல் எடையை அதிகரித்தது.[29] |

# பிரதானமான வளங்கள்

## விழுமியக் கோட்பாட்டைப் புரிந்துகொள்ளல்

Violence prevention: the evidence. Changing cultural and social norms that support violence. Geneva: World Health Organisation; 2009.
பரப்புரையாளர்கள், நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பாளர்கள் மற்றும் அமுலாக்குபவர்களுக்கு வன்முறை மீதான விழுமியங்களின் தாக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்த தற்போதைய அறிவை விவரிக்கிறது.

Shifting social norms to tackle VAWG: A DFID Guidance Note. London: DFID 2016
இந்த வழிகாட்டுதல் குறிப்பு, VAWG ஐத் தடுப்பதற்கு நிகழ்ச்சித் திட்ட சூழலில் தீங்கு விளைவிக்கும் சமூக விழுமியங்களை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பதற்கான சான்றுகள், தொடர்புடைய உதாரணங்கள் மற்றும் நடைமுறை வழிகாட்டுதலுடன் ஆலோசகர்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர்களை ஆதரிப்பதை நோக்காக கொண்டுள்ளது.

Addressing Social Norms at the VAW/VAC Intersection. London: London School of Hygiene & Tropical Medicine; 2019
சமூக விழுமியங்கள் மற்றும் பால்நிலை தொடர்பான தீங்கு விளைவிக்கும் நடைமுறைகள் பற்றிய கற்றல் குழுவின் இரண்டு நாள் கூட்டத்தின் அடிப்படையில சமூக விழுமியங்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை (VAC) ஆகியவற்றுக்கு இடையேயான மேற்பொருந்துகை மீதான ஒரு சிறிய சுருக்கம்.

Social norms, gender norms and adolescent girls: a brief guide. London: Overseas Development Institute; 2015.
இளம்பெண்களை பாதிக்கும் பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான சமூக விழுமியங்களின் சுருக்கத்தை வழங்குகிறது. எத்தியோப்பியா, நேபாளம், வியட்நாம் மற்றும் உகாண்டாவில் நடைபெற்ற களப்பணியிலிருந்து உருவானதுடன், வறுமை மற்றும் பாகுபாடான பால்நிலை விழுமியங்களுக்கு இடையேயான உறவை கருதுகிறது.

Piecing together the evidence on social norms and VAW. Melbourne, Equality Institute; 2017
சமூக விழுமியங்களின் பங்கை மையமாகக் கொண்டு, VAW இனுடைய இயக்கிகள் மற்றும் பங்களிக்கும் காரணிகள் பற்றிய தற்போதைய சான்றுகள் பற்றிய கண்ணோட்டத்தை வழங்கும் இலகுவாக விளங்கக்கூடிய சிறு புத்தகம்.

## VAW தடுப்புக்கான சமூக விழுமிய அணுகுமுறைகள்

Community-based norms focused interventions: definition and attributes. The Learning Collaborative to Advance Normative Change; 2018
இந்த சுருக்கம் பால்நிலை தொடர்பான விழுமியங்களை மாற்றுவதற்கான வினைத்திறனான சமூக அடிப்படையிலான அணுகுமுறைகளின் முக்கிய பண்புகளை எடுத்துக்காட்டுகிறது. இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களின் இனவிருத்தி ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## விழுமியங்களை மதிப்பிடுவதற்கான ஆராய்ச்சி முறைகள்

Measuring gender-related social norms, Learning Report 1. London: Learning Group on Social Norms and Gender-related Harmful Practices of the London School of Hygiene & Tropical Medicine; Cislaghi B, Heise L. 2017
பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தீர்ப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களின் அனுபவத்துடன் விழுமியங்களை அளவிடுவதற்கான நுட்பங்களை விவரிக்கிறது.

Applying theory to practice: CARE's journey piloting social norms measures for gender programming. Cooperative for Assistance and Relief Everywhere, Inc (CARE); 2017
CARE இனுடைய அபிவிருத்தி நடைமுறையில் சமூக விழுமியக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதற்காக CARE இன் பணியில் கவனம் செலுத்துகிறது.

## விழுமிய நடவடிக்கைகளின் தாக்கத்தை அதிகரித்தல்

On the CUSP: the politics and prospects of scaling social norms change programming. Goldman, L., Lundgren, R., Gillespie, D., Bajenja, E., Muyhango, L. and Michau, L., Sexual and Reproductive Health Matters; 2019
VAW ஐத் தடுப்பதற்கும், பாலியல் மற்றும் இனவிருத்தி ஆரோக்கியம் மற்றும் உரிமைகளை (SRHR) மேம்படுத்துவதற்கும், சமூக விழுமியங்களை மாற்றும் முயற்சிகளில் உள்ள படிப்பினைகள் மற்றும் தாக்கங்களைச் சுருக்கமாகக் கூறும் தாக்க அதிகரிப்பை புரிந்துகொள்ளும் சமுதாயம் (CUSP) என்பதிலிருந்தான ஆக்கம். விழுமியங்களின் தாக்கத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக சம்பவ ஆய்வுகள், விடயங்கள் மற்றும் சான்றுகளுக்கு CUSP ஐயும் பார்க்கவும்

Guidance Note on Scaling Up Social Norm Change. K4D Emerging Issues Report. Brighton, UK: Institute of Development Studies. 2019
ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான சிக்கலான சமூக மாற்றத்திற்கான உள்ளடங்கலான அணுகுமுறைகளின் தாக்க அதிகரிப்பை DFID எவ்வாறு ஆதரிக்க முடியும் என்பதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது. இது நான்கு துணை சுருக்கங்களை உள்ளடக்கியது: எண்ணக்கருக்கள் மற்றும் வளங்கள், தாக்க அதிகரிப்பு வகைகள், வளங்கள் மற்றும் பணத்திற்கான மதிப்பு மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு.

USAID. Scaling-up interventions to prevent and respond to gender-based violence: an analytical report. Washington DC: USAID; 2015
தாக்கத்தை அதிகரிக்கும் GBV நிகழ்ச்சித் திட்டங்களின் அனுபவத்தை மற்றும் INSPIRE நிகழ்ச்சித் திட்டங்கள், Yaari Dosti, IMAGE, Stepping Stones மற்றும் Soul City ஆகியவற்றின் சம்பவ ஆய்வுகளின் அம்சங்களை விவரிக்கிறது.

# இறுதிக் குறிப்புகள்

[1] சான்று மதிப்பீடுகள் பெரும்பாலும் எழுந்தமானமான, தொகுதிகளுடனான எழுந்தமானமான மற்றும் கட்டுப்பாட்டுப் பரிசோதனை முறைகள் உள்ளிட்ட சோதனை வடிவமைப்புகளைப் பயன்படுத்தும் ஒன்றிற்கு மேற்பட்ட நடவடிக்கைகளின் முறைசார் மதிப்பீடுகளில் இருந்து பெறப்படுகின்றன. நீதித்துறை நடவடிக்கைகள் போன்ற சில மூலோபாயங்களுக்கு, பொதுவாக குறைந்த தரமுடையவை எனக் கருதப்பட்டாலும், நேரத் தொடர், அவதானிப்பு மற்றும் குறுக்குவெட்டு வடிவமைப்புகள் உள்ளிட்ட மாற்றீடான மதிப்பீட்டு முறைமைகள் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வளர்ந்து வரும் துறையாகும், எனவே, ஆய்வு வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டில் வலுவாக பெரிய அளவில் மாறுபாடுகள் உள்ளன. இந்த மீளாய்வுகள் மற்றும் ஆய்வுகளுக்கான ஆதாரங்கள் குறிப்புகளின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ளன.

[2] Kerr-Wilson, Gibbs, Fraser et al., (2020) What Works Evidence Review

[3] Jewkes, R., Willan, S., Heise, L., Washington, L., Shai, N., Kerr-Wilson, A, Christofides, N. (2020) Effective design and implementation elements in interventions to prevent violence against women and girls. What Works To Prevent VAWG? Global Programme Synthesis Product Series. Pretoria: South African Medical Research Council.

[4] Fulu, E. Kerr-Wilson, A. and Lang, J. (2014). What works to prevent violence against women and girls? Evidence Review of interventions to prevent violence against women and girls.

[5] Ibid,; Jewkes, Flood and Lang (2014) From work with men and boys to changes of social norms and reduction of inequities in gender relations: a conceptual shift in prevention of violence against women and girls. Bangkok: UNDP, Bangkok

[6] Ellsberg et al, (2015) Prevention of violence against women and girls: what does the evidence say? Lancet, 18;385(9977):1555-66

[7] Kerr-Wilson et al (2020) Ibid.

[8] Ellsberg et al (2015) Ibid.; Jewkes, R., Willan, S., Heise, L., et al. (2020). Effective design and implementation elements in interventions to prevent violence against women and girls. What Works to Prevent VAWG? Global Programme Synthesis Product Series. South African Medical Research Council, Pretoria.

[9] அசல் SASA! செயற்பாட்டாளருக்கான கருவித்தொகுதி ஆராய்ச்சி மற்றும் நடைமுறை அடிப்படையிலான அறிவின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது. SASA Together! சமூகத்தின் அனைத்து அடுக்குகளையும் (உள்ளூர் செயற்பாடு, சமூகத் தலைவர்கள், நிறுவனங்களை வலுப்படுத்துதல்) அடையும் புதிய மூலோபாயங்களை உள்ளடக்கியதுடன் பிப்ரவரி 2020 இல் தொடங்கப்பட்டது www.raisingvoices.org/sasatogether.

[10] Abramsky, T., Devries, K., Kiss, L. et al.(2014) Findings from the SASA! Study: a cluster randomized controlled trial to assess the impact of a community mobilization intervention to prevent violence against women and reduce HIV risk in Kampala, Uganda. BMC Med 12, 122 (2014).

[11] Adolphina A. Addo-Lartey, Deda Ogum Alangea, Yandisa Sikweyiya, Esnat D. Chirwa, Dorcas Coker-Appiah, Rachel Jewkes & Richard M. K. Adanu (2019) Rural response system to prevent violence against women: methodology for a community randomised controlled trial in the central region of Ghana, Global Health Action, 12:1,

[12] The Prevention Collaborative (2019a) Study Summary: Integrating IPV and HIV Prevention: Impacts of the SHARE Intervention in Uganda

[13] Informed by combined experiences of practitioners including the Community for Understanding Scale Up (CUSP)–a group of nine organisations with robust experience in scaling social norms approaches in various contexts.

[14] See for example Cislaghi, B and Heise, L (2017) Measuring social norms. Technical Brief July 2017. STRIVE.

[15] The Community for Understanding Scale-up (CUSP) have produced guidance on how to adapt and scale different initiatives effectively and ethically.

[16] Michau, L. Letiyo, E. Musuya, T. Goldmann, L. (2019) Social norms change at scale: insights from SASA! Community for understanding scale up (CUSP), July 2018.

[17] McLean, Lyndsay, Heise, Lori L and Stern, Erin A (2019) Shifting and transforming gender-inequitable beliefs, behaviours and norms in intimate partnerships: the Indashyikirwa couples programme in Rwanda. Culture, Health and Sexuality. ISSN 1369-1058; Cislaghi, B & Heise, L (2018) Theory and practice of social norms interventions: eight common pitfalls, Globalisation and Health, 8(83).

[18] McLean et al (2019) Ibid.

[19] Heise, L. (2011). What works to prevent partner violence? An evidence overview. London: STRIVE Research Consortium; Alexander-Scott, M., Bell, E. and Holden, J. (2016). Shifting social norms to tackle violence against women and girls. London: VAWG Helpdesk.

[20] Attention also needs to be paid to fund and support trainers to build networks, membership, and standards etc.

[21] Bartel, D (2018) Training and Mentoring Community Facilitators to Lead Critical Reflection Groups for Preventing Violence Against Women. The Prevention Collaborative.

[22] CUSP (2018) Social Norms Change at Scale: CUSP's Collective Insights

[23] As promoted in the original Stepping Stones structure and principles, involving intermittent sessions when the 4 peer groups come together to share and compare and build mutual respect, collaboration, empathy and trust across the genders and generations. See Guidelines for Adapting Stepping Stones and Salamandar Trust (2019) Stepping Stones and Stepping Stones Plus.

[24] Fulu, Kerr-Wilson and Lang (2014) Ibid. ; Jewkes, Flood and Lang (2014) Ibid.

[25] CUSP (2018) Ibid; Cislaghi, B & Heise, L (2018) Ibid.

[26] Alexander-Scott et al (2016) Ibid.

[27] The Prevention Collaborative (2019b) Programme Summary: The Indashykirwa programme, Rwanda.

[28] https://www.icrw.org/research-programs/gender-equity-movement-in-schools-gems/

[29] Holden, S., Gordon-Dseagu, V., Gordon, G., Chiziza, N., Kiwia, P., Magesa, D., Manyama, W. and Welbourn, A. (2018) Building resilience to adverse childhood experiences: An assessment of the effects of the Stepping Stones with Children training programme on Tanzanian children affected by HIV and their caregivers, Health Education Journal. https://doi.org/10.1177/0017896918787217

**© UN Women 2020**

**இந்த ஆவணம் ஐ.நா. பெண்கள் அமைப்பால் உத்தரவளிக்கப்பட்டதுடன் Social Development Direct இனால் உருவாக்கப்பட்டதுமான RESPECT கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் ஒரு பகுதியாகும், அதை இங்கே காணலாம்.**

**Suggested citation:** UN Women and Social Development Direct (2020) Preventing Violence Against Children and Adolescents, RESPECT: Preventing Violence against Women Strategy Summary.